வெளியீடு எண் 352.

# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்

பொருளாராய்ச்சி

முதல் பகுதி

தருமபுர ஆதீனம்

T. 14326



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

வெளியீடு எண். 352.

உ

குருபாதம்

# சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும்

தருமபுர ஆதீனம்

25-ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

அருளாணையின் வண்ணம் வெளியிடப்பெற்றது

1955

உரிமைப் பதிவு

தருமபுர ஆதீனம்

வெளியிடுவோர்

வித்துவான்

ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

தலைவர், தருமபுர ஆதீன மடாலய, தேவாலய
சமயப்பிரசார நிலயம், சென்னை

ஆக்கியோர்

பல்கலைச் செல்வர், வித்துவான்,

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்
M. A., B. L. M. O. L.

தலைமைத் தமிழ்ப் பேராசிரியர், அரசியலார் மாநிலக் கல்லூரி, சென்னை

பதிப்பகம்

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமபுரம்.

உ

சிவமயம்

திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை எம்.ஏ., பி.எல்., எம். ஓ. எல்., அவர்களைத் தமிழ்நாடு நன்கறியும். பன்மொழிப் புலவர்; பல்கலைவல்லார்; புகழ் பெற்ற சொற்பொழிவாளர்; ஏன்? பொருட்பொழிவாளரும் ஆவர்; நல்ல எளிய சீரிய பெரிய எழுத்தாளர்; நூலாசிரியர்; உரையாசிரியர்; போதகாசிரியர்; செந்தண்மை பூண்டொழுகும் அந்தணராய், உயர்பள்ளி, வேதாந்தசபை முதலிய பலவற்றின் சார்பில் கல்வி வளர்க்கும் அறம் புரிந்தவர்; அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பிரிவின் தலைமைப் பேராசிரியராய் விளங்கியவர்; இப்பொழுது சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவராய்த் திகழ்பவர்.

‘ வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகர். ’ திருவருளை மறவாது வாழ்பவர். அம்பிகை உபாசகர். இத் தருமபுர ஆதீனத்தில் “ பல்கலைச்செல்வர் ” என்னும் பட்டம் அருளப்பெற்றுள்ள பாக்கியர்.

அவர்கள் ‘ கலாநிலயம் ’ (வாரப் பத்திரிகை) என்பதில் எழுதியிருந்த தொடர்கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல் வடிவாக வெளியிடப்பெற்றது. இது சேக்கிழார் திருவருட்டிறம் முதலியவற்றையும் திருக்கண்ணப்பர் அன்பின் திறத்தையும் உணர்த்தும் வாயிலாக, தமிழ்ச்செல்வங்களை அறிஞர் உலகிற்கு வாரிவழங்கும் பெரியதொரு கருவூலம். இதன் உண்மை உற்றுணர்வார்க்கு விளங்கும்.

தமிழுலகு செய்த தவப்பயனுய, இவ்வாதீனத்தின் இருபத் தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இதனை வெளி யிட்டுதவத் திருவுள்ளம் கொண்டார்கள். அவர்கள் நீடூழி வாழ்க.

ஆதீனப்புலவர்,

தருமபுர ஆதீனம்,
28—8—’55.

**முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.**

உ

குருபாதம்

# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்

சேக்கிழாரை யாவரும் அறிவர்; திருக் கண்ணப்பரது உருக்கமான அரும்பெருங் கதையும் இத் தமிழ்நாட்டில் எல்லோருக்கும் தெரியும். இது பொழுது கண்ணப்பர் கதை எனத் தமிழ் நாட்டில் பெருவழக்காய்ப் பேரொளியோடு விளங்கிவருவது சேக்கிழார் பாடிய திருக்கதைதான். நக்கீரர் முதலான பெரும் புலவர்களும் கண்ணப்பரைப் பாடிப் புகழ்ந்து அவரது கதையினைப் பல வேறு வகையாக எழுதிவைத்துள்ளனர். அவையெல்லாம் இப்பொழுது மழுங்கிப்போயின. சேக்கிழாரது கதை ஒன்றே உண்மைக் கதை என உலகில் உலவி வருகின்றது. இஃது ஒரு வியப்பு அன்றோ? இஃது எதனுல் ஆயது என்று மக்களாய்ப் பிறந்தார் ஆராய்ந்து அறிய வேண்டாமா? சேக்கிழாரின் சிறப்பியல்பைத் தெரிந்து கொள்வது ஒருபுற மிருக்க, மக்களது மனதைக் கவரும் நூல்களின் தனிப்பெருந் தன்மையையும் இவ்வாராய்ச்சியின் பயனுக அறிந்துகொள்ள முடியும்.

சேக்கிழார் எந்தக்காலத்தில் வாழ்ந்து வந்தார்? கண்ணப்பரது முன் பிறவிதான் என்ன? கண்ணப்பர் வழிபட்ட கடவுள் யார்? பெரிய புராணம் பெயரெச்சத் தொடரா, வேற்றுமைத்தொடரா? என்றெல்லாம் இங்கு ஆராய வேண்டுவதில்லை. பெரிய புராணத்தில் ஒரு சிறிய பாடலும் அறியாது பெரிய புராணத்தைப் பற்றி வேறு ஓர் பெரியபுராணம் எழுதுவது எல்லோருக்கும் எளிதல்ல. நெருப்புக் கோழிபோல நெருப்பையும் கல்லையும் தின்று உயிர் வாழும் ஆராய்ச்சிவாணருக்கே அது கைகூடி வரும். மற்றையோர் கல்லையும் தின்னுர், நெருப்பையும் தின்னுர். பாட்டின் சுவையினை உணர்ந்து இன்புறுவதையே நாடுவர்.

பாட்டைப் படிப்போர் உணர்ந்து துய்க்கும் சுவையோ, நாவினுல் உணரும் சுவையல்ல. மனத்தால் உணரும் சுவையே ஆகும். உள்ளத்தால் உணர்ந்த சுவையானது உள்ளத்தே எழுந்த சுவைதான்.

பாவாணர்கள் பாடுவதெல்லாம் உள்ளத்தின் கதையையே. ஒருவருக்கும் புலனுகாத உள்ளத்தை இங்ஙனம் படமெழுதிப்பலரும் பார்த்து மகிழ்ந்து பெருநிலையடையுமாறு காட்டுவதன்றோ பாவலர்களது பெருமை. இஃதும் ஒரு பெரு வியப்பே. இவ்வியப்பினிடையே இன்றளவும் வாழ்ந்திருந்தும் இவற்றை யறியாது கண்மூடிக் குருடராய் வாழ்வது வியப்பினும் வியப்பு. கண்ணப்பர் கதை எனும் கண் கவர் ஓவியம் எதிரே தோன்றுகின்றது. செந்தமிழ்த் திரு நாட்டிலே பழந்தமிழ்ச் செல்வர்கள் மெய்யுணர்வால் கண்டு ஏற்றிவைத்த மெய்ப்பொருளாராய்ச்சி எனும் மணி விளக்குத் தெய்விகத் திருவொளியோடு திகழ்ந் தொளிர்கின்றது. தாமரைப் பூவிலே தங்கிய தேனை அந்தத் தண்ணீரிலேயே தாவிக் குதிக்கும் தவளை அறியாததுபோல இவ்வுயர்ந்த ஓவியத்தைப் பாராது கண் மூடிக்கிடப்பது அழகோ? சிறிது கண்ணைத்தான் திறந்து பார்ப்போமே?

ஒவ்வொரு கதையிலும் தலைவன் தலைவி முதலானோர் வருகின்றனர். அவர்களது உள்ள நிலையை உலகிற்கு உணர்த்தவே கதை எழுகின்றது. தலைவி தலைவன் போலக் கதைக்கு முதலாகி நிற்பவரை ஆலம்பன விபாவம் என்பர் வடநூலார். தமிழர்கள் உரிப்பொருள் என்று கூறியதில் நிமித்தம் என்பதை நீக்கினுல் நிற்பதுதான் கதைக்கு உயிராகின்றது. உரிப்பொருளாவது என்னை?

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்த மென்றிவை
தேருங்காலைத் திணைக்குரிப் பொருளே" —தொல். 960

என்றூர் தொல்காப்பியனுர். தலைவன் தலைவி முதலியோர் வாழும் இடம் கூடும் பொழுது முதலியவை எல்லாம் கதையின் பொருளை நன்கு விளக்கிப் பக்கத்துணையாகப் பயன்படுகின்றன. உரிப்பொருளாய் எழுந்த எரிதிரியைச் சுடர்க் கொழுந்தாம் எரியத் தூண்டும் தூண்டுகோலே உத்தீபன விபாவமாகும். இது தமிழர் கூறும் முதற்பொருள் கருப்பொருள் என்ற இரண்டில் அடங்கும்.

"முதலெனப் படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பென மொழிப இயல் புணர்ந்தோரே"

என முதற்பொருளையும்,

"தெய்வம் உணவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப" —தொல். 964

எனக்கருப் பொருளையும், தொல்காப்பியனுர் விரித்துக் கூறுகின்றூர். இனித்தலைவன் தலைவி இவர்களது செய்கையே அநுபவம் ஆகும்.

காதலன் காதலி இருவரும் ஒருவரை ஒருவர் கடைக் கண்ணுல் கண்டு முறுவலிப்பதும் வாரியணைத்துக்கொள்வதும் போன்றன இதன் பாற்படும். இவையெல்லாம் தொல்காப்பியனுர் கூறும் "நிமித்தம்" என்பதில் அடங்கும், "புகுமுகம் புரிதல்" என்பது முதலாகவரும் சூத்திரங்களில் இவற்றை விரித்துக் கூறுகிருர் தொல்காப்பியனுர். இனி, அந்தத் தலைவன் தலைவி என்பவர்களது உள்ளத்தேதோன்றும் உள்ளக் கிளர்ச்சியினை வியபிசாரி பாவம் என்பர் வடநூலார். காதல் வாய்ப்பட்டார் வேறு எவ்வகையான இன்பத்தையும் வெறுத்துக் காதல்கொண்டவரையே எண்ணி நிற்பதும், துன்பம் கொண்டு புலம்புதலும் முதலானவை அதில் அடங்கும். இவ்வுள்ளக் கிளர்ச்சிகளைத் தொல்காப்பியனுர் "இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்" என்பது முதலாகவரும் சூத்திரமே தொடங்கி முறைப்படுத்தி விரித்துரைத்துப் போகின்ருர்.

இனித் தலைவன் முதலானேரது உள்ளத்திலே பிறக்கும் உணர் வினைக் குறிப்பு என்பர். (ஸ்தாயிபாவம்) அது சொல்லால் வெளி வருகிறது, இதுவே அவர்கள் பேசும் பேச்சு. இதனைத் தமிழர் கூற்று என்பர் (வாக்). பேசும் பேச்சிற்கும் எண்ணும் எண்ணத்திற்கும் ஏற்ப அவை வெளிப்பட்டுத் தோன்றுமாறு கையை யாட்டியும், தலையை அசைத்தும் கண்ணினை இமைத்தும் நெற்றியை நெறித்தும் பேசுகின்ருேம். இதனை அங்கபேதம் என்று வடநூலாரும், **Gesture** என்று ஆங்கில நூலாரும், நிலை எனத் தமிழரும் கூறுவர். உள்ளத்திலே ஓர் உணர்ச்சி தோன்றியபோது உடலிலே சில மாறுபாடுகள் தோன்றுகின்றன. அஞ்சினவன் நடு நடுங்கி நிற்கின்ருன் அன்ருே! இதனை வடநூலார் சத்வம் என்பர். தமிழர் இதனையே விறல் என்பர். பாட்டின் பொருளைக் கதையிற் கண்ட கூற்ருலும், நிலையாலும், விறலாலுமே அறிந்துகொள் கின்ருேம். இவற்றைக் கண்டபோதும் கேட்டபோதும் மனமானது ஒரு மாறுதலை அடைகின்றது. காதலனை இழந்த காதலி கண்ணீரும் கம்பலையு மாய்க் கதறி அழுவதைக் கேட்டபோது கல்லானமனமும் கரைந்து உருகுகின்றது. இஃது கண்டோரது மனதில் எழும் குறிப்பு. அதுவே சுவைக்கு நிலைக்களன். அங்கேதான் சுவையை அறிய முடிகின்றது. அவ்வாறு மனம் இளகாமற்போனுல், கதையானது செவிடன்காதில் சங்கு ஊதியதாக முடிகின்றது. **பாவம்** என வடநூலார் வழங்கும் குறிப்பானது சுவை பிறத்தற்குத் துணையாகிக் கதையைக் கண்டதாலோ கேட்டதாலோ தன்னியல்பின் நின்று மாறுபட்ட மனத்தின் வேறுபட்ட நிலையேயாகும். அஃது **ரஸானுகூலவிகாரம்** என்றும் அவர் கூறுவர். ஆடுவாரது நிலையாலும் கூற்ருலும் விறலாலும் நமது மனதிலே கதையின்பொருள் தோன்றுமாறு செய்வதும் இக்குறிப்பேயாகும்.

கூற்றினையும் நிலையினையும் விறலினையும் கண்டு மனம் மாறுவதைப் பற்றிக் கூறினேம். ஆனுல் அவ்வாறு மனம் மாறுவது அக்கூற்றிற்கும்

நிலைக்கும் விறலுக்கும் ஏதேனும் பொருள் இருந்தால் அல்லவா? இம் மூன்றினையும் கண்டோரும் கேட்டோரும் அறிந்துகொள்ளுமாறு உருப் படுத்துவது எது? அதனைத்தான் **விபாவம்** என்றனர் வடநூலார். முதற் பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளுமே விபாவம் என முன்னர்க் கூறினோம். சுவையினைக் கதையிலே தான் துய்க்கின்றோம். தலைவனும் தலைவியும் இல்லாமல் கதை என்பதில்லை. நிலை, கூற்று, விறல் என்பன இவர்களிடத்திலே தோன்றி இவர்களது மனதிலே எழுவனவற்றைக் குறித்து நிற்கின்றன. பொருள் புலனாகவேண்டி நமது பழக்க வழக்கத் தாலும் முயற்சியினாலும் கையையும் கண்ணையும் அசைத்து நிற்கும் நிலையினுக்கும், முயற்சியும் இன்றி நம் முணர்வும் இன்றி உள்ளிருக்கும் உள்ளக் குறிப்பே தன் ஆற்றலால் வெளிப்பட்டுத் தோன்றவேண்டி உடம்பினை அசைத்து நிற்கும் விறலினுக்கும், உள்ளக்கருத்தை வெளியிட எழுந்த பேச்சினுக்கும், தலைவியும் தலைவனும் இல்லாமற்போனால் பொருள் ஒன்றுமே இல்லையாம். வலியால் உடலை ஆட்டிப் பித்தால் அழுதலறிக் கூவிய கதையாய் முடியும். ஆகவே இன்றியமையாமைகருதி உரிப்பொருளை **ஆலம்பன விபாவம்** என்றனர். இடம் காலம் முதலிய முதற்பொருளும் கருப்பொருளும் கதையின் பொருளை விளக்குதற்குத் துணையாகி வருகின்றன. (உத்தீபன விபவம்) தலைவன் தலைவியால்யாம் அறிந்தனவற்றை இக் காலம் இடம் என்பவை வற்புறுத்துகின்றன.

கார்காலத்து மாலைப் பொழுதிலே பச்சைப்பசேர் என விளங்கும் புற் றரையில் சிறுதுளி பெய்கையில் நீர்த்துளி உடம்பினின்றும் சிதறி விழுமாறு உதறிக்கொண்டே மேய்ந்துவரும் மாடுகளும் கன்றுகளும் மெல்ல மணியை ஒலித்துக்கொண்டு வீடு திரும்பக், கோவலர்கள் புல்லாங்குழல் ஊதி அவற்றின் பின்னே பாடிவர, அப்பாட்டிற் கேற்பப் பொன்னெனப் பூத்தகொன்றைமர நிழலில் மயில் ஆட, மேலே குயில் கூவ, முல்லை கமகம என்று நறுமணங் கமழ நன்கு மலர்ந்து வெள்ளைவெளேர் என விளங்க, உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் பெண்ணும் ஆணுமாய்ப் பிரியாதிருந்து மழைக் கஞ்சி வெளிவராது இருந்த இடத்திலே தங்கி இன்பந் துய்க்க, அதனைக் கண்ட காதலனுக்கும் காதலிக்கும் இல்லறம் நடாத்தி இன்பந் துய்க்க வேண்டும் என்று எழுந்த எண்ணம் வலிவடை கின்றது. விபவமே முதல் ஆகும். அதன் விளைவே அனுபவம் என்னும் நிமித்தம். இந்த நிமித்தம்தான் நிலை, கூற்று, விறல் என்று சொல்லிய மூன்றினையும் நாம் நேரே அறிந்து உணருமாறு செய்வது. விபவம் அந்த மூன்றினையும் பித்தர் செயலாக்காது பொருள் உள்ளன வாக்கி மாற்றிவிட அப்பொருளை நாம் தெளிவாக உணருமாறு செய்வது இந்த அனுபவம் எனும் நிமித்தமே. **சஞ்சாரி பாவம்** என்று கூறிய குறிப்புக்கள் பின்னும் அப்பொருளினை வற்புறுத்துகின்றன. முதற்பொருள், கருப் பொருள், உரிப்பொருள், நிமித்தம், குறிப்பு என்பவற்றின் கூட்டத்தாலே

தான் சுவை பிறக்கின்றது. "விபாவானுபவ வ்யபிசாரி சம்யோகாத் ரஸ நிஷ்பத்தி" என்றார் பரதர். இவற்றைக்கண்டு மனமானது மாறுகின்றது. அங்கே சுவை பிறக்கின்றது.

சுவை பிறக்கும் முறையினைச் சிறிது போக்கிச் சொல்வோம். சுவை என்பது யாதென அறிந்தபின் அதன் பிறப்பும் வளர்ப்பும் பின்னர் நன்கு விளங்கும். சுவையும் பல வகையாகும். புலவர்கள் கொண்ட நோக்கத் திற்கேற்பக் கதையின் போக்கும் மாறிமாறிச் செல்கின்றது. ஓவியங்களின் வேறுபாடு மிகுதியும் உருவ வேறுபாடாகவே விளங்குகின்றது. ஆனால் பொருள் தொடர்நிலைச் செய்யுள்களின் வேறுபாடு சுவை வேறுபாட்டினா லேயே உண்டாகின்றது. சுவையால் வேறுபாடு தோன்றாது மற்றெதனால் வேறுபாடு தோன்றப் போகிறது. சுவை யன்றோ தொடர்நிலைச் செய்யு ளுக்கு உயிர் நிலையாவது. பரதர் என்ற பெரியார் பழையதான தமது நாடக சூத்திரத்தில் "நஹி ரஸாத்ரிதே கஸ்சித் அர்த்த ப்ரவர்த்தி" என்று கூறியுள்ளார். சுவையின்றிப் பாட்டின் பொருள் இல்லை என்கின்றார் உத்பவர். "ரஸாதீனம் காவ்யாத்மத்வம்" என்கின்றார். விச்வநாதர் "வாக்யம் ரஸாத்மகம்" என்று திரட்டிச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்துள்ளார். சுவையால் விளங்கும் சொற்றொடரே பாட்டு என அறுதியிட்டுக் கூறினார்.

சுவையின் வடிவும் வகையும் அறிந்தாலன்றி நூலின் சுவையை அறிந்துகொள்வது மிக அருமை. அவைகளின் பிறப்பைத் தெரிந்து கொள்வதும் அருமை. தொல்காப்பியனார் சுவையினை எட்டுவகையாக விரித்துரைப்பார்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பா லெட்டே மெய்ப் பாடென்ப." —தொல். 1197

என்பது தொல்காப்பியத்திலே பொருளதிகாரத்தின் ஒரு பகுதியாகிய மெய்ப் பாட்டியலிலே கண்டது. சுவையினை மெய்ப்பாடென்று ஆராய் கின்றார் ஆசிரியர். மெய்ப்பாடு என்பதற்குப் பொருள் கூறவந்த பேராசிரியர் "மெய்ப்பாடு என்பது பொருட்பாடு; அஃதாவது உலகத்தார் உள்ளநிகழ்ச்சி ஆண்டு (உள்ளத்திலே) நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளிப் படுதல்" என்று எழுதியுள்ளார். நமது மனதிலே வெகுளி தோன்றுமானால் அதனைப் பலவகையாலும் வெளிப் படுத்துவதால் அல்லவா பிறர் நாம் சினம்கொண்டு இருப்பதனை அறிந்து கொள்கின்றனர். உள்ளக்குறிப்பு எவ்வாறு வெளித்தோன்றுகின்ற தென்பதைத் தமிழர் ஆராய்ந்தமை பெரிதும் பாராட்டற்பாலது. சிலப்பதிகாரத்திற்கு உரைகண்ட அடியார்க்கு நல்லார் பழையநூல் ஒன்றினின்றும் பலபாக்களை எடுத்துக் காட்டி உள்ளத்துணர்வு உடல் வழியே வெளிப்பட்டு வருவதனை நன்கு விளக்குகின்றார்.

"வெகுண்டோன் அவிநயம் விளம்புங் காலை
துடித்த புருவமும் சுட்டிய விரலும்
கன்றின உள்ளமொடு கைபுடைத் திடுதலும்
அன்ன நோக்கமோ டாய்ந்தனர் கொளலே"
—சிலப். அரங். மேற்.

என்று வெகுளி வெளிப்படும் முறையினைக் கூத்தாடிக்குப் பயன்படுமாறு கூறுகின்றார். இங்ஙனமே ஐயமுற்றோன் அவிநயம் முதலியனவும் சொல்லிப்போகின்றனர். அம்மட்டுமோ தமிழர் ஆராய்ச்சி சென்றது. கண்ணோய் கொண்டவனும் தலைநோய் கொண்டவனும் மனம் வருந்தி நிற்பதனை எங்ஙனம் வெளியிடுகின்றார்கள் என்பதனையுங்கூடப் பழந் தமிழர்கள் ஆராய்ந்துவந்தனர்.

"கண்ணோவுற்றோன் அவிநயம் காட்டின்
நண்ணிய கண்ணீர்த் துளிவிரற் றெளித்தலும்
வளைந்த புருவத்தொடு வாடிய முகமும்
வெள்ளிடை நோக்கின் விழிதரும் அச்சமும்
தெள்ளிதிற் புலவர் தெளிந்தனர் கொளலே."

"தலைநோ வுற்றோன் அவிநயம் சாற்றின்
நிலைமை இன்றித் தலையாட் டுடைமையும்
கோடிய இருக்கையும் தளர்ந்த வேரொடு
பெருவிரல் இடுக்கிய நுதலும் வருந்தி
ஒடுங்கிய கண்ணொடு பிறவும்
திருந்து மென்ப செந்நெறிப் புலவர்."
—சிலப். அரங். மேற்.

என்றெல்லாம் பழந்தமிழ் நூல்கள் பலவகையால் ஆராய்ந்து கூறிப் போகும். "தெள்ளிதிற் புலவர் தெளிந்தனர்" என்று புகழப் பெற்ற புலவர்களது அறிவின் ஆழத்தை இவை இரண்டு பாக்களும் நன்கு விளக்குகின்றன. மேற் கூறியவாறெல்லாம் மனதிலே யிருக்கும் பொருளானது புலப்பாடாகின்றது. உள்ளத்திலெழுந்த கருத்தினை விளக்கிக்கொண்டு போதலினாலல்லவா பாவாணர்கள் சிறந்தவர்கள் ஆயினர்.

வேப்பம் பழத்தைத் தின்றால் கைப்புச் சுவையும் மாம்பழத்தைத் தின்றால் இனிப்புச் சுவையும் தோன்றுதல்போல ஒரு நூலினை ஓதும் போதும் ஓதக் கேட்கும்போதும் உவகை முதலான உள்ளக் கிளர்ச்சிகள் தோன்றுகின்றன. அவற்றையும் உவமைப் பெயர் கொண்டு **சுவை** என்றே தமிழர் வழங்கிவந்தனர். சுவை தோன்றாதபோது பாட்டு உப்புச் சப்பில்லாததாக இருக்கின்றது. எட்டியானது கைப்புச் சுவையைத்

தருதலால் அதனைக் கைப்புப்பொருள் என்கின்றோம், கரும்பு இனிப்புச் சுவையைத் தருதலால் இனிப்புப் பொருள் என்கிறோம். இவ்வாறு நாவுணரும் சுவைப் பொருள்களைப்போல உள்ள முணரும் சுவைப் பொருள்களும் உள்ளன. பதினறடி வேங்கை அச்சத்தைத் தருதலினுலே அச்சப் பொருளாகும்; குடியன்பேச்சு நகையினை விளைவிப்பதனுல் நகைப் பொருளாகும். கைக்கும் வேம்பினைச் சுவைத்ததும் மனதில் வெறுப்புத் தோன்றுகின்றது. அங்ஙனமே அஞ்சத்தக்க புலி முதலியவற்றைக் கண்ட காலத்திலும் அவற்றைப் பார்க்கவும் இயலாதபடி அஞ்சி அவற்றை வெறுத்து நிற்பதோர் உள்ள நிகழ்ச்சி தோன்றுகின்றது. அவ்வுள்ள நிகழ்ச்சியைப் பண்டைத் தமிழர்கள் குறிப்பென்று வழங்கினர். இனி வேம்பு தின்று அதனை வெறுத்தவனுக்குத் தலை நடுங்குகின்றது. புளியினைத் தின்று அருவருத்தவனுக்குப் பல்கூசுகின்றது. கற்கண்டு தின்று அதனை விரும்பியவருக்கு நாவில் நீர் ஊறுகிறது. அவ்வாறே புலியைக்கண்டு அஞ்சினவனுக்கும் உடல் எல்லாம் நடுநடுங்கிப் போகின்றது. இவ்வாறு உடம்பின்கண் வரும் வேறுபாடுகளையே விறல் என்று வேருக்கித் தமிழர் விளம்புகின்றனர். ஆகவே சுவைப் பொருள் ஒன்று; அதனை நுகர்தற்குக் கருவியாகிய பொறி யுணர்வு இரண்டு. அதனுல் உள்ளத் தெழும் குறிப்பு முன்று; உடம்பில் தோன்றும் மாறுபாடாகிய விறல் நான்கு:- இந்த நான்கினையும் உணரச் சுவையையும் உணர்கின்றோம். சுவையோ பல வகைப்பட்டிருத்தலின் சுவையின் வகையினையும் உணர்ந்தாலன்றி அதனது உண்மை உருவை அறிய இயலாது,

## முதற்சுவைகள்

சுவையின் வகை எட்டெனத் தொல்காப்பியர் கூறியுள்ளதை முன்னரே குறித்துவைத்தோம். அவற்றிலே உவகை, வெகுளி, பெரு மிதம், இளிவரல் என்ற சுவை நான்கினையும் முதற்சுவைகள் என விதந்து கூறித் தமது சுவையாராய்ச்சியினைத் தொடங்குகின்றுர் பரதர்.

### 1, உவகை.

உவகையாவது மகிழ்ச்சி. பலர் பலவகையால் மகிழ்ந்து வாழ்கின் ருர்கள். புலவர்கள் உவகையின் பிறப்பிடம் நான்கென்பர். ஒன்று செல்வம். பெருஞ்செல்வர்கள் பொருளால் வரும் பயனைத் துய்த்து உற்ருரோடும் உறவினரோடும் உவகைக் கடலில் ஒருங்கே மூழ்கி மகிழ்கின்றனர்.

" உனதுதாய் உலகசராசர மெவையு
மொருங்குடன் பூத்தவள் உந்தை
கனபரிபூரண சுகத்தன் நின்தமையன்
காரியமுதல்வன் நின்மாமன்
வனசனுதியர் பணிபதன் இவர்கள்
வளமெலா முனக் குரித்ததனுல்
வினவு செல்வத்துட் செல்வன் நீ
போரூர் வீறிவாழ் ஆறுமா முகனே."–போரூர். சந்நிதி

என்று சிதம்பர சுவாமிகள் உற்றூர் உறவினர் செல்வத்தில் திளைத்து வாழ்தலால் அவர்களைச் சேர்ந்தோர் செல்வத்துட் செல்வராய்ச் சிறந்து வாழ்வதைத் தெளிவுறுத்துகின்றூர். மகிழ்ச்சியின் இரண்டாவது பிறப்பிடம் **கல்வி.** கல்வியும் ஒரு செல்வமே யன்றே? புலவர் பெருமக்கள் கம்பரையும் வள்ளுவரையும் கற்றறிந்து தம்மறிவின் ஆழத்தால் தாம் கற்றநூல்களின் நுண் பொருள்களை நுணுகி ஆராய்ந்து புலவர் கூட் டுண்ணத் தந்துதவித் தாமும் சுவையுணர்ந்து துய்த்துப் பேரின்பக் கடலில் பிரியாது மூழ்கி அகமகிழ்கின்றனர்.

" உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்." —குறள் 394.

என்றூர் அன்றே திருவள்ளுவனுர். மூன்றுவது பிறப்பிடம் காதலனும் காதலியும் கலந்திருக்கும் நிலையேயாகும். இதுவே **புணர்வு** எனப்பெறும். காதலனும் காதலியும் ஒன்றுய்க்கூடி இன்பத்துறையில் புகுந்தாடி உவகை பூத்திருக்கின்றனர்.

" தாம்வீழ்வார் மென்றேள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணுன் உலகு." —குறள் 1103.

" கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணேயுள." —குறள் 1101.

என்பவை திருக்குறள். புணர்ச்சியின் மகிழ்தல் என்பது ஒரு கோவைத் துறை அல்லவா. இனி நான்காவது பிறப்பிடம் **விளையாட்டு.** ஆற்றிலே நீந்திச்சென்றுடுவாரும், வருத்தமின்றி மாலைப் போதிலே பயின்றுரோடு பந்தாடிக் கூடிக் குலாவி வருவாரும், மற்றும் பலவகையான விளையாட்டிற் பொழுது கழிப்பாரும் களித்தே மகிழ்கின்றனர். உண்டாட்டுப் படலத் திலும் பூக்கொய் படலத்திலும் இதனையே புலவர்கள் போற்றிப் புகழ்ந்து கற்றேரைக் களிப்படையச் செய்கின்றனர். திருவிளையாட்டெல்லாம் பெருகி வழியும் இன்பவெள்ளம் பரவி ஓடும் வாய்க்கால்களே யாகும்.

ஆண்டவனுரின் அருந்தொழிலனைத்தும் அளவிலா இன்பத்தால் எழுந்தவை யாதலினுலே "அலகிலா விளையாட்டாயின". அவர் கூத்தும் இன்பக் கூத்தாயிற்று.

" இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெறில், மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று அந்தத் திருக்கூத்தின் இன்பநிலையை எளிதிலுணர்ந்த திருநாவுக்கரையர் திருவாய் மலர்ந்தருளி யதைக் காண்க. இந்த நான்கிடத்திலும் பிறந்த உவகை பிறரும் தன்னேடு மகிழ்வது கண்டே ஓங்கி உயர்ந்து ஒளிர்வது காண்க. பிறரைக் கீழ்ப் படுத்தி இன்புறுவோரது மகிழ்ச்சியை உவகை என்று உயர்த்திப் பேசுவ தில்லை. இதுபற்றியே உவகையினை " அல்லல் நீத்த உவகை" என்ருர் தொல்காப்பியனுர். பின்னும் அப்பெரியார் இந்த நான்கிடமே உவகை யின் பிறப்பிடம் என்று வரையறுத்துக் கூறியுள்ளார்.

" செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே" —தொல். 1205

என்பதும் தொல்காப்பியமே.

## 2. வெகுளி.

வெகுளி என்பது மற்ருேர் சுவை. இவ் வெகுளியும் பலவகையாகப் பிறக்கின்றது. எனினும் புலவர்கள் போற்றிப் புகழும் பிறப்பிடம் நான்கேயாகும்.

"உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்பவந்த வெகுளி நான்கே" —தொல். 1205

என்ருர் தொல்காப்பியனுர். கையை வெட்டி விட்டாலும், வெட்ட வந்தாலும் ஒருவனுக்கு வெகுளி பிறக்கின்றது. மக்களைப்பற்றிச் சொல் வான் ஏன்? விலங்குகளைப் பார்ப்போமே? ஓர் புலி தன்மேல் பாய்ந்து தனது முறம் போன்ற காதினை ஒரே அறையாக அறைந்து பிய்த்துப்போக அதனுல் வெகுண்டெழுந்த யானை அப்புலியினைக் கொன்றதென ஒரு பழந்தமிழ்ப் புலவர் கூறுகின்ருர். இவ்வாறு தன் உறுப்பு அற்றுப் போதலி னுல் அடங்கா தோங்கும் வெகுளியினை எழுப்பி நிற்கும் இடத்தினை **உறுப்பறை** என்று தமிழர் கூறினர். இரண்டாவதாகத் தான் பிறந்த குடிக்குத் தீங்கு செய்தவன் பேரிலும் வெகுளி பொங்கி வழிகின்றது.

“ நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றேள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டமர்க்கு உடைந்தன ணயின் உண்டஎன்
முலையறுத்திடுவன் யான்எனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றுகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே. —புறம்.

எனத் தமிழ்த்தாய் ஒருத்தியைக் குறித்துக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்ற அம்மையார் பாடி இருக்கின்றனர். மறவர்களது பெருங்குடியிற் பிறந்த தனது இளஞ்சிறுவன், புறங்கொடுத்தோடித்தன் பழங்குடிக்கொரு பழி தேடினுன் என்று பலர் புறங்கூற, அதனைக்கேட்ட அவன்தாய் முதியோளாக இருந்தும் அடங்காது எழுந்து முழுதும் முற்றிய சினத்தோடே வெறிக்கொண்டோடினுள். அவர்கள் கூறியதுண்மை யானுல் அத்தகைய கோழைக்குப் பால்கொடுத்துவளர்த்த தன்னைச் சிதைத்துக்கொள்வதாக வஞ்சினம் கூறி வாளும் கையுமாகப் புறப்பட்டாள் என அழகுபட அப்பழந்தமிழ் அம்மையார் பாடியுள்ளார்கள். இவ்வாறு வெகுளி பிறக்கும் இடத்தினைத் தமிழர் **குடிகோள்** என்று கூறி வேறு படுத்தினர். மூன்றுவதாக நம்மைக் கோல்கொண்டு அலைத்துக் கொடுமை செய்தவர் மேலும், நம்மைப் பிடித்தும் அடித்தும் துரத்தியும் வெருட்டுவார்மேலும் வெகுளிபற்றி எரிகின்றது. கோலால் அடிக்கவும் வேண்டுவதில்லை. எடுத்துக் காட்டினுல் போதாதா? கதும் என்று புகைந்து எழுகின்றதே சினம் இதனைத் தமிழ் நூல் வல்லவர்கள் “**அலை**” என்பார்கள்.

சீதை சிறையிருந்த பொழிலினையும் அரக்கர்களையும் அனுமார் அழித்தபோது இந்திரசித்துச் சினங்கொண்டு வருவதை அழகாகப் புனைந்துரைத்துள்ளார் கம்பர்.

“ தேரும் யானையும் புரவியும் அரக்கரும் சிந்திப்
பாரின் வீழ்தலும் தானெரு தனிநின்ற பணைத்தோள்
வீர வீரனும் முறுவலும் வெகுளியும் வீங்க ” —கம்ப.

“வாரும் வாரும் என்றழைக்கின்ற அநுமான்மேல் வந்தான்” என்ற பாடலைக்காண்க. நான்காவது பிறப்பிடம் **கொலை** என்பதாகும். நமது அறிவையோ புகழையோ கொன்றுவிட்டாற்போல இகழ்ந்துரைத்தபோது வரும் வெகுளியினை அடக்கவல்லார் யார்?. “மானம் நீங்கியபின் வாழாமை முன் இனிதே” என்பார் ஆகலின் இகழ்ச்சியைப் பெரியோர் கொலையாகவே எண்ணுவர்.

" மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்." —குறள்.

சேரன் செங்குட்டுவன் வடநாட்டரசர்களை வென்று வந்ததைக்கேட்ட மற்றய தமிழ் அரசர்கள் அவனை இழித்துரைத்தபோது செங்குட்டுவன் செங்கண் சிவந்து சினம் கொண்ட கதையைச் சிலப்பதிகாரம் சொல்லிப் போகின்றது.

" ஏனை மன்னர் இருவரும் கூறிய
நீண்மொழி எல்லாம் நீலன் கூறத்
தாமரைச் செங்கண் தழல் நிறம் கொள்ளக்
கோமகன் நகுதலும் " —சிலப்.

என்று தொடங்கிப் போகின்றது.

கொலை என்பதற்கு இகழப்படல் எனப் பொருள் கொள்ளாது உயிர்க்கொலை என்றே பொருள் கொள்ளின் கொலையுண்டானே சினம் கொண்டு திரிதல் இவ்வுலகில் இல்லை என்க. பேயாய்த்திரிந்து பிறரை வாட்டுவதைப்பற்றி நூல்கள் இங்கே கூறவரவில்லை. அதுபற்றித்தான் பேராசிரியர் 'கொலை' என்பதற்கு மேற்சொன்னவாறு உரை கண்டுள்ளார்.

## 3. பெருமிதம்

**பெருமிதம்** என்பது மூன்றுவது சுவை. எல்லோருக்கும் மேம்பட்டு நிற்கும் நிலையைக் குறித்தலினுலே இதனைத் தமிழ் அறிஞர்கள் பெருமிதம் என வழங்கியது எல்லாவகையாலும் பொருத்தமுடையதே யாகும். பலர்க்கும் மேம்பட்டு நிற்கும் நிலையைப் புறப்பொருளாராய்ச்சி வாணர்கள் **முல்லை** என்றும் **வாகை** என்றும் பலவாறு வேறுபிரித்துப் புகழ்வர். இவ்வாறு ஒப்புயர்வற்றுப் பெரியோனுய் நிற்கின்ற நிலையினைப் பெருங்கல்வி மானிடத்தும், ஒன்றற்கும் அஞ்சாத மறவன் கண்ணும், என்ன வந்தாலும் இகழத்தக்கன செய்யாது ஒழுக்கத்தழகால் உயர்ந்தோன் பாலும், உயிரும் உடலும் கேட்டாலும் இல்லை என்னுது கொடுத்தருளும் பெருவள்ளல்கள் மாட்டும், காண்கின்றேம். இந்த நான்கிடங்களே பெருமிதத்தின் பிறப்பிடம் எனத் தொல்காப்பியனுரும்,

" கல்வி தறுகண் இசைமை கொடை எனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே" —பொ. தொல்.

என்று அறுதியிட்டுக் கூறினர்.

கீழே நெருப்புக் கொழுந்துவிட்டெரிகின்றது. மேலே கொப்பரையில் எண்ணெய் மிகக் காய்ந்து ஆவியாய் பொங்கிக் கொதிக்கின்றது. நடுவே உடலெல்லாம் வாள்களைக் கட்டிக்கொண்டு நிற்கின்றான் காளமேகன். அந்தக் கொட்டகையின் நான்கு மூலையிலும் யானைகள் நிற்கின்றன. தோல்வியுற்றதும் யானைகள் வலித்திழுக்கக் காளமேகன் துண்டு துண்டாக வெட்டுண்டு எண்ணெயில் பொரித்தெடுக்கப்பட்டு நெருப்பில் விழுந்து சாம்பராக வேண்டுவதுதான். அவனைச் சுற்றிலும் அவனைத் தோற்கடித்து யமனுலகனுப்ப முன்வந்து நிற்கும் திருமலை நாயகரது அரண்மனைப்புலவர்களாகிய அதிமதுர கவியே முதலானோர் வஞ்சினம் கூறி மிடுக்குடன் அமர்ந்து எவராலும்பாட முடியாதபடி எல்லாம் சமிக்ஞை கொடுக்கின்றனர். யமகண்டத்தினிடையே எதற்கும் அஞ்சாது எவரையும் பொருட் படுத்தாது அவர்கள் கேட்டபடி எல்லாம் பாடியதோடு நில்லாது அந்தப் பாடல்களிலேயே அவர்களை இகழ்ந்தும் பாடிமுடித்து வெற்றி பெறுகின்றான் காளமேகன். இவனது பெருமிதத்தை நினைக்க மனங்கலங்குகின்றது. இது கல்வியால் வந்த பெருமிதம்.

"வீடுணர்ந் தார்க்கும் வியப்பாமால் இந்நின்ற
வாடல் முதியாள் வயிற்றிடம்—கூடார்
பெரும்படை வெள்ளம் நெரிதரவும் பேரா
இரும்புலி சேர்ந்த இடம்." —புறம்.

என்றதில் கண்ட பெருமிதம் தறுகணுண்மையால் வந்த பெருமிதமாகும். இந்தப்பாடலை "தனிநிலை" என்னும் வஞ்சித்துறைக்கு எடுத்துக் காட்டாக ஐயனாரிதனார் கூறியுள்ளார். "போரினைச் செய்யும் சேனையிடத்து வெள்ளம் தள்ளாதபடி கல்லாற் கட்டின கரையே போலப் பெரும் படையை ஒரு வீரன் தடுத்த நிலையைச் சொல்லியது" என்று புறப் பொருள் வெண்பா மாலைக்கு உரைகண்ட சாமுண்டித்தேவ நாயனார் தனிநிலைக்குப் பொருள் கூறுவர். சொன்ன சொல் தவறாது தனது நாட்டை விச்வாமித்திரருக்குக் கொடுத்துத் தனது பெண்டுபிள்ளையை விற்றும் தன்னை ஓர் வெட்டியானது அடிமையாக்கிக் கொண்டும் அம்முனிவருக்குப் பட்டகடனைத் தீர்த்துப் பிணஞ்சுடுவதற்குப் பிறர்தரும் வாய்க்கரிசி கொண்டு வயிற்றைக் கழுவிவருகையில், தனது மனையாட்டி தனது அரும்பெறல் மகனைக் கட்டையிலேற்றிக் கண்ணீரும் கம்பலையுமாய்க் கதறி நிற்கையில், அரசனது ஏவலாட்கள் அவ்வாறு நிற்பவள்மேல் கொலைக்குற்றஞ் சாட்ட, அதன்மேல் அரசன் இட்ட கட்டளையின்படி அவளைக் கொல்ல, அரிச்சந்திரன் வாளோச்சி நிற்கும் அந்தத் தறுவாயிலும் தளராத மனமுடையனாய் நிற்க, விச்வாமித்திரர் "ஒருபொய் சொன்னால் இடரெலாம் ஒழியும்" என்று எதிர்வந்து கூறியபோதும் நிலைகலங்காத நெறியில் நின்றான்.

"பதிஇழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த
நிதிஇழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்
கதிஇழக்கினும் கட்டுரை இழக்கிலேம் என்றார்
மதிஇழந்துதன் வாயிழந்து அருந்தவன் மறைந்தான்." —அரிச்

என்றமை காண்க. அரிச்சந்திரனது வாய்மைத் தவத்தினையும் ஒழுக்கச் சிறப்பினையும் யாரே புகழ்வார்? விச்வாமித்திரர் முனிவர் பெருமானாய் இருந்தும், இவன் எதிரில் தலைகுனிந்து செல்லாது வேறு என்ன செய்வார்? அவ்வாறு வெற்றியடைந்தான் அரிச்சந்திரன். இஃது இசைமையால் வந்த பெருமிதம். கன்னன் தனது உயிர்நிலையாக இருந்த கவசகுண்டலங்களை இந்திரன் கேட்டதும் கொடுத்துவிட்டான். அன்னையாவாள் முன்னமேயே வந்து பாம்பம்பினை ஒருகாலுக்குமேல் இருகால் விடுதலாகாதென ஒருவரம்கேட்க அவ்வரத்தினையும் இல்லை என்னாது ஈந்து, அதன்படி ஒருமுறைவிட்ட அம்பு தப்பிப்போக மறுமுறை விடாது வேறொரு துணையுமின்றி அறமே வலியாகத் தனது தேரிலே இளைத்துக் களைத்து "மெய்த்தல முழுதும் திறந்து குருதி வெயிலவன் கரங்கள்போல் விரிய" உருக்குலைந்து குந்தி இருந்தான். அப்போது அவனது அறத்தையும் கைப்பற்றினால் அன்றி இறவான் என உணர்ந்த கண்ணன் ஓர் ஏழை மறையவனாக வேற்றுருக் கொண்டு கன்னனிடம் வந்து அவன் செய்த அறத்தினைத் தந்தருளவேண்டு மென்று இரந்து நின்றான். உடனே அவன் அகமகிழ்ந்து,

"ஆவியோ நிலையிற் கலங்கியது யாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம்
நயக்கும் பக்குவந் தன்னில் வந்திலையால்
ஓவிலாதி யான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்க நீ உனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரிலன் என்றான்
புண்ணிய மிதனினும் பெரிதோ" —வில்லி

என்று கூறித் தனது நெஞ்சிற் பதிந்துள்ளதோர் அம்பினைப் பிடுங்கி அதிலிருந்து பொங்கிய குருதி கொண்டு தாரைவார்த்துத் தந்து தன்னுயிர் துறந்தான் கன்னன். அருச்சுனனால் போரில் வெல்லப்பட்டுக் கொலை யுண்ட கன்னன் அல்லவா உண்மையில் தனது கொடையால் கண்ணனாகிய கடவுளையும் வென்றான். இதுவே கொடையால் வந்த பெருமிதம்.

## 4. இளிவரல்

நான்காவதாகக் கூறிய இளிவரலுக்கு இழிவு என்பது பொருள். மூப்பினுலே நரை திரையாகித் தடியூன்றி நடக்கும் கிழவன் தனது உடலம் இளமைப்போதில் இன்பவாயிலாக இருந்தது போக இப்போது பெருஞ் சுமையாகித் தன்னை இறுத்தலும் உடலெல்லாம் கூனிகுன்றித் தூக்கம் இன்றி ஏக்கங்கொண்டு, இறப்பதே மேலென ஒருபுறம் எண்ணியும் இறப்பதற் கென்கடவேன் என மற்றெருபுறம் அஞ்சியும் தயங்கித் தத்தளித்து, தன்னை ஒன்றும் செய்யவிடாது கட்டிப்போட்டு சிறையிலிட்டு வருத்தும் முதுமையினை வெறுத்து நிற்கின்ருன். இது முதுமையால் வந்த இளிவரல். யயாதி என்பவன் முதலில் வெள்ளியின் மகளாகிய தேய்வயானையை மணந்துகொண்டான். பின்னர் அவளுக்குத் தெரியாமல் சன்மிட்டை என்பவளைக் கூடிப் பிள்ளைகளைப் பெற்ருன். இதனை அறிந்த வெள்ளி யயாதியை முதியோனுகுமாறு நிறைமொழியால்கூற அந்த யயாதியும்.

கனலெழுந் துடலை முருக்கிட வெளிறிக்
காத்திரம் பழுத்தற முதிர்ந்து
புனைநரை சரையும் இருமலும் மிகுந்து
புரவலன் துயருழந் தனனே.

என்று வில்லிபுத்தூரார் புனைந்துரைத்தபடி முதுமைவாய்ப் பட்டு இழிந்த நிலையினை அடைந்தானும். எனவே முதுமை என்பது இளிவரல் என் பதன் தாயகம் என்பது பெற்றும். இனிப் பிணி என்பது இரண்டாவது தாயகமாகும். பிணியால் வருந்துவாரும் ஒருவகையில் இழிநிலை அடைந்து வருந்துகின்றனர்.

கூற்ருயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்ருயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்ருதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

என்று கதறியழுது திருநாவுக்கரையர் புலம்புகின்ருர். அவர் சூலை நோயால் என்ன பாடுபட்டார்?

"தோற்றுதென் வயிற்றி னகம்படியே குடரோடு
துடக்கி முடக்கியிட ஆற்றேன்"
"வயிற்றெடு தொடக்கி முடக்கியிட நஞ்சாகி வந்தென்னை
நலிவதனை நணுகாமற் றுரந்துமிடர் அஞ்சேலுமென்னீர்"
"சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்."
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய் அலந்தேன்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தே என்வயிற்றி னகம்படியே பறித்துப்
புரட்டி யறுத்தீர்த்திட நானயர்ந்தேன்.
கலித்தே என்வயிற்றின் அகம்படியே கலக்கி
மலக்கிட்டுக் கவர்ந்து தின்ன அலுத்தேன்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தாலென்
வேதனையான விலக்கி யிடாய்"

என்றெல்லாம் தாம் சூலைநோயால் பட்டபெருந்துயரை வாய்விட்டுக் கூறிப் புலம்புகின்றார். இங்குப் பிறக்கும் இளிவரற் சுவை பிணியாற் பிறந்தது. இனி வருத்தத்தாலும் இளிவரல் பிறக்கின்றது. நெற்றி வேர்வை நிலத்தில்விழ நாள்தோறும் கையையுடைத்து அரை வயிறு கஞ்சிக்கும் அல்லல்பட்டும் பெருமுயற்சி செய்து சிறுமைப்படுவாரும் எந்நாளும் எப்போதும் தாம் பாடுபடுவதற்கு மனம் நைந்து 'பாழான வேலையைச் செய்து தொலைக்கவேண்டுமே" என முணு முணுத்துக் கொண்டே போகின்றனர். குங்குலியக்கலைய நாயனுர் காலத்து அரசன் ஒருவன் சாய்ந்திருந்த திருப்பனந்தாள் சிவலிங்கத்தினை நிமிர்த்த எத்துணையோ நாள் இரவும் பகலும் பலயானைகளைப் பூட்டிப் பார்த்தும் சிவலிங்கம் அசைந்தபாடில்லை; அதுகொண்டு தனது இழிநிலைக்கு நொந்து நின்றுனும் அரசன்.

"செங்கண் வெள்ளேற்றின் பாகன் திருப்பனந் தாளில் மேவும்
அங்கணன் செம்மை கண்டு கும்பிட அரச னூர்வம்
பொங்கித்தன் வேழ மெல்லாம் பூட்டவும் நேர்நில் லாமைக்
கங்குலும் பகலும் தீராக் கவலையுற் றழுங்கிச் செல்ல."

என்று இதனைச் சேக்கிழார் இனியவரற் சுவைபடக் கூறுவார். ஆகவே ஆகவே வருத்தம் என்பது இளிவரலுக்கு மூன்றும் தாயகமாகும்.

அவ்வாறே மென்மை என்பது நான்காவது தாயகமாகும். வலி யில்லாதிருக்கும் மெலியாரும் வலியின்மையால் தாம் படும்பாட்டை நினைந்து தமது மென்மையை இகழ்ந்து வெறுக்கின்றனர். இராவணன் இராமரால் முதற்போரில் தோற்கடிக்கப் பட்டபோது வலியற்று நின்ற நிலையை இளிவரற்சுவைபடக் கூறுகின்றுர் கம்பர்.

" அறங்க டந்தவர் செயலிதன் றுலகெலா மார்ப்ப
நிறங்க ரிந்திட நிலம்விரல் கிளைத்திட நின்றான்
இறங்கு கண்ணிணன் எல்லழி முகத்தினன் தலையன்
வெறுங்கை நாற்றினன் விமுதுடை யாலன்ன மெய்யன்"

இஃது மென்மையால் பிறந்த இளிவரலாகும். இவ்வாறெல்லாம் இளிவரல் பிறப்பதனை அறிந்த தொல்காப்பியனார்,

" மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே" —தொல். 1200

என்று கூறிப்போயினர். இவ்வாறு முதற்சுவை என்ற நான்கினையும் அறிக. இதனின்றும் மற்றைய நான்கு சுவைகளும் பிறத்தலினாலே இவற்றை **முதற்சுவை** என்றார் பரதர்.

## வழிச் சுவைகள்

முதல்நூலைப் பின்பற்றி வெளிவந்த நூல்களை வழி நூல்கள் என வழங்குவதுபோல, முதற்சுவையென மேல் எடுத்துக் கூறியவற்றினின்றும் பிறக்கும் சுவைகளை வழிச்சுவைகள் எனக் குறியிட்டு வழங்கலாம். மேலே விரித்துரைத்த உவகை, வெகுளி, பெருமிதம், இளிவரல் என்ற நான்கினின்றும் முறையே நகை, அழுகை, மருட்கை, அச்சம் என்பன தோன்றுகின்றன என்றுரைப்பர் பரதர்

### 1, நகை

**நகையாவது** சிரிப்பு. இதன்பிறப்பிடம் நான்கே யாகும், முதலாவது **எள்ளல்.** ஒருவரை ஒருவர் இகழ்ந்து ஏளனம்செய்து விளையாடி நகையாடுதலை உலகத்திலே எந்நாளும் காண்கின்றோம். காளமேகப்புலவன், அதிமதுரகவி முதலானோர் தம்மைத்தாமே கவிராயர் என்று புகழ்ந்து கொள்ள

" வாலெங்கே நீண்ட வயிறெங்கே முன்னிரண்டு
காலெங்கே உட்குழிந்த கண்ணெங்கே—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள்! நீவிர்
கவிராயர் என்றிருந்தக் கால்."

என்று எள்ளி நகையாடினுன். இளமை என்பது, இரண்டாவது. தட்டித் தட்டிப் பேசும் இளைஞர் பேச்சும் அவர்களது பொருளில்லாத செய்கையும் நமக்குச் சிரிப்பூட்டுவது அவர்களது இளமையாலேதான்.

" எந்தைபுகுந்தொளித்தமனை யுறிவெண்ணெய் எட்டாமல்
குந்தியுரல் மீதேறிக் கல்லினுற் குழிசியுடைத்
தந்தளிர்க்கை யாலேந்தி யினிதருந்தி யாங்கெய்து
மைந்தருக்கு மிகவளித்துப் பூசைக்கும் வழங்கினுன். "

என்று கூர்மபுராணக்காரர் புகழும் கண்ணபிரானது திருவிளையாடலும் நகையையே விளைவிக்கின்றது. பேதைமை என்பது மூன்ருவது. அஃதாவது அறியாமை. நுனிமர மேறிநின்று அடிமரத்தை வெட்டும் மதியிலி ஒருவனைக் கண்டாலும் நகைதானே தோன்றுகிறது. பேதையரைக் கண்டால் இரங்குவது பின்னிருக்கட்டும். பேரறிஞர் அல்லாதோர் அவர்களைக் கண்டால் நகைக்கவே தொடங்குவர். துரியோதனன் முதலியோர் பாண்டவர்களது ஊரிலுள்ள பளிக்கு மேடைகளுக்கும் குளிக்கும் ஓடைகளுக்கும் வேற்றுமை தெரியாது நடந்து போனபோது வீமனும் திரௌபதையும் கண்டு நகைத்தார்களாம்.

" செந்நெலின் வாளைபாயும் செல்வ நாடுடைய கோமான்
நென்னலங் கெய்த வீமன் நகைத்ததும் நேயமான
கன்னலின்மொழியாள் மூரல்விளைத்ததும் " என்றும்

" பொன்னைச் சிரிக்கும் பூங்கோயிற் புனல்வாவியிலன்றெங்கள் குல
மன்னைச் சிரித்த செங்கனிவாய் "

என்றும், வில்லிபுத்தூரார் கூறும் நகை பிறரது பேதைமையைக்கண்டு பிறந்ததாகும். நான்காவது பிறப்பிடம் மடன் ஆகும். மடமாவது கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை.

" குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும். "

என்பதைத் தன்மடத்தால் நகை தோன்றுதலுக்கு எடுத்துக் காட்டுவர் பேராசிரியர். குதிரை முட்டை வாங்கப்போன கதையும் மடமையால் வரும் நகைச்சுவை நிரம்பியதாகும். சூர்ப்பநகையானவள் இராமன்மேல் காதல் கொண்டு வந்தபோது இராமன் தன்னைத்தானே கீழ்ப்படுத்திக் கொண்டு தான் அவளுக்குத் தகுதியற்றவன் என்று கூற, அதைத் தடுத்து உரைத்துப் பின் தன்னை மணப்பதால் வரும் நன்மையையும் எடுத்துச் சொல்கின்ருள். அவற்றை எல்லாம் உண்மையிலேயே உயர்வெனக் கருதியவன்போல விளையாடுகின்ருன் இராமன். சூர்ப்பநகை அதனை அறியாமல் உண்மை என்றே கொள்கின்ருள்.

நிருதர்த மருளும் பெற்றேன்
நின்னலம் பெற்றேன் நின்னேடு
ஒருவரும் செல்வத் தியாண்டு
முறையவும் பெற்றே னன்றே
திருநகர் தீர்ந்த பின்னர்ச்
செய்தவம் பயந்த தென்னு
வரிசிலே வடித்த தோளான்
வாளெயி றிலங்க **நக்கான்.**

என்றதில் சொல்லிய நகை பிறரிடத்துக்கண்ட மடமை வாயிலாகப் பிறந்ததாகும். இந்த வகையால் எல்லாம் **நகை** பிறக்கின்றதென உணர்ந்த தொல்காப்பியனுர்,

"எள்ளல் இளமை பேதமை மடன் என்று
உள்ளப் பட்ட நகை நான் கென்ப.

என்ருர். உள்ளப்பட்ட நகை என்றதனுல் உள்ளப்படா நகையுமொன் றுண்டு என்றதாயிற்று. ஒரு நினேவுமின்றி வெறுமென நகைத்தலேயும் காண்கின்ருே மாதலினுலே அதனே நீக்குதற்கு உள்ளப்பட்ட நகை என்ருர். நகைக்கும் உவகைக்குமுள்ள தொடர்பினே அறிந்தபேராசிரியர் இந்த நகைக்கெல்லாம் உவகை உரித்தென்பர்.

## 2. அழுகை

வெகுளிச் சுவையினின்றும் அழுகைச் சுவை பிறக்கின்றதென் கின்ருர் பரதர். வெகுளப்பட்டார்பால் அழுகை தோன்றி நிகழ்வது உலக இயல்புதானே. இவ்வழுகை பிறக்குமிடமும் நான்கே என்பர் நம்தமிழர். ஒன்று இளிவு. இளிவாவது பிறரால் இகழப்பட்டு எளிய ணுதல். செல்வத்துட் செல்வமாகிய திருவருட்செல்வம் நிரம்பப்பெற்ற திருநீலகண்ட நாயனுர் காமத்துறையில் இளேயாராக அது கண்டு அவருடைய மனேவியார் ஊடி "எம்மைத் தீண்டுவீ ராயின் திருநீல கண்டம்" என்று வெகுண்டு இகழ்ச்சிக் குறிப்புப்படக் கூற, அவ்வம்மை யார் எதிரில் அந்நிலேயில் எளியராய் நிற்கும் பொழுது அந்நாயனுரும் நெறி பிறழ்ந்து வாடுவது கண்டு "ஐயோ" என்று இரங்காதவர் ஒருவரும் இல்லே. சேக்கிழாரும் "இன்பத்துறையில் எளியரானுர்" என்கின்ருர். இழவு இன்பது இரண்டாவது. தனக்கு மணுளன் என்று முடிவு செய்திருந்த கலிப்பகையாரும், தனது தாய்தந்தையாரும் ஒருவர்பின் ஞெருவராக இறந்து படத் தனது இளஞ் சிறுதம்பியாருடன் நின்று கலங்கிய திலகவதியாரை எண்ணினுல் கன்மனமும் கரைந்துருகுகின்றது.

" எந்தையும்எம் மனையும்அவர்க்கு எனைக்கொடுக்க இசைந்தார்கள்
அந்தமுறை யால்அவர்க்கே உரியதுநான் ஆதலினால்
இந்த உயிர் அவிர்உயிரோ டிசைவிப்பேன் எனத்துணிய
வந்தவர்தம் அடிஇணைமேல் மருணீக்கி யார்விழுந்தார்

அந்நிலையில் மிகப்புலம்பி அன்னையும்அத் தனும்அகன்ற
பின்னையும்நான் உமைவணங்கப் பெறுதலினால் உயிர் தரித்தேன்
என்னைஇனித் தனிக்கைவிட்டு ஏகுவீர் எனில்யானும்
முன்னம்உயிர் நீப்பன்என மொழிந்து இடரின் அழுந்தினார்."

தந்தையும் தாயும் முதலான சுற்றத்தாரையும் இன்பம் பயக்கும் நுகர்ச்சி முதலியவற்றையும் மேற்கூறியவாறு இழத்தலினைப் பண்டையோர் இழவு என்று கூறினர். அசைவு என்பது மூன்றாவது பிறப்பிடம். உலக முழு தினையும் ஒருகுடைக்கீழ் அடக்கி ஆண்டு ஓ என வாழ்ந்த நளன் சூதாடி எல்லாவற்றையும் இழந்து மனைவியும் தானும் ஒற்றைத்துணியே உடுத்து, முன்னர் அரண்மனையினுள்ளே மெல்லணையின் மீது மகரயாழ்கேட்டு இன் துயில் அமர்ந்த காலம் போகப் பாழ் மண்டபத்திலே கொதுகின் சில்பாடல் கேட்டுப் பின் மனைவியையும் பிரிந்து ஒளி வடிவும் மாறிப் பண்டைய உயர்நிலை எல்லாம் போய் மற்றொரு அரசனுக்குக் கீழ்ப்படிந்து பணிகேட்டு மடையனாகியும் தேரோட்டியாகியும் நின்ற நளனை நினைக்குந்தோறும் அழுகை அடைத்துக்கொண்டு வருகின்றது.

" வைய முடையான் மகரயாழ் கேட்டருளும்
தெய்வச் செவிகொதுகின் சில்பாடல்—இவ்விரவில்
கேட்டவா என்றழுதாள் கெண்டையங்கண் நீர்சோரத்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து."

" விரைமலர்ப்பூ மெல்லணையும் மெய்காவல் பூண்ட
பரிசனமும் பள்ளி அறையும்—அரைசேநான்
காணேன் இங்கு என்றேக் கலங்கினாள் கண்பனிப்பப்
பூணேர் முலையாள் புலர்ந்து."

இவ்வண்ணம் பண்டை நிலைமை கெட்டு வேறொருவர் போலாகி வருந்துதலை நமது முன்னோர் "அசைவு" என்பர். வறுமை என்பது நான்காவது. உண்ண உணவு இன்றித் தாய் வாடி வதங்கப் பால் குடிப்பதற்காகச் சுவைக்கப்போன குழந்தையானது பால் பெறாது ஒரு புறம் அழுதுபுரளச் சுற்றிலும் மற்றைச் சிறுவர்கள் கஞ்சிக்கும் கூழுக்கும் வாதாடி அழுதும் புரண்டும் சண்டையிடப் பெற்றமனம் பித்தாய் நின்ற சுசீலை எனும் பொத்தல் துணி கட்டிய குசேலரது மனைவியின் கதை அவலச்சுவை நிரம்பிய தன்றோ?

"அடுத்தமனைச் சிருனொருவன் இன்றுநும தகம்கறிஎன் அட்டார் என்று
தொடுத்துவினு யினனுலச் சொற்பொருள்யாவ துதானெச்
சுவைத்தன் னுய்நீ
எடுத்துரைஎன் றிடுமழவுக் குரைக்கிலது செய்யெனிலென்
செய்வோ மென்று
மடுத்தஅஃ தறிந்திலே னெனமற்றெேன் றுரைத்ததனே மறக்கச் செய்வாள்"

என்றெல்லாம் கேட்டோர் அழுமாறு குசேலோபாக்யானக்காரர் கூறிச் செல்கின்றுர். தொல்காப்பியனுரும் மேற்கூறிய வகையால்தான் அவலச்சுவை பிறக்கின்றதென,

" இளிவே இழவே அசைவே வறுமை என
விளிவில் கொள்கை அழுகை நான்கே " —தொல். 1199

என்ற சூத்திரத்தில் கூறியுள்ளார்.

## 3. மருட்கை

பெருமிதத்தினின்றும் வியப்புப் பிறக்கின்றது என்பது பற்றி மருட்கைச் சுவையினைப் பெருமிதச் சுவையினின்றும் பிறந்ததென்பர் பரதர். தொல் காப்பியனுர்,

" புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே. "

என்ற சூத்திரத்திலே கூறியுள்ளார்.

என்று இச்சுவை பிறக்கும் இடம் நான்கினையும் கூறியுள்ளார். விலங்குக் காட்சிக் கட்டிடத்தும் மீன்காட்சிக் கட்டித்தும், புதுமை புதுமையாக நீண்டும் குறுகியும் பெருத்தும் சிறுத்தும் உள்ள உறுப்பினை யுடையன வாய்ப் பல பல நிறங்களுடனே பார்ப்பவரைப் பகட்டும் விலங்குகளையும் மீன்களையும் நம்மவர் சென்று கண்டு அவற்றிலேயே பதிந்து விட்டாற் போல நின்று வாயைப் பிளக்கவில்லையா? நாட்டுப்புறத்தான் மிட்டாய்க் கடையை விறைத்துப்பார்த்தான் என்னும் வழக்கும் புதுமைபற்றி எழுந்த வியப்பினைக் குறிப்பதாகும். அக்பர் என்னும் அரசர்பெருமான் முதன் முதலாகச் சூரத்துக்கருகிலே பரந்து கிடக்கும் பெருநீர்ப்பரப்பாகிய கடலினைக் கண்டு பெருவியப்படைந்தாராம். இஃது அக்கடலின் பெருமையால் உண்டாகியதாகும். கண்ணனது பெருமையைக்கண்டு அசோதை வியப்படைந்து பால் கொடுக்க அஞ்சுவதை மிகஅழகாக விரித்துரைக்கின்றுர் பெரியாழ்வார். அச்சத்திற்கு முன்னின்ற வியப் பினையே இங்குக் குறிக்கின்றேம்.

தன்னேராயிரம் பிள்ளைகளோடு
தளர்நடையிட்டு வருவான்
பொன்னேய் நெய்யொடு பாலமுதுண்டு ஒரு
புள்ளுவன் பொய்யே தவழும்
மின்னேர் நுண்ணிடை வஞ்சமகள் கொங்கை
துஞ்ச வாய்வைத்தபிரானே
அன்னே உன்னை அறிந்து கொண்டேன் உனக்
கஞ்சுவன் அம்மந்தரவே''

என்றெல்லாம் பாடுகின்றார். சிறுமையால் பிறக்கும் வியப்பினைக் குறளுருவாய்ச் சென்ற திருமாலினைக் கண்டபோது காணலாம்.

'' காலநுனித் துணர் காசி பனுக்கும்
வாலதிதிக் கொருமா மகவாகி
நீல நிறத்து நெடுந்தகை வந்தோர்
ஆலமர் வித்தினருங் குறளானான் ''

'' அன்றவன் வந்ததறிந் துலகெலாம்
வென்றவன் முந்தி வியந்து எதிர் கொண்டான். ''

எனக்கம்பரானவர் மாவலிவேந்தன் அக்குறளுருக்கொண்ட திருமாலைக் கண்டு வியப்படைந்ததைக் கூறுகின்றார். மாங்காய்த் தலையையும் தேங்காய்த் தலையையும் கண்டு நமது மகளிர் வியப்பாகப் பார்ப்பதும் பொருள்களின் சிறுமையால் அல்லவா? நான்காவது, **ஆக்கம்.** ஆக்கமாவது ஒன்று ஒன்றாகத் திரிவதாகும். கண்கட்டு வித்தை பண்ணுவாரைப் பார்த்து வியப்பது ஆக்கத்தால் ஆகியதாகும். இராமனது காலடிப்பட்டுக் கல்லொன்று பெண்ணாகியது கண்டு வியப்பு அடையாதவர் யார்.

'' இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்
இனி இந்த உலகுக் கெல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்றோர்
துயர் வண்ணம் உறுவ துண்டோ
மைவண்ணத் தரக்கி போரின்
மழைவண்ணத் தண்ண லேஉன்
கைவண்ண மங்குக் கண்டேன்
கால்வண்ண மிங்குக் கண்டேன். ''

என் றெழுந்த புகழ்ச்சி வியப்பால் தோன்றிய தாகும்.

## 4, அச்சம்.

அச்சச் சுவை ஒன்று மிகுதி நிற்கின்றது. நடு நிலே (சம நிலே) என்பது வீடு பெற்ருரது உயர்நிலே யாதலின் இங்கு அதைப்பற்றி ஆராய்ச்சி இல்லே. இளிவரற் சுவையினின்றும் அச்சச் சுவை பிறந்த தென்பார் பரதர். நாம் எதனேக்கண்டு அஞ்சுகின்ருேமோ அதனே நாம் வெறுக்கின்ருேம். பேராசிரியர் "குறிப்பென்பது............அஞ்சுதக்கன கண்ட வழி அதனே நோக்காது வெறுக்கும் உள்ள நிகழ்ச்சி" என்ற இடத்தில் அச்சத்திற்கும் வெறுப்பிற்கும் உள்ள தொடர்பை விளக்குதல் காண்க. இரவில் தனிவழியாய்ச் செல்லும்போதும் சுடுகாட்டின் வழியாய்ப் போகும்போதும் பேயேனும் பூதமேனும் அறைந்து வீடுமோ என அஞ்சுகின்ருர் பலர். புலியாவது கரடியாவது மேல் பாய்ந்து கொன்றுவிடுமோ என நடுங்குகின்ருர் சிலர். திருடர்கள் வழிமறித்துத் தம்மை அடித்துப் பிடித்துக் கைப்பொருளேப் பறித்துப் போவார்களோ எனப் பின்வாங்கித் தயங்குகின்ருர் பலர். வேலேயாட்கள் தமது தலேவர் களுக்கும், குடிகள் அரசர்களுக்கும், சிறுவர்கள் தாய்தந்தையர்களுக்கும், பள்ளிப்பிள்ளேகள் கணக்காயனுருக்கும் அஞ்சிச் செய்யவேண்டுவன வற்றைச் செவ்வனே செய்து போகின்றனர். தொல்காப்பியனுரும் இந்த நான்கு வகையால்தான் அச்சம் பிறக்கின்றதென அளவிட்டுக் கூறினுர்.

> " அணங்கே விலங்கே கள்வர் தம்மிறை எனப்
> பிணங்கல் சாலா அச்சம் நான்கே."

என்று சூத்திரம் செய்தார். தமயந்தி காட்டிலே தும்பும் தூசும் மேற்படியக் காற்றில் கூந்தல் அவிழ்ந்து பறக்க உணவும் உறக்கமு மின்றி வாடி வதங்கிய உடலோடு பித்தம் பிடித்தவள் போலத் திரிந்து வருவதைக் கண்டு ஒருவணிகர் கூட்டம் அவளேப் பேயென்று அஞ்சி நிற்றலேத் தெலுங்கு பாரதம் அழகாகக் கூறுகின்றது. அவ்வச்சம் **அணங்கு** என உட்கொண்டு எழுந்ததாகும். தமயந்தி காட்டில் திரிந்துவருகையில் பாம்பால் விழுங்கப்படும்போது நடுநடுங்கி நின்ருளாம். தொல்காப்பிய ஞர் **விலங்கு** என்று கூறினுலும் பாம்பு முதலியனவும் அதனுள் அடங்கும் என்பது உரையாளர்கள் கூறிவருவதினின்றும் தெளிவாகிறது. இனி அத்தமயந்தியே தன்னேப் பாம்பின் வாயினின்றும் தப்புவித்த வேடனுனவன் தன்னே நெறிதப்பிப் பெண்டாள அழைத்தபோது **கள்வ**னுல் பிறந்த அச்சத்தின் வாய்ப்பட்டு அலமந்தாள் எனலாம்.

> " தீக்கட்புலி தொடரச் செல்லும் சிறுமான்போல்
> ஆக்கைதளர அலமந்து நின்ருள்............... "

" வேட னழைப்ப விழிபதைத்து வெய்துயிரா
ஆடல் மயில்போல் அலமரா—ஓடினுள் "

" தூறெலா மாகச் சுரிகுழல்வேற் கண்ணில்நீர்
ஆறெலா மாக அழுது."

என்று புகழேந்தியார் பாடுகின்ருர். "தம்மிறை" என்ற அச்சத்துறைக்குக் கண்ணன் நந்தகோபனுக்கும் அசோதைக்கும் அஞ்சிநிற்றலை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

" தாளாற்றயிர்க்குழிசி யனைத்தினையும் தகர்த்துருட்டிக்
கோளார்ந்த மதிமுகத்துக் குறுநடைய குற்ருயன்
மீளாநற் ருய்போதின் வெகுளும்என வுளம்வெருவி
வாளார்ந்த கருநெடுங்கண் மற்றெருத்தி மனைபுகுந்தான்,"

என்ற கூர்மபுராணத்தைக் காண்க.

ஆகச் சுவை எட்டையும் அறிந்தோம். இவற்றில் நகை அழுகை இளிவரல் மருட்கை, என்றவை தன்கண் தோன்றுதல் பிறன்கண் தோன்றுதல் என்ற முறையாகப் பார்க்கும்போது இவ்விரண்டாகும். பிறரது இளமைகண்டும் நகை பிறக்கின்றது. நமது இளமைகண்டும் நகை பிறக்கின்றது. ஆனுல் இவை ஒழிந்த மற்றைய நான்கு சுவையில் அந்த வேறுபாடில்லை என்க.

பேராசிரியர் நகை முதலியவற்றைச் சுவை என்றேனும் குறிப்பென்றேனும் வழங்கினும் அமையும் என்பர். "குறிப்பென்பது கைப்பின் சுவையுணர்வு பிறந்தவழி வெறுப்பு முதலாயின உள்ள நிகழ்ச்சிபோல் அஞ்சுதக்கன கண்டவழி அதனை நோக்காது வெறுக்கும் உள்ள நிகழ்ச்சி" என்று அவர் விளக்கிஉள்ளதனை முன்னமே விரித்துரைத்துள்ளோம். இக்குறிப்பினை வடநூலார் ஸ்தாயிபாவம் என்பார்கள். ஒவ்வொரு சுவைக்கும் உள்ளீடாக நின்று கதையின் போக்கோடு கலந்து வெளிப்பட்டு நம் உள்ளத்திற் ருேன்றும் உள்ள நிகழ்ச்சியாகிய குறிப்பு ஒவ்வொன்று தனித்தனியே உண்டென்றும் வடநூல் கரைகண்டார் கூறுவர். இக்குறிப்பு ஒவ்வொன்றும் முற்றிப்பழுத்தால் ஒவ்வொரு சுவையாக இனித்து நிற்கின்றது. ஸ்ருங்காரரஸம் என்னும் உவகைச் சுவைக்கு ஸ்தாயிபாவம் என்னும் குறிப்பாய் விளங்குவது ரதிஎனப் பெயரிய அன்பென்னும் உள்ள நிகழ்ச்சியேயாகும். ரெளத்ரரஸம் என்னும் வெகுளிச் சுவைக்குக் குரோதம் எனப்பெரிய கறுவுதலே குறிப்பாகும். வீரரஸம் எனும் பெருமிதச் சுவைக்கு உற்சாகம் எனப் பெயரிய மதர்த்தெழும் ஊக்கமே குறிப்பாகும். பீபத்ரஸம் என்னும் இளிவரற்சுவைக்கு ஜுகுப்ஸை எனப்பெயரிய அருவருப்பே குறிப்பாகும். கருணைரஸம் எனும் அவலச்சுவைக்கு சோகம் எனப் பெயரிய கையாறே

குறிப்பாகும். அத்புத ரஸம் என்னும் மருட்கைச் சுவைக்கு விச்மயம் எனப்பெயரிய வியப்பே குறிப்பாகும். பயரஸம் என்னும் அச்சச் சுவைக்குப் பயங்கரம் எனப் பெயரிய உள்ள நடுக்கமே குறிப்பாகும்.

இன்னும் இந்தச் சுவை எட்டுக்கு மேற்பட்டும் இருக்கின்றன என்று கூறுவாரும் உளர். ஆரோன் ஹில் (Aoron Hilf) என்பவர், (1) உவகை (2) அவலம் (3) அச்சம் (4) வெகுளி (5) இரக்கம் (6) எள்ளல் (7) வெறுப்பு (8) பொருமை (9) வியப்பு (10) காதல் என்று பத்து வகை யாக்கிக்கொண்டு ஆராய்ச்சி செய்கின்ருர். தொல்காப்பியனுரும் அகஒழுக்கத்திற்கு வேண்டிய மெய்ப்பாடுகளைப் "புகுமுகம் புரிதல்", முதலாகக் கூறிவருகின்ருர் என முன்னரே கூறினேம். அவையன்றி வேறு சில மெய்ப்பாடுகளையும் எடுத்துக் காட்டுகின்ருர். இவை முற்கூறிய சுவைகளின் வேருய் அவற்றைச் சார்ந்து விளங்கி இன்ப மூட்டுகின்றமையால் சார்புச் சுவை எனத் தக்கவையாம்.

" ஆங்கவை ஒரு பாலாக ஒருபால்
உடமை இன்புறல் நடுவுநிலை அருளல்
தன்மை அடக்கம் வரைதல் அன்பு எனுஅக்
கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்.
நாணுதல் துஞ்சல் அரற்றுக் கனவு எனுஅ
முனிதல் நினைதல் வெருவுதல் மடிமை
கருதல் ஆராய்ச்சி விரைவு உயிர்ப்பு எனுஅ
கையாறு இடுக்கண் பொச்சாப்புப் பொருமை
வியர்த்தல் ஐயம் மிகை நடுக்கு எனுஅ
இவையும் உளவே அவையலங் கடையே. "

என்ற சூத்திரத்தைக் காண்க. நகை முதலாகிய சுவையிலே இவை எல்லாம் அடங்கி விடா என்பது அப்பெரியாரது கொள்கை. சுவையினை விரல்விட்டு எண்ணி முடியாது. பானைச்சோற்றிற்கு ஒரு சோறு என்ற முறைப்படி சில சுவையினை எடுத்துக்காட்டுகின்ருர். பாவலன் தான் உணர்ந்த சுவையானது வெளிப்பட்டுத் தோன்றுமாறு பாடினனு என்பதொன்றையே சுவையுணர்ந்தோர் ஆராய்தல் வேண்டும். இதை விட்டு எத்துணைச்சுவைகள் இவ்வுலகில் இருக்கின்றன என்று ஏன் ஆராயவேண்டும். வரும் சொற்களையும், எழுத்துக்களையும் கூட எண்ணித் தீரவேண்டுமோ? எப்பொருளும் பாட்டின் உருப்பெற்று வெளிவருமானல் சுவையுடையதாகின்றது. ஆகவே பொருளைப்பற்றி நெடுக ஆராய வேண்டுவதில்லை. ஒரு பாடல் உண்மையான பாட்டின் உருவம் பெற்று ஒளிர்கின்றதா என்றே உற்றுப்பார்த்தல் வேண்டும். சுவையின் உருவினை அறிய அதன் வகையினை எவ்வளவு அறிந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவே கூறினர் தொல்காப்பியனுர்.

## அணியும் சுவையும்.

சுவையாராய்ச்சியில் தொல்காப்பியனாருக்கும் வட நூலாருக்கும் உள்ள வேற்றுமையைக் கண்டோம். அணிநூலார்களுக்குள் காணக்கிடக்கும் கொள்கை வேறுபாடுகளை இஃதொன்றே நன்கு விளக்குகின்றது. சுவைகளை எண்ணி அறிவதோடு அணி ஆராய்ச்சி முடியவில்லை என்பது தொல்காப்பியனாரது கொள்கை. அப்படியானால் இன்னும் எவ்வளவு தூரந்தான் போவதென்று நாம் அறியவேண்டாமா? வீட்டினை அழகாகக் கட்டிப் பின் இடித்துத் தள்ளுவதுபோலச் சுவையாராய்ச்சி என்று தொடங்கிச் சுவையின் வகையினை வளர்த்திக் கூறிய பின்னர்ச் சுவையை எண்ணுவதால் பயன் ஏதும் இல்லை என்றால் பின் என்ன செய்வது? சுவையாராய்ச்சியால் பயனொன்றும் இல்லையா? சுவையாராய்ச்சி என்பது சுவையைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் எண்ணுவதினும் வேறு? அஃதே உண்மை. சுவையாராய்ச்சிதான் பாட்டின் ஆராய்ச்சி. அவ்வாராய்ச்சிதான் யாது என்பதனை Benede to Croce என்ற இத்தாலிய அறிஞர் கண்டறிந்த கொள்கையின்படி ஒரு சிறிது இங்குக் கூறுவோம். இதனது அகலத்தினை விரிந்து கிடக்கும் அவரது நூல்கள் பலவற்றினும் கண்டுகொள்க.

### அணிநூல்,

பாட்டின் உயிர்நிலையாக உள்ளமைந்து ஒளிர்வதுதான் என்ன? இதற்குப் பலவகையான விடைகளைப் பலரும் அளித்துப் போகின்றனர். அணிகள் நிரம்பிய நூல்களையும் அணிகளைப்பற்றி ஆராயும் நூல்களையும் ஒற்றுமை நயம் பற்றி **அணிநூல்** என்றே இங்கு வழங்குவோமாக. நாம் எடுத்துக்கூறும் அணி என்பது நூல்களில் வருவதொன்றே அல்ல. ஓடாவி கண்டு களிப்பதும், இன்னிசை வாணன் உணர்ந்து உகப்பதும் மற்றையோர் மனத்தே வரைந்து மகிழ்வதும் எல்லாம் இவ்வணியேதான். உலகத்தாருக்கு வெளிப்பட்டு விளங்கும் முறையில் வேறுபாடேயன்றி உள்ளீடாக உயிர்நிலையில் ஒன்றும் வேறுபாடில்லையாம்.

**எண்நிலை:—** உயிரானது ஐம்பெரும் பைகளுக்குள் (பஞ்சகோசம்) அடங்கி ஒளிர்வதுபோல உண்மையும் ஐம்பெரும் பைகளுக்குள் அடங்கி ஒளிர்கின்றது. ஐந்துநிலைமாடத்தின்மேலே நின்று அரசாள்கின்றது. உலகத்தில் உள்ள ஒவ்வோராராய்ச்சியும் ஐந்து படிக்சட்டுக்களை ஏறிக் கடந்துபோய் உண்மையின் உயர்நிலையை அடைந்து அதன் திருமுன்பு செல்கின்றது. அணிநூலும் அப்படித்தான். முதற்படியோ அட்டவணைப்படி எங்கெங்கே அழகினைக் காண்கிறார்களோ அங்கங்கே உள்ள அழகிய

சொற்றொடர்களேயும், உவமைகளேயும் ஒன்றிரண்டு மூன்று எனக் கணக்கிட்டு எழுதி வைத்துக்கொள்கின்றனர் ஒரு சாரார். அவர்கள் அதுதான் அணி நூலின் முடிவு என்பர். சந்திராலோகம் 100 அணி கூறும். அதற்கு உரை கூறவந்த குவலயானந்தம் நூற்றுக்கு மேலும் பல எடுத்துக் காட்டும். இவ்வாறு எண்ணிக்கொண்டு போனல் இதற்கொரு முடிவு தான் உண்டோ? இதைவிடக் கடலில் உள்ள மணலினே எண்ணுவது எளிதாக முடியும். அழகு அமைந்து விளங்கும் அரிய இடங்களில்தான் அணிகளின் இயல்பினேக் கண்டறியவேண்டும் என்பது உண்மையே. பின்னேரது பாடல்களின் உண்மை நிலேயை அறியவேண்டி முன்னேரது பாடல்களில் தலேசிறந்தவற்றை உரைகல்லாக உள்ளத்தே உருப் போடுங்கள் என்று ஓர் உளவு சொல்லிக் கொடுக்கின்ருர் Mathew Arnold என்ற ஆங்கிலப் பேரறிஞர். ஆனல் அணியினே அறியவேண்டுமானல் அழகிய சொற்றொடர் ஒவ்வொன்றினேயும் கண்டறிந்தே தீரவேண்டும் என்பது சின்னுள் பல்பிணிச் சிற்றறிவினராகிய நம்மை நோக்கிக் கூறியதாகாது; மேலுலகத்திற்கு விரைந்து செல்வோரை நோக்கிக் கூறியதாகும்.

**பயன் நிலே:—** எனவே இஃது இயலாது, இவற்றிற்கு அடிப்படையாக அமைந்து கிடக்கும் கொள்கை ஒன்றினே அறிய வேண்டும் என்று சிலர் மேலே புறப்பட்டார்கள். கருமமே கண்ணுயின. இந்தப் பெயர் வழிகளில் சிலர் அறவுரை புகட்டுவதே அணியின் அரும்பெரு நிலே என்றனர். தீயவழியில் சென்ற உலகினேச் சீர்திருத்துவதே அதன் சிறப்பென்றனர். அப்படியானல் அறநூல்களுக்கும் அணிநூல்களுக்கும் வேற்றுமை ஒன்றும் இல்லேயாதல் வேண்டும். இந்த மயக்க உணர்ச்சியெல்லாம், அறநூல்களும் அணிநூல்களும் செய்யுளாகச் சிறந்து விளங்குவதால் எழுந்தவையாகும். அருமையான அணிநூலினே இவ்வாறு அறவணஅடிகளுக்கு அடிமையாக்கித் தன் வலேவீச்சில் உலகினரைச் சிக்கவைக்கும் விலேமாதாக மாற்றித் தெருவில் விட்டு விடப் பலருக்கு மனம் வருவதில்லே. ஆகவே இன்னும் சிலர் இன்பம் ஊட்டுவதே இதன் இயல்பு என்றனர். ஆனல் இன்பமும் துன்பமும் ஒவ்வொரு தொழிலின் முடிவிலும் ஆலமரத்துப் பேய்போல நம்மைப் பிடித்துக் கொள்ளக் காத்துக்கொண்டே இருக்கின்றன. அணி ஆராய்ச்சிக்கும் அந்நிலே சிறப்பானதன்றே. தினவெடுத்தவன் சொரிகின்ருன்; ஆறுதல் அடைகின்ருன். அங்குமா அணிநூல் வந்து புகவேண்டும்? அந்த யாழ் மீட்டுவதும் இந்த யாழ் மீட்டுவதும் ஒன்றென்பார் தொழுநோயரேயாவர். அணிகளின் பொதுத் தன்மையை நாடி நிற்பதால் இவர்கள் அட்டவணேக் காரர்களேவிட ஒருபடி உயரச் சென்றவர்களே யாவர். **எண்ணிலே** (Empericism) மாடத்தைவிட்டுப் **பயன்நிலே** (Practicism) மாடத்தை அடைந்தவர் ஆவர். ஆனல் இவர்கள் இடறி விழுந்தால் அணிநூலே சொரிநூல் எனும் படுகுழியில் வீழ்ந்தொழிகின்றனர்.

**அறிவுநிலை:—** ஆனால் இவரிற்சிலர் இந்நிலையின் குறைபாட்டை அறிந்து மேலேறிச் சென்று மற்றொரு திரையையும் கிழித்தெறிந்து உண்மையைக் காண விரும்புகின்றனராய் உயிரின் உயர்நிலையைக் காட்டும் அறிவைப்பற்றியது அணிநூல் என்றனர். அறிவை வளர்ப்பதே அணியின் முடிவு எனக் கண்டனர். **அறிவுநிலை** (Intellectualism) மாடத்தில் கண்டது உண்மையானால் அறிவு நூல்களுக்கும் அணிநூல் களுக்கும் உள்ள வேற்றுமைதான் என்ன? அறிவுநூல்களின் உண்மை களை எளிதாகவும் இனிதாகவும் எவ்வெவர் மனமும் மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் அணிகள் நிரம்பக் கூறுவதே அணியின் அரும்பணி. எடுத்துக் கொண்ட பொருளை வெளியிடும் வகையில்தான் வேற்றுமை உண்டேயன்றி வேறொன்றும் காணோம் என்றனர். அணி களின் இயல்பானது உயிரின் உயர்நிலையைக் குறிப்பதே என்ற அளவில் ஒருபடி உயரச் சென்றிருந்தாலும் இதுவும் ஒருவகையில் கீழ்ப்படியே யாகும். அறிவு நூலுக்கும் அணி நூலுக்கும் வேற்றுமை இல்லை என எவ்வாறு கூறமுடியும். கம்பனது அழகு கனிந்தொழுகி இன்சுவை ததும்பும் அணிநூலும், கணாதரது அறிவு முதிர்ந்து தேறி நுண்மை திகழும் எண்ணூலும் (தர்க்கம்) ஒன்றுதானா? அவை ஒன்றானால் ஒளியும் இருளும் கூட ஒன்றாகவே முடியும்.

**அன்மை நிலை:—** இதனை அறிந்து மேலொருபடி ஏறிப்போய் **"அன்மை நிலை"** (Agnosticism) மாடத்தைச் சேர்ந்தனர் சிலர். தாம் ஏறிவந்த படியை எல்லாம் எண்ணிப் பார்த்தனர். அப்படிகள் எல்லாம் ஏறிவந்தவர்கள் இருக்க இடம் தாராது அவர்களை இடறிவிழச் செய்த தையும் நினைத்துக் கொண்டனர். ஆகவே இன்னதுதான் அணியின் இயல்பென அறுதியிட்டுக் கூற முடியாது என்றனர். ஆனால் முன்னைய நிலைகளில் கண்ட இயலெல்லாம் அணியின் இயல்பு அல்ல என்று உறுதியாகக் கூற முடியும் என்றனர். அது அல்ல, இது அல்ல, என்ப தோடு இவர்கள் நின்றுவிட்டனர், இத்துணை தூரம் வந்தபிறகு இவர்கள் இவ்வாறு கையை விரித்துவிடுவதும் கண்ணை மூடிக்கொள்வதும் எல்லோருக்கும் ஏமாற்றமாகவே முடிகின்றன.

**அறிதுயில் நிலை:—** கண்ணை மூடிய சிலர் ஒரு படி மேலேறிப் போய் **அறிதுயில் நிலை** (Mysticism) மாடத்திற் புகுந்து அறிதுயிலில் அமர் கின்றனர். அணியானது அறிவையும் கடந்துசென்ற அருநிலை என்று முடிவு கட்டுகின்றனர். அறிவிற்கோர் அணிமுடியாயது அணியே என்கின்றனர். ஆனால், இதுவும் முடிந்த முடிபாகாது. ஐந்தாந்திரையும் அறுந்து விழவேண்டும்; உள்ளிருக்கும் பைக்குடமும் உடைந்தால்தான் உண்மை பிறக்கும். அறிவுநூல் அணியினைப் பற்றியும் ஆராய்கின்ற தல்லவா? அவ்வாறு அறிவிற்கெதிரே அதன் கையிற் சிக்குண்டு அது

வேண்டியவாறு முன்னும் பின்னும் கீழும்மேலும் புரட்டியும் உருட்டியும் தன்னை ஆராய்ந்துபார்க்க அதற்கு அடங்கி அமர்ந்த அணியானது, அறிவினின்றும் தப்பிக்குதித்து அவ்வறிவின் தலைமேலேயே குந்தி நிற்பது எவ்வாறு முடியும்? ஆகவே அறிவிற்கு மேலே அமர்ந்ததே அணி என்பதும் ஒரு அணியாகவே முடியும்.

**உண்மை நிலை-உணர்வு:—** இதுதான் என்ன? அணியினை அறிவின் பழம் என்பான் ஏன்? தலைகீழாகப்போனதால் அல்லவாவந்தது இந்தத்தத்தளிப்பு? அறிவின் வேரே அணி என்பது உண்மையாகாதோ? இவ்வாறு நூலேணியில் மேலோ கீழோ இருப்பதால் ஏற்றம்தாழ்வு ஒன்றும் இல்லை. **இயற்கைநூல்** (Natural Philosophy) இயற்கையை ஆராய்ந்தறிகிறது. **வரலாற்றுநூல்** (History) ஒவ்வொரு பொருளைப் பற்றியும் அறிந்தவற்றைக் கோவைப்படுத்திப் பொருள்களின் பொதுத் தன்மையை ஆராய்ந்து முடிவுகட்டுகின்றது. இவ்வியற்கை நூல் தாக்கப்பட்டால் அன்றி ஒவ்வொரு பொருளும் தனது நேரோடும் நிலையையோ அசையாது நிற்கும் நிலையையோ விட்டொழிவதில்லை என்று இயம்புகின்றது. இஃது இயற்கையில் கண்டதொரு திட்டம் (First Law of Motion) ஒவ்வொரு பொருளின் நிலையினையும் வரலாற்றினையும் கண்டறிந்து அப்பொருள்களின் பொதுத்தன்மையாக உள்ள இவ்வுண்மையை இயற்கை நூலறிஞர்கள் உலகிற்கு எடுத்துரைத்தார்கள். இனி வரலாற்று நூலோ ஒவ்வொரு பொருளின் பொதுத்தன்மையையும் **அறிவுநூல்** (Logic or Philosophy) கண்டவாறே அறிந்துகொண்டு, ஒவ்வொரு பொருளின் கதையினையும் தொடர்ச்சியாகச் சொல்லிக்கொண்டு போகின்றது. நாட்டுமக்களின் கதையையோ, விலங்குகளின் கதையையோ, பொருள்களின் கதையையோ எழுதுவதென்றால் ஒவ்வொருவர் கதையினையும், ஒவ்வொரு விலங்கின் கதையினையும், ஒவ்வொரு பொருளின் கதையினையும் எழுதிமுடியுமா? மக்களின் நிலையிலோ, விலங்குகளின் நிலையிலோ, பொருள்களின் நிலையிலோ பொதுவாகக் காணக்கிடக்கின்ற உண்மைகளை எடுத்துக்கொண்டு அவற்றின் கதையைத்தான் எழுதிப்போக முடியும். அறிவுநூலோ தான் காணும் பொருள்களின் பொதுத் தன்மையை அறிந்து கூறுகின்றது. பச்சைநிற வீட்டையும், பவளநிறவீட்டையும், கல்வீட்டையும், மண்வீட்டையும், கூரைவீட்டையும், மாடி வீட்டையும் காண்கின்றோம். அறிவுநூல் இவற்றின் வேறுபாட்டை விட்டொழித்து, இவற்றினுள்ளே மறைந்து கிடக்கும் பொதுத் தன்மையை ஆராய்ந்தறிகின்றது. மக்களாயினர் குடியிருப்பதற்குப் பயன்படுந் தன்மையை வற்புறுத்துகின்றது. இனி **அணிநூலோ** (Aesthetics) காணும் உலகத்தை இவ்வாறு கைவிட்டுவிடுவதில்லை; பொருள்களைப் பொது நோக்காகப் பார்த்துப் போய்விடுவதில்லை. ஒவ்வொன்றையும் சிறப்பாகப் பார்த்துத் தெளிவாகப் புகைப்படம் பிடித்தாற்போல மனத்திலே ஊன்றிப்

பதியவைத்துக்கொள்வதே அணிநூலின் வேலை. இவ்வாறு ஒவ்வொரு பொருளையும் முழுமுழுப்பொருளாகக் கண்டபடி அறிந்து மகிழ்வதே அணிநூலின் தொழிலாகும். ஆகவே இவ்வணிநூல்தான் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக விளங்குகின்றது. அதனுல்தான் மிக்க கீழ்நிலையிலுள்ள மக்களிடத்தும் இதனைக் காண்கின்றோம். உயர்நிலை யடைந்தாலும் இது நம்மைவிட்டுப் பிரிவதில்லை. வீட்டுநிலையை நூல்களில் கூறியதினின்றும் அறிவதொன்று, நாமே அந்நிலையை அடைந்து உணர்வதொன்று. முன்னையது அறிவுநிலை; பின்னையது உணர்வுநிலை; இஃதே அணிநிலையாகும். இதுபற்றியன்றே திருவள்ளுவனுரும் மெய்யறிவு என்னுது மெய்யுணர்வு என்று பேசுகின்றுர். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது; எனவே மேட்டுச் சுரைக்காயே வேண்டுவது. அணிநூலைவிட மற்றைய நூல்கள் சிக்கலானவை என்பது உண்மையே. அணிகொண்டு திரித்த புரிநூலே அறிவு நூலாதலின் அது முறுக்கேறியதேயாகும். அதைவிட வரலாற்றுநூல் சிக்கலானது. அதைவிட இயற்கைநூல் சிக்கலானது. சிக்கலாய் இருப்பதுபற்றிச் சிறந்ததெனக் சொல்லிவிட முடியுமா? இவ்வணி இல்லையானுல் அறிவுநூல் இல்லை; அதன்மேற்கட்டிய வரலாற்றுநூல் இல்லை, அதன் உயர இருக்கும் இயற்கைநூலும் இல்லையாம். ஆகவே ஏற்றந்தாழ்வு இவற்றிற்குள் எவ்வாறு இயம்புதல் கூடும். வீட்டு நிலையிலும் விலங்கு நிலையிலும் விளங்கி நிற்பது இவ்வணியே அன்றே?

**உணர்வும் சுவையும்:—** இயற்கை நூலும் அல்ல; வரலாற்று நூலும் அல்ல; அறிவுநூலும் அல்ல; தொழிலைப்பற்றிய பொருள்நூலும் அல்ல, அவ்வாருனுல் இவ்வணிநூல் எதைக்கொண் டியங்குகின்றது. அறிவு, நினைவு, ஆராய்ச்சி, தொழில் என்பன இயற்கைநூல் முதலியவற்றிற்கு வேண்டிய உள்ளத்தின் பண்புகளாம். எனவே மிகுதியாக நிற்கும் உள்ளத்தின் பண்புகளே அணிநூலுக்கு அகப்பட்டனவாம். உள்ளுணர்வு, கற்பனை, உள்ளக் கிளர்ச்சி, சுவை, மெய்ப்பாடு என்ற உள்ளநிலைகள்தாம் அணியாகமாறி வெளிப்படுகின்றன. இவ்வாறு கூறுவதற்குப் பொருள் என்ன?

**உணர்வும் அறிவும்:—** நாம் பொருள்களைத் தெரிந்து கொள்ளும் முறை இரண்டுவகைப்படும்: ஒன்று உய்த்தறிதல், மற்றொன்று உண்டு உணர்தல். ஒன்று அறிவு, மற்றொன்று உணர்வு. [உணர்ச்சி, உள்ளுணர்வு] ஒன்று தர்க்கஞானம்; மற்றொன்று கற்பனுசக்தி ஒன்று பொது உணர்ச்சி மற்றொன்று சிறப்புணர்ச்சி. ஒன்று தொடர்புணர்வு, மற்றொன்று தனியுணர்வு. இவ்வேற்றுமைதான் என்ன? இவ்வுலகத்திலே ஏதோ ஒரு பொருளைக் காண்கின்றோம். சிறப்பு இயல்புகளோடு அதனைத் தெரிந்து கொள்கின்றோம். கண்டபோது எந்தஉள்ளக்கிளர்ச்சியோடு கூடி மனத்திற்

பதிந்ததோ அந்தப்படியே பின்னும் கண்டுமகிழ்கின்றோம். இதுவே உணர்வால் உணரும்முறை. "உணர்வாய் உண்கிறாயே உனக்கு உணர்வு இல்லையா" என்ற சொற்றொடரில் உணர்வுஎன்ற அருஞ் சொல்லின் அழகியபொருளை அறிந்துகொள்க. இவ்வாறு கண்டுகளிப்ப தோடு நின்றுவிடுகிறோமா? உலகம் ஒன்று உண்டா? நாம்யார்? நமது உள்ளம் ஆர்? வந்தவாறெங்ஙனே போமாறேதோ? என்று பல கேள்விகள் தொடர்ந்தெழவில்லையா? இவற்றை ஆராயும்போது அறிவு வளர்கின்றது. ஒருபொருளைக் காண்கின்றோம். அதனது பொதுத்தன்மை மனதிற்பதிகின் றது. அந்த இனத்து மற்றையதோர் பொருளைக் கண்டவிடத்து முன்னை யதன் இனம் என்கிறோம். முன்னையதை இரும்பென்றால் இதனையும் இரும்பென்கிறோம். இங்கேதான் அறிவு பிறக்கின்றது. கண்ட பொருளில் உள்ளீடாய் உள்ளனவற்றை ஆராயத்தொடங்குகிறோம். ஒருபொருள் உண்டு என்று உய்த்தறிதலும், அப்பொருளோடு மற்றைய பொருள் களுக்குள்ள தொடர்பினை அறிதலும், அப்பொருளின் பொதுத்தன்மையை கண்டறிதலும், அறிவின் செயலேயாகும். கண்டதைக் கண்டபடியேகண்டு களிக்கும்பொழுது கண்டகாட்சி கண்ணைவிட்டு அகல்வதில்லை. அக் காட்சியை ஒருபுறம்ஒதுக்கி அதற்குள்ளே மறைந்திருப்பவற்றை ஆராய்ந் தறிந்து வெளியிடுவதற்குள் முன்கண்டகாட்சியை அறிஞர்பலர் அடியோடு மறந்துவிடுகின்றனர். அதன்பயனாக உலகமலைவு என்றகுற்றம்பட எழுதிப் போகின்றனர். அத்தகையாரது கண்ணைத்திறக்கும் மருந்து உணர்ச்சி என்பதுதான். அறிவால் அறிந்து உண்மையைக் காணவருவார் உள்ளு ணர்வால் உணர்ந்தும் உலகத்தோடு ஒட்ட ஒழுகுவாரானால் இவ்வாறு கைவிளக்கேற்றிக்கொண்டுகண்திறந்துபோய்க்கிணற்றில்விழமாட்டார்கள். கண்டகாட்சியை மறந்தவர்தாம் "நெய்க்குத் தொன்னை ஆதாரமா" "தொன்னைக்கு நெய் ஆதாரமா" என்று ஆராயப்புகுவர். ஒரு மரத்தில் ஒரு நூறு ஊர்க்குருவிகள் உட்கார்ந்திருந்தால் அவற்றை ஓட்டுவதற்கு எத்துணைமுறை கல்லெறிய வேண்டும் எனப் பள்ளிச் சிறுவர்கள் ஒருவர்க்கொருவர் கேட்டுக்கொள்வதை நாம் கேட்டதில்லையா? வெறும் பொதுத்தன்மையை அறியும் அறிவு ஒன்றே இருந்தால், உண்மைக் காட்சியை மறந்து, ஊர்க்குருவி ஒன்றுக்கு ஒருகல்லாக நூற்றுக்கு நூறு எனப் பிழையில்லாது ஒன்றும் வாய்ப்பாட்டைத்தான் ஒருவன் ஒப்பு விப்பான். பருக்கைக்கல் பட்டதும் பறவைகள் பாடும்பாட்டைப் பார்த்தது பார்த்தபடி மனக்கண்ணெதிரே பார்ப்பானானால் "காகமானவை கோடி கூடிநின்றாலும் ஓர் கல்லின்முன்னெதிர் நிற்குமா" என்று பாடுவான்.

**காட்சியறிவு:—** (PERCEPTION) கண்டது கண்டபடி கண்டு களிப்பது என்ற உடனே காட்சியறிவு ஒன்றுதான் உள்ளுணர்வு என்று உய்த்தறிதல் ஒண்ணாது. நாம்கண்டபொருள் உள்ளத்திலே உருப்பெற் றெழுந்து கூத்தாடுவதுபோல நம்மெதிரே இல்லாத பொருள்களும் ஓர்

உருப்பெற்றெழுந்து புத்துயிரோடுபுகுந்து விளையாடுகின்றன. முன்னையது போலப் பின்னையதும் உள்ளுணர்ச்சியேயாகும். இவ்விரண்டினையும் உள்ளுணர்வால்தான் காண்கின்றோம். உள்ளது இல்லது என்ற வேற்றுமை உள்ளுணர்விற்கு இல்லை. உண்மை இன்னது கட்டுக்கதை இன்னது என்று அறியாத குழந்தையின் மனத்தை ஊன்றிப்பார்த்தால் உள்ளுணர்வின் உருவத்தை ஒருசிறிது உணரலாம். அணிநூலை ஆராயும் போது அந்த நிலையில்தான் இருக்கின்றோம்.

**புனைந்துரையும் பொய்யுரையும்:—** உள்ளதற்கும் இல்லதற்கும் வேற்றுமை தெரியாத இடம் என்றோமே யன்றி இல்லாதவைகளையே இருப்பதாகக் கூறுவது என யாம் கூற வரவில்லை. "பொய்யிருப்பது புலவர் வாயிலே" என்பது கொண்டு, பொய்யெல்லாம் பொருள் நிறைந்த பாடல்கள் எனலாகாது. **பொய்யுரைக்கும்** (கற்பிதம்-Imagination) **புனைந்துரைக்கும்** (கற்பனை-Fancy) வேற்றுமை அறியாதவர்களே புலவர் கள் எல்லாம் பொய்யர்கள் என வாய்கூசாது கூறுவார். பொய்யுரை யானது மெய் பொய் என்ற வேற்றுமை அறிந்த இடத்தில் பிறப்பது. புனைந்துரையானது அவ்வேற்றுமையே பிறவாத இடத்திற் பிறப்பது. மாட்டின் உடலில் குதிரையின் தலையைக் கொண்டுவந்து பொருத்துவதை எந்த இடத்தில் காணலாம்? உள்ளுணர்வு உள்ள இடத்தில் அல்ல. ஒருவன் உலகிற்கண்டதைக் கூறுது தன்னறிவால் ஆராய்ச்சி செய்து 'இவ்வாறு இருந்தால் ஏற்புடைத் தாகும்' என எண்ணித் தான்கொண்ட அம்மாட்டின் உள்ளுணர்வையும் இக்குதிரையின் உள்ளுணர்வையும் ஒன்றுகப் பற்றவைக்கின்றுன். பாடுபட்டுத் தேடிப் பலநாள் சேர்த்துப் பொன்போலப் புதைத்துவைத்த உள்ளுணர்வு எனும் ஒப்புயர்வில்லாத ஒண்பொருள்களை, அறிவாழத்தால் வேண்டியபடி மாற்றிவைத்துச் சூதாடுவதே பொய்யுரை (கற்பிதம்) ஆகும். உள்ளுணர்வுகளைத் தேடி ஒன்றுகத்திரட்டி உருக்கிவார்த்து அழகிய பதுமைகளாக அமைத்து வைப்பதே புனைந்துரை (கற்பனை) ஆகும். ஆனல் புனைந்துரையில் புகழ்பெற்ற புலவர்களும் ஓர் உள்ளுணர்வோடு மற்றோர் உள்ளுணர் வினை ஒன்றுசேர்க்க நாம் காணவில்லையா? முன்சென்ற புலவர்பெருமக்கள் பாடியவற்றில் பலவற்றைக்கொண்டு தெய்வப்புலவர்கள் எனச்சிறந்து திகழ்ந்தோர், பழையதோர் கதையினையே புதிதாக எழுதவரவில்லையா? கம்பன் அஃததில் ஒவ்வோர் அகப்பை முகந்துகொண்டான் என்று எல்லோரும் இயம்பவில்லையா? இவை எல்லாம் உண்மைதான். ஆனல் முன்சென்றவர்கள் சொல்லியவற்றையே ஒன்றின்பின்னென்றுகப் பொறுக்கி வைப்பது புலமையாகாது. அவ்வாறு அப்பெரும் புலவர்களும் செய்ய வில்லை. கள்வரது தொழிலேயன்றிக் கவிகளது தொழில் அதுவல்ல. பழைய புலவர்கள் பாடியவற்றை எல்லாம் உருக்கிவார்த்து வேறொரு பொற்பதுமையை உலகிற்கு உதவுகின்றவர்களே தெய்வப் புலவர்கள்.

தெய்வப்புலவர்களது கதையிலே பழைய புலவர்களது கதையைத் தனியே பிரித்தறிவது பெரியாருக்கும் இயலுவதொன்றன்று. புத்தம்புதிய உள்ளுணர்வாகித் தமது கதையோடு இயைந்து ஒன்றாய் ஒளிர்வதுகண்டு அவர்களும் மகிழ்கின்றனர். நாமும் மகிழ்கின்றோம். ஆகவே உள்ளதும் இல்லதும் என்ற எண்ணம் எழுவதற்கு முன்னமே எழுந்த உள்ளுணர் வானது பொய்யுரை அல்ல என்பதை மறத்தலாகுமே! பொய்யுரை அல்ல என்பதை மறத்தலாகுமே! பொய்யுரை என்பது அறிவின் விளைவே யன்றி உணர்வின் விளைவாகாது.

இடம் பொழுது:- இவைதாம் அறிவுபடைத்துவைத்த பொருள்களே யாகும். இவையும் இவ்வுள்ளுணர்ச்சிக்கு ஒருதலையாக வேண்டியவை அல்ல, நமது புலனுணர்வுகளை இன்னபொழுதில் இன்ன இடத்தில் நிகழ்ந்தன என்று புனைந்துரை வகையால் இடத்தோடும் பொழுதோடும் தொடர்புபடுத்திக் கூறுவதே உள்ளுணர்ச்சியின் உயர்ந்ததொழில் என்பர் சிலர். ஆனால் வானத்தின் வனப்புடையதொரு நிறத்தினை உள்ளுணர் வால் காணும்போது என்னபொழுது என்போம், என்ன இடம் என்போம். ஆ என அலறி எழும் அவலக் கவலையை உள்ளுணர்வால் உணர் கின்றோம். ஊக்கம் உயர்ந்தெழுந்து ஓங்குவதையும் உள்ளத்தே காண் கின்றோம். இவற்றில் இடம் எங்கே இருக்கின்றது. பொழுது எங்கே புகுகின்றது. ஆனால் கதையின் ஒவ்வொரு பகுதியிலும் பொழுதினையும் இடத்தினையும் குறித்துக்கொண்டே போகவில்லையா? குறித்தாலும் அதை முதலாகி முடிய முடிவனவல்ல; துணையாகித் தொடர்ந்திடையே துண்டு படுவனவேயாம். எழுத்தும் ஒலியும் உள்ளுணர்வல்ல. ஆகிலும் அவை பாட்டிற்குத் துணையாவதுபோல இடமும்பொழுதும் துணையா கின்றன. அதுபற்றித்தான் தொல்காப்பியனாரும் நிலத்தையும் பொழுதி னையும் உரிப்பொருள் என்னாது அதனினும் வேறு பிரித்துத் தொடுத்து வைத்தார்.

அறிவு:— காட்சி, அறிவு, இடம், பொழுது என்றவையோடு நிற்க வேண்டுவதில்லை. அறிவின்செயல் எதுவும் உள்ளுணர்வாகாது. கதை யிலேவருகின்ற பெயர்வழிகள் அறவுரைகளும் அறிவுரைகளும் பேசு கின்றார்களே என்றால் அப்பெயர்வழிகள் தமது உள்ளத்தின் நிலையினை உணர்த்தவேண்டி அவற்றைப் பேசுகின்றார்களே யன்றி அறிவு கொளுத் தவோ அறத்தைப் புகட்டவோ பேசுகின்றார்கள் இல்லை என்க. ஓடாவி எழுதிய படத்திலே செம்மையும் கருமையும் முதலான பல நிறங்கள் திகழ்கின்றன. இவை இயற்கை நூலறிஞர்கள் கண்டறிந்த செம்மை கருமை முதலிய பொதுத்தன்மையை உணர்த்தவா அப்படத்தில் அமைந்துள்ளன. அல்லவே. ஓடாவிகண்ட உள்ளுணர்வை வெளிப் படுத்தத் துணையாகி நிற்கின்றன அல்லவா? அதுபோலவே கதையில் வருவோர் பேசும் அறவுரையும் அறிவுரையும் பேசுவோரின் பெருந்

தன்மையை உணர்த்தும் வகையால் உள்ளுணர்வோடு ஒன்றுபட்டு ஒளிர்கின்றன. கருங்கடலின் ஓரத்திலே வெண்டிங்கள் நீரில் மின்னிப் பொலிந்து எழுந்து பார்முழுதும் பால்மழை பொழிந்து முகிலிடையே தவழ்வதைக்கண்டு ஓடாவி அதனைத் தீற்றியபோதும், காதலனைப்பிரிந்த காதலி காட்டினிடையே கடலோடு கரைந்துருகித் தனிநின்று புலம்பிக் கதறுவதைக் கண்டுணர்ந்து இன்னிசைவாணன் யாழினைமீட்டி இன்னிசையாக நெகிழ்ந் துருகும்போதும், செங்கண் பொறிபறக்கச் சினங் கொண்டெழுந்து வெற்றி வெறிகொண்டமேலாம் மறவனின் வெஞ்சமர்க்கு அஞ்சா நெஞ்சினைப் பாவாணன் பாடும்போதும், அறிவுக்கு என்ன வேலை? இவற்றிற்கு அறிவுரை ஏன்? அறவுரை ஏன்?

**புலனுணர்வு:—** (Sensations) உணர்வு அறிவினும் வேறு என்பது கொண்டு வெறும் புலனுணர்வுதான் உள்ளுணர்வு என்று எண்ணி விடுதல் ஆகாது. ஐம்பொறிகளின் வழியாக நமது உள்ளத்திலே நம்மையும் அறியாமல் பொருள்கள் பல போய்ப் பதிகின்றன. சிற்சில பொழுது நமது உள்ளத்திலே என்ன உலவுகிறது என்று எண்ணிப் பார்க்கின்றோம். அந்த நிலையை ஊன்றிப்பார்த்தால் உள்ளுணர்வுக்கும் புலனுணர்வுக்கும் உள்ள வேறுபாடு எளிதில் விளங்கும். உள்ளுணர்வால் நாம் கண்டபொருளோ உருப்பெற்று விளங்குகின்றது? புலனுணர்வாக மனதிற் பதிந்தவையோ உருவற்று உள்ளே அமிழ்ந்து கிடக்கின்றன? பலனுணர்வை எண்ணிப் பார்த்தால் நினைவிற்கு ஒன்றும் வருவதில்லை. அங்கு என்ன காண்கின்றோம். ஒன்றும் இல்லை. புலனுணர்வும் உருப்பட்டெழுந்து கலக்கம் இன்றி விளக்கமானால் அப்போது அதனை உள்ளுணர்வு எனலாம். சிலர் புலனுணர்வின் கூட்டமே உள்ளுணர்வு என்பார்கள். வெறுங் கூட்டமும் உள்ளுணர்வாகாது. ஒரு சண்டை யோடு மற்றொரு சண்டையைப் பொருத்திவிட்டால் அமைதி வந்து விடுமோ? அந்தப் புலனுணர்வின் கூட்டமும் குழப்பமாகவே இருக்கும். ஆனால் புலனுணர்வுகள் ஒன்று ஒருருப்பெற்று எழுந்து விளங்குமானால் அப்போது அக்கூட்டத்தை உள்ளுணர்வு எனலாம்.

**நூலின் பகுதிகள்:—** ஒன்று திரண்டெழுதல் வேண்டும் ஆனால் கதையில் பல பகுதிகளும், பல பாட்டுக்களும் காண்கிறோமே என்றால் அவை உண்மையில் பிரிவுகள் அல்ல என்க. பாக்களில் பல எழுத்துக்கள் வருவதுபற்றி அவற்றை ஒவ்வோர் எழுத்துக்களாகப் பிரித்து ஒவ்வோர்பகுதி எனச் சொல்ல முடியுமோ? முடியாததுபோலப் பாக்களை யும் பகுதிகளையும் பிரிவுகள் என எண்ணுதல் ஆகாது. உலகவழக்குப் பற்றி அவ்வாறு சொல்ல வேண்டுவதாயிற்று. உண்மையில் நோக்கு மிடத்து கதைமுழுதும் ஒரே ஓர் உருவமாக ஒளிர்தல் வேண்டும்.

**வெளியிடல்:-** ஒன்று திரண்டெழுந்து உருப்பட்டு விளங்கினால்தான் உள்ளுணர்வு என உயர்த்திப் பேசலாம். விளங்கித் தோன்றுவதென்றால் என்ன? கண்டவன் கண்டதைக் களிப்பின் ஒருக்கால் கழறி வடுவான். நல்ல ஓடாவியானால் அவன் கண்ணெதிரே கண்ட கண்காட்சி அழகாகத் தோன்றுவதை அவன் மனக் கண்ணாடியில் வரைந்து விடுகின்றான். இன்னிசை வாணனானால் மனச்செவி குளிர இனிமையாகப் பாடி விடுகின்றான். பாவணனே அருஞ்சொற்றொடர்கொண்டு அழகாக உள்ள முணர எழுதிவிடுகின்றான். இவ்வாறு வெளிப்பட்டுத் தோன்றாத வரையில் உள்ளுணர்வே இல்லை எனலாம். "உள்ளத்தினுள்ளே கண்டேன், அதை எடுத்துரைக்க இயல வில்லை" என்றால் அது வெறும் புரட்டேயாகும். எண்ணம் எல்லாம் சொற்களாகவோ உருவங் களாகவோ இசைகளாகவோ இவை போன்ற மற்றொன்றாகவோ இருக்கின்றன. எண்ணும்போது ஊன்றிப் பார்த்தால் பொதுவாக நாம் சொற்கொண்டே எண்ணிப்போவது கண்டு வியப்படைவோம். இவ்வாறு சொல்லாகவோ, உருவமாகவோ, இசையாகவோ தோன்றாத வரையில் எண்ணம் ஒன்றும் எழவில்லை என்று திண்ணமாகச் செப்பி விடலாம்! உள்ளுணர்வானது பாவாணனுக்குப் பாட்டாகவும் இன்னிசை வாணனுக்கு இசையாகவும் ஓடாவிக்கு ஓவியமாகவும் வெளிப்பட்டுத் தோன்றுகிறது. தோன்றாது போனால் உள்ளுணர்வும் தோன்ற வில்லை என்று சொல்லிவிடலாம். வெறும் புலனுணர்வின் குழப்பந்தான் உள்ளே கூவுகின்றதெனலாம். நாம் கடலைப்பற்றி எண்ண வேண்டுமானால் அலையின் எண்ணம் வரும் ஒருவேளை; மற்றொரு பொழுது அதன் கருமை நிறம் நினைவிற்கு வரும். மற்றவை தெளிவாக விளங்குவதில்லை. கனவுகண்டாற் போலவும், கிணற்றுக் குள்ளிருந்து பேசுவதுபோலவும் உள்ளுக்குள்ளேயே கலங்கிக் குழப்பமாக இருக் கின்றன. ஊமன்கண்ட கனா என்ற உவமைகூட உரைத்தல் ஒண்ணாது. நமது நினைவிற்கு வரும் கருமையும் அலையும் கடல் முழுவதையும் உணர்த்தவில்லை என்று உணர்கின்றோம். இன்னும்பல அங்கிருத்தல் வேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால் அப்படத்தை எதுகொண்டு நிரப்புவதென்பது தெரியவில்லை. அவையும் நினைவிற்கு வந்தாலன்றிக் கடலினை விரித்துரைக்க முடியாது.

அந்த நிலையிலே, "உள்ளிருக்கின்றது; வெளியிட முடியவில்லை' என்கிறோம். உண்மையில் உள்ளேயும் ஒன்றுமில்லை. உள்ளிருப்பது முன்கண்ட கடலின் புலனுணர்வுதான். அப்புலனுணர்வுகள் தலைமயங்கிக் கிடக்கின்றன. அவற்றில் ஒன்றேனும் தலைநிமிர்ந்தெழுந்து உலகை எட்டிப்பார்க்க வரவில்லை. எவ்வளவு தூரம் நினைவிற்கு வருகிறதோ அவ்வளவுதூரம் அதனைச் சொல்லிக்கொண்டே விளக்குகின்றோம். அந்த நிலையில் சொல்கள்தாம் நமது எண்ணங்கள். உலகில் பொதுவாக நாம் உள்ளுணர்வால் நண்குணர்ந்தன ஒரு சிலவேயாகும். மக்கள், விலங்கு

போதல், வருதல், வெம்மை, செம்மை, பருமை, வன்மை என்ற சிற்சில சொற்களே நாமறிந்த உலகம். இவற்றிலே சில நமது உள்ளத்திலே மற்றையவற்றைவிடத் தெளிவாக விளங்குகின்றன. நம்முடன் பழகுவாரது முழுவடிவையேனும் தெளிவாக நமது மனக்கண் எதிரே நிறுத்த முடியுமா? ஒருவரது மூக்கினையறிவோம், இன்னொருவரது நாக்கினை யறிவோம், மற்றொருவரது நிறத்தினை அறிவோம்; அவ்வளவே அவர்களைப்பற்றி நாம் அறிந்தவை. ஓடாவி சிதறித் தெறித்த நிறங்களைப்போல இந்தச் சொற்கள் நமது உள்ளத்தே இருக்கின்றன. சிறு குழந்தைகள் ஒரு கோடுகிழித்து அதுவே தந்தையின் உருவம் என விளையாடுவது போல மூக்கையும் நாக்கையும் மனதிலே எழுதிவிட்டு அவையே மக்களின் உருவம் என்கிறோம்; உயிரே என்கிறோம். எனவே, நாமறிந்தவை நாம் கண்ட பொருள்களை நினைப்பூட்டும் முதற்குறிப்பே யன்றிப் பொருள் முழுதும் அவையல்ல. உலகநடையை நடாத்த இந்த முதற்குறிப்பே போதியவையாக இருக்கின்றன. இவ்வாறு மயங்கிக் கலங்கிக் குழம்பியிருக்கும் நிலையில் உள்ள நாம் 'உள்ளத்துணர்கின்றோம். உரைத்திட வரவில்லை, எனப் பறைசாற்றி நம்மையும் பிறரையும் மயக்குகின்றோம். வெளியே சொன்னால் வெட்கக்கேடு. அதனை மறைக்க இந்த நெடுமொழி. ஆனால் உண்மை ஓடாவிகளும் இன்னிசை வாணர்களும் பாவாணர்களும் இவ்வாறு உலகை மயக்க முடியாது. அவர்கள் உள்ளுணர்வால் உணர்ந்தவை எல்லாம் ஓருருவாகி வெளித்தோன்றியே விளங்கும். கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர், என்பது அணிநூலில் இல்லை.

**உணர்வே உரைநடை:** அணிநூல் எழுதும் படம் வெறும் புகைப் படம் அல்ல. உயிர் ஓவியமாகும். உள்ளுணர்வுதான் என்ன? ஊக்கம் உள்ளக்கிளர்ச்சி, மெய்ப்பாடு, சுவை என்பவை அல்லவா? ஆகவே அணி நூல் கூறுவன எல்லாம் உயிருள்ளனவாகவே உலவும் வெளியீடு வேறு; உள்ளக் கிளர்ச்சி வேறு; என்று ஒருசிலர் ஓயாது பிதற்றுகின்றனர். எழுதியநூல் இனியதாக இருக்கின்றது. சொன்னோக்கும் தொடை நோக்கும் பொருள் நோக்கும் அருள் நோக்கும் வியக்கத் தக்கவாறு அமைந்துள்ளன. ஆனால் உயிர் இல்லாத பாடல்கள்; உள்ளக் கிளர்ச்சி ஒன்றும் பிறக்கவில்லை என்று ஆராய்ச்சிவாணர்கள் கூறுவதைப் பலமுறையும் கேட்கின்றோம். உள்ளக்கிளர்ச்சி ஓருருப் பெற்று உள்ளுணர்வானதும் உரைநடையாகி வெளிவருகின்றது என்று கண்டோம். இஃது உண்மையானால் செய்யுட் போக்கும் உள்ளக் கிளர்ச்சியும் ஒன்றுதல் வேண்டும். இவற்றினை வேறு பிரிப்பது பித்தர் தொழிலாகும். உயிர் இல்லை என்றால் உடலும் இல்லை; உருவமும் இல்லை; உரைநடையும் இல்லை. சொல்நோக்கும் பொருள்நோக்கும் வெறும்நோக்கந்தான்.

**உள்ளுணர்வு:-** ஆகவே உள்ளுணர்வாவது வெளிப்பட்டுத் தோன்றும் உணர்வு; தர்க்கஞானத்தினும் வேறாகித் தனிநிற்பது. உள்ளது

இல்லது என்ற வேற்றுமையும், இடம் பொழுது என்ற எண்ணங்களும் எழுவதற்கு முன்னரே உள்ளது; அவை எழுந்தபின்னும் அவற்றிற்கு வேருகி விளங்குவது. உருப்பட்டு வெளித்தோன்றும் வகையில் உள்ளே கலங்கிக் குழம்பிக்கிடக்கும் புலனுணர்வுக்கு வேருகி வளவது. உள் ளுணர்வு உண்டென்ருல் அதனை வெளியிடவேண்டும். உள்ளுணர்வு தான் உரை. அவ்வுரை சொல்லேனுமாகுக இசையேனும் ஓவியமேனும் ஆகுக. உரையைத் தவிர உள்ளுணர்வு வேறல்ல. அதனினும் மிக்கதும் அல்ல, அதனில் குறைந்ததும் அல்ல.

**சுவையாராய்ச்சி:-** இதுவரை கூறியன எல்லாம் அணியின் இயல் பினை அறிவதற்கு வேண்டியவைபேயாகும். நாம் ஆராய்வதும் அணி யன்றே. அணியின் பிறப்பிடம், சுவை, மெய்ப்பாடு என்பதனை இதனுல் நன்கு அறிகிறோம். ஆனுல் சுவையினைக் கணக்கிட்டு எண்ணுவதால் பயனில்லை என்றும் அறிந்துகொண்டோம். சுவை பாட்டின்உட்பொருள் உலகம்போல் பரந்துகிடக்கின்றது. அதனை எண்ணி முடியாது. சட்டி யும் பானையும் கிடக்கின்றன. எல்லாம் மண்ணுல் ஆனவையே. அவற் றின் வேறுபாடு அவற்றின் வடிவவேறுபாடேயாகும். அவ்வடிவ வேறு பாடே குயவனது அருமை பெருமையை நமக்கு வெளியிடுகின்றது. அஃதே போலப் பாவலர்களது பாக்களின் முதற்பொருளாய் உள்ள சுவையினை அதன் வடிவ வேறுபாட்டு வாயிலாக ஆராய்தல் வேண்டும். வெறுஞ் சுவையினை எண்ணிக் கணக்கிடுவது உள்ளக் கிளர்ச்சியை ஆராய்ச்சி செய்யும் உள்ளத் தியற்கைநூல் அறிஞரது தொழிலாகும். உள்ளக்குறிப்பு உறுப்பெற்றெழுந்து உயிர்பெற்றுலவுவதை ஆராய்ந் தறிவதே பாட்டினை ஆராய்ச்சி செய்வாரது அரும்பணியாகும்.

நாம்செய்யவேண்டிய ஆராய்ச்சி எத்தகையது என்பது இதுவரை யிலும் எடுத்தியம்பியவற்றினின்றும் எளிதிற் புலனுகும்.

## சுவைகோடல்

**சொக்குமாந்தடி:—** சுவையாவது யாது என்பதையும் ஒருவகை யாக அறிந்தோம். அது நமக்கு எவ்வகையில் பயன்படுகின்ற தென்பதை யும் உணர்ந்தோம். கதையைக் காணும்போதும் கேட்கும்போதும் கதையிலே அழுவாரோடு அழுகின்றோம். களிப்பாரோடுகளிக்கின்றோம். வியப்பாரோடு வியக்கின்றோம். வெகுள்வாரோடு வெகிள்கின்றோம். கதையில்வருவாரது கருத்திலே கருவாகி உருப்பெற்ற உள்ளக்குறிப்பு

நமது உள்ளத்திலே புகுந்து ஒன்றுபடும் முறைதான் என்ன? ஓடாவி சில கோடுகளைக் கிழிக்கிருன். சில நிறங்களைத் தெறிக்கின்ருன். இந்தக் கோட்டையும் நிறத்தையுங்கண்டு கதறியழுகின்ருேம் களித்து மகிழ் கின்ருேம். சினத்து சீறுகின்ருேம், சிதைந்து வீழ்கின்ருேம். பாவாணன் பரதன் என்றும் படுதுயர் என்றும் சிலசொற்கள் சொல்கின்ருன்; கண்ணீர் ததும்பிக் கலங்கி நிற்கின்ருேம். இந்தக்கோடும் இந்த நிறமும் இந்தச் சொல்லும் இவ்வாறு செய்வது எதனுலோ? பாவலனின் எழுதுகோலும் ஓடாவியின் தீற்றுகோலும் சொக்குமாந்தடியோ? இந்தக் கண்கட்டி வித்தையை எவ்வாறு அறிந்துகொள்வது? இதனைச் சுவைகோடல் என்று பழந்தமிழர்கள் ஆராய்ந்து வந்தனர்.

பட்டலொல்லடர்:— எந்த ஆராய்ச்சியாயினும் சில பொது வான படிகளின்மேல்ஏறிச் சென்றுதான் உண்மைநிலையை அடைகின்றது என, மேலே எடுத்துக் கூறினேம். கடவுளைப்பற்றி ஆராய்வார் கண்ட உண்மைகளைப் பின்பற்றிப் பாட்டினை ஆராய்வார் தமது சுவை ஆராய்ச்சியைத் தொடங்குதலும் வியப்பன்று. மீமாம்ஸகர், நையாயிகர், சாக்கியர், வேதாந்திகள் என்று பலவகையாராகப் பிரிந்து கடவுளைப் பற்றி ஆராய்ந்த கொள்கைகளைப் பலவகையாக விளக்கி விரித்துரைப்பது போலச் சுவையினைப்பற்றி ஆராய்வாரும் பலவகையாக விரித்துரைக் கின்றனர். மீமாம்சகர்கள், மறைகள் கூறியவண்ணம் வேள்வி முதலிய செய்தொழுகினுல் மேலுலகில் இன்பம் பெறலாம் என்கிருர்கள். இவ் வின்பத்தை எமக்கூட்ட இறைவனே மற்று எப்பொருளோ இருக்க வேண்டுவதில்லை. வேள்வியே மேலுலகம்தரும் மேன்மையுடையது. வேள்வியேமுதல், மேலுலகமே அதன்செயல். தீக்கடை கோலைத்தேய்த்த போது தீப்பொறி பறப்பதுபோல வேள்வி வேட்டபோது மேலுலகம் விளைகின்றது. வேருென்றும் வேண்டுவதில்லை. வேள்வியின் நிழலே மேலுலகம். யக்ஞாதி வேதவிகித கர்மங்கள் காரணம் என்றும், ஸ்வர்க்கம் காரியம் என்றும் பூர்வமீமாம்ஸகர்கள் கூறுவதுபோலப் பட்டலொல்லடர் முதலானேர், விபவம் காரணம் என்றும் ரசம் அதனின் காரியம் என்றும் கூறுகின்றனர். முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்ற இவை உள்ள இடத்தில் சுவைபிறக்கின்றது. முதற்பொருள் முதலியவற்றை நேரே கண்டபோது நமது உள்ளம் உருமாறி நிற்பது உலக இயல்பே. ஆனுல் கதையிலே பொருள்களை நேரே நாம் காண்பதில்லையே? காணு திருப்பவும் கண்டதுபோலக் களித்தும் கதறியும் கதைகேட்டுப் போவா னேன்? வேண்டும் என்ருலும் நெருப்புத்தொட்டவரைச் சுட்டேவிடு கின்றது. வேள்வியானது மேலுலகைத்தந்தே விடுகின்றது. உள்ள நிலையைப்பற்றி ஒன்றும் உணர்ந்தறிய வேண்டுவதில்லை. அஃதே போலக் கூத்தினுள்ளும் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் கண்டபோதே சுவையும் பிறக்கின்றது. கூற்றும் நிலையும் விறலும் என்ற மூன்றுமே நமக்கு வேண்டியவை. அவர்களது உள்ள நிலையைப்பற்றி

ஆராய வேண்டுவதில்லை. ஸ்தாயிபாவம் என்று சொல்லப்பட்ட குறிப்பு, கதைக்குத் தலைவனிடத்தே காணப்படும் என்பது உண்மையே. அக் குறிப்பு, கூத்தில்வரும் பொருநனிடத்தில் இல்லையென்றால் சுவை இல்லாமற் போவதில்லை. கூற்றும் நிலையும் விறலுமாய் எழுந்த முதற்கரு உரிப்பொருள்களை எங்கேனும் கண்டவிடத்து அங்குக் கண்டவர்மனம் சுவையினைக் காண்கின்றது. இவ்வாறுவிரித்துரைக்கின்றனர் பட்டலொல்லடர் முதலானோர்.

சங்குகர்:— "போலியாக உள்ள பொருளானது உண்மையாக உள்ளதுபோலச் சுவையை விளைவிக்குமோ?" என்பதே கேள்வி. திருப்பணிசெய்ய வேண்டித் தேங்காய்கொண்டுவரத் தென்னைமரத்தின் மேலேறிய சிறுவன், சிறிது இடறிக் கீழ்வீழ்ந்து சிதறுண்டு செத்தானும். இதனை நேரே கண்டவர்மனம் என்னபாடுபட்டிருக்கும் இதனையே கதையில் கண்டால் மனம் அவ்வாறு மாறுமோ? அக்கூத்தினைப் பார்க்கும் அத்துணைப்போதும் அவன் இறக்கவில்லை என்ற எண்ணம் நம்மை விட்டுப் போவதில்லையே. ஆனையை நேரில்கண்டால்அஞ்சி ஓடுகின்றோம்; முன்னழகு காட்டிநின்றவர்கள் பின்னழகு காட்டி ஓடுகின்றனர். ஆனால் வள்ளியம்மை கதையில் வருகின்ற ஆனையைக்கண்டு அஞ்சுவார் யார்? தலைவனிடத்தெழுந்த உள்ளக்குறிப்பானது கூத்தாடியிடம் இருப்பதாக எண்ணுவதேன்? இக்குறைபாடுகளைக் கண்டசங்குகர் முதலாயினோர் நையாயிகரை ஒட்டி அநுமான வாயிலாகச் சுவையினை அறிகின்றோம் என்கின்றனர். நையாயிகர்கள் பொருள்களை அறிந்துகொள்ளும் முறையில் உய்த்தறிதலே சிறந்ததென்பார்கள். விபவாநுபவ வ்யபிசாரி ஸாம்யோகாத் ரஸா நிஷ்பத்திதி. "முதற்கரு உரிப்பொருள்கள், நிமித்தம் குறிப்பு என்றவற்றின் கூட்டத்தால் சுவை விளைகின்றது" என்று பரதர் கூறியதை முன்னரே குறித்து வைத்தோம். இதில் வரும் "நிஷ்பத்திதி" "விளைகின்றது" என்பதற்குப் பட்டலொல்லடர் முதலானோர் "உண்டாகின்றது" என்று பொருள்கொண்டனர். சங்குகர் முதலியோரோ "உய்த்தறியப்படுகின்றது" என்று பொருள் கண்டனர். புகைகண்ட வழி நெருப்புண்டு என்று உய்த்துணர்தல்போல முதற் கரு உரிப்பொருள்களைக் கண்டவழி சுவையினை உய்த்துணர்கின்றோம் என்றனர். கதையில்வரும் தலைவனும் கூத்தில்வரும் பொருநனும் வேறு என்று நாம் எண்ணுவதில்லை. அஃது எதனாலே. ஒற்றுமையால்? இவ்வொற்றுமை என்பதற்குக் கூத்துநூலில் ஒரு தனிப்பட்ட பொருள் உண்டு.

நாடகசாலையுள் நடிக்கப் புகுந்தோன் எடுத்துக்கொண்ட பாத்திரம் தன்னில் தான்வேறு என்னும் தனிநினைவு இன்றி அவனே தானே ஆகிய அந்நெறி ஏகன் ஆகி இயைந்திடும் உடையும்ஒன்றி இலங்குவது **ஒற்று**மையாகும், இதுவே ஒற்றுமையாகும். தீயிற் பழுக்கக்காய்ச்சிய இருப்புருண்டை நெருப்பும்இப்புருமாய்த் தாதான்மியசம்பந்தம்(ஒற்றுமைத்

தொடர்பு) பெற்று விளங்குவதுபோலப் பொருநனும் தலைவனும் ஒற்றுமை பெற்று விளங்குகின்றனர். நெருப்புக்கு உருண்டை வடிவம் இல்லை யாகவும் இரும்பில் இருப்பதனை இதன் மேலேற்றி நெருப்புருண்டை என்கிறோம். இரும்பினுக்குச் சூடு இயற்கையில் இல்லையாகவும் நெருப் பில் இருப்பதனை அதன்மேல் ஏற்றி இரும்பு சுடுகின்றது என்கிறோம். இதுவே ஒற்றுமைத் தொடர்பு. இவ்வொற்றுமைத் தொடர்பினால் பொரு நனிடத்துள்ளவற்றைத் தலைவனிடத்துள்ளனவாகவும், தலைவனிடத் தெழுந்தவற்றைப் பொருநனிடத் தெழுந்தவையாகவும் எண்ணிவிடு கின்றோம். ஆனால் இங்கெழும் அனுமானம் மற்றைய அனுமானங் களுக்கு வேறாகும். சங்குகர், சித்திரதுரக நியாயம் போன்றதோர் அனுமானம் என்பர். இந்த ஓவியக் குதிரையின் கதைதான் என்ன? ஓவியத்தில் குதிரையின் வடிவம் வரையப்பட்டிருப்பது கண்டு அதில் காணப்படும் சில வரிகளைக் கொண்டே உலகில் உயிருடன் ஓடும் குதிரையை உய்த்துணர்தல்போல முதற்கரு உரிப்பொருள்களின் முதற் குறிப்புகளாகக் கூத்தில் வருவனவற்றைக் கண்டு சுவையினை உய்த் துணர்கின்றோம் என்பர். ஆனால் நேரே கண்ட பொருளைப்போல உய்த்துணர்வுவாயிலாக அறிந்த பொருள் அத்துணை சுவை நிரம்பிய தாகுமோ? ஆகாதன்றே.

**பட்டநாயகன்.-** இக்குறைபாட்டினை அறிந்த பட்டநாயகன் முத லாயினர் உண்மையினை அறியவேண்டிச் சாங்கியர் கொள்கையினைப் பின்பற்றி ஆராயப் புகுந்தார்கள். வீட்டின்பமானது புறத்தே உள்ள பொருள்களைப் பற்றியதல்ல. உள்ளுக்குள்ளே ஒளிர்வது என்கின்றனர் சாங்கியர். பட்டநாயகன் முதலியோரும் புறவாராய்ச்சியை விட் டொழித்தே உள்ளத்துள்ளே புகுந்து சுவையினை உணர்கின்றனர். ஒவ் வொரு பொருளினை, முறையே வெளிப்படையாகவேனும் குறிப்பாக வேனும் உணர்த்தி நிற்கின்றது. இவ்வாறு பொருள்படு நிலையை அபீதா என்பர். ஒரு சொல் ஒரு பொருளுக்குக் குறியீடாகின்றது. இரண்டா வதாக ஒவ்வொரு சொல்லும் தான் குறிக்கும் பொருளை எல்லோரும் அறிந்த வகையில் பொதுவாக உணர்த்துகின்றது. இதனைப் **பாவகத்வம்** என்பர். இஃதே பொதுஉணர்ச்சி. முன்னே காட்டியது சிறப்புணர்ச்சி. குதிரை என்று நான் என் கண்ணெதிரே உள்ள பொருளைக் கூறுகின்றேன் அப்பொருளை அச்சொல்லும், அதன் பல சிறப்பியல்புகளோடு சுட்டி நிற் கின்றது. குதிரை என்ற சொல்லைப் பிறர் எல்லாம் கேட்டால், நான் கண்ட குதிரையின் உருவமும் வடிவமும் அவர்களது உள்ளத்தே வருவது இல்லை. ஆனால் பொதுவாகக் குதிரையின் உருவம் உள்ளத்தே உருப் படுகின்றது. ஒருசொல், பொருளையோ, இடத்தையோ, பொழுதையோ பண்பையோ. தொழிலையோ, உணர்த்தினாலும் அதன் பொதுஉணர்ச்சி ஒவ்வொருவர் உள்ளத்திலும் உண்டாகின்றது. கதையைக் காண்போரும் கேட்போரும் இந்தப் பொதுஉணர்ச்சி வாயிலாக பாவலன் கண்ட

திருவுருவைக் காண்கின்றனர், இவ்வாறு பொதுஉணர்ச்சி வாயிலாக நாம் உணர்ந்த பொருள் உள்ளத்தே இன்பத்தை ஊட்டுகின்றது. இதனைச் சொல்லின் **போஜகத்வம்** என்பர். இஃதே பொது நுகர்ச்சி. யான் ஒருவகையான கொடிமுந்திரிப் பழத்தைத் தின்று இனிக்கின்றதென இன்புறுகின்றேன். யான் நுகர்ந்த இன்பத்தினையே கொடிமுந்திரிப்பழம் தின்பார் எல்லாரும் நுகர்வதில்லை. ஆனால் யானும் மற்றையோரும் நுகர்ந்த இன்பம் ஒன்றாகாவிடினும் ஒரு தன்மையனவே என்பதில் என்ன ஐயம். கொடிமுந்திரிப்பழம் தின்றால் வரும் இன்பத்தைக் குவளைப் பூவைக்கண்டால் வருவதில்லை. இந்தப் பொதுநுகர்ச்சி ஒன்று இருப்பதனால்தான் பாவலன் துய்த்த சுவையைப் படிப்பவர் எல்லாம் சுவைக்கின்றனர். இவ்வாறு சுவையுணர்ந்து துய்க்கும் இன்பம் வெறும் நினைவல்ல வெறும் நுகர்ச்சியும் அல்ல உள்ளதன் உணர்வே ஆகும். அந்நிலையில் உள்ளம் உருகி ஒன்றுய்ப் பரவுகின்றது. சாங்கியர் சொல்லும் வீட்டின்பம் போன்றுள்ளது சுவை நுகர்ச்சி. ஆனால் சுவை நுகர்ச்சி வீட்டின்பத்தைப்போல உள்ளத்தையும் கடந்து நின்று ஒளிர்வதல்ல. அவ்வளவே வேற்றுமை.

**த்வனிகாரர்:-** த்வனிகாரர் முதலியோர் இதனை இன்னும் விரித்துரைத்துள்ளனர். சொற்கள் தமது பொருளைக் குறிப்பாலும் வெளிப்படையாலும் உணர்த்துகின்றன. பாவலன் கையில் அச்சொற்கள் அருமையான மையாகி அழகிய உலகங்களை எதிர்கொண்டு வந்து காட்டுகின்றன. பாவலனது உள்ளுணர்வின் ஆற்றலால் உயரிய பொருள்களை வெளியிடுகின்றன. இவ்வாறு வருவதை "த்வனி" அல்லது உள்ளுறை என்பர். அதுவே பாட்டுக்கு உயிர்நிலை. உள்ளக் கிளர்ச்சியை ஓங்கி எரியப்பண்ணுவது உயர்ந்த பாடலே யாகும். ஆனால் அவ்வுள்ளக் கிளர்ச்சியைச் சொற்களைக்கொண்டே வெளிப்படையாக விரித்துரைக்க முடியுமோ? முடியுமானால் உள்ளமும் சொல்லுக்கு அடங்கி நிற்றல் வேண்டும். அதுதான் இல்லையே. உரையையும் கடந்த நிலையன்றோ உள்ள நிலை. கற்கண்டு தின்றால் நாம் நுகரும் இனிப்புச்சுவையை எங்ஙனம் எடுத்துரைப்பது? கற்கண்டு தின்பதனால்வரும் சுவையைக் கூறிக் குறித்துவிடுவோமானால் கற்கண்டினை முன்னர்ச் சுவைத்துள்ளோர் அனைவரும் அவ்வினிப்புச் சுவையினை அறிந்துகொண்டு நாவில் நீரூற இன்பமடைந்து நிற்கின்றனர். கற்கண்டினை உண்டறியாதானுக்கு இவ்வின்பத்தினை எவ்வளவுதான் விரித்துரைத்தாலும் எள்ளளவும் உணரமாட்டான். அஃதேபோலப் பாவலன் புனைந்துரைப்பதில் ஒரு சிறிதும் அறியாதவன் பாட்டினைப் பாடி இன்பம் பெறுவதில்லை.

சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்- ஆனால் பாவலர்கள் பாடுவது உலகினர் அனைவரும் உணர்ந்துள்ள உள்ளக்கிளர்ச்சியே

யாதலினால் எல்லோரும் பாட்டுலக இன்பத்தில் மூழ்கித் திளைக்கின்றனர். சட்டியில் இருப்பதுதான் அகப்பையில் வருமானால் புலவன் காட்டும் புதுமை தான் என்ன? எல்லோரும் உலகைப் பார்த்துக் கொண்டே தான் பாரில் வாழ்கின்றனர். ஆனால் அதன் அழகை அறிந்தவர்கள் அரும்புலவர்களே. ஒரு தெருவழியே போய்க்கொண் டிருக்கின்றோம். இரு பக்கமும் தோப்பும் துறவும், குயிலும் மயிலும் முல்லையும் குல்லையும் தென்றலும் தேனும் வழிநெடுக வனப்பும் மணமும் பண்ணும் பாட்டும் இன்பமும் இனிப்பும் தந்து நிற்கின்றன. வேலையில் நாட்ட மாய் வேறொன்றும் காணமாட்டாது கடுநடையாய்ப் போகின்றோம். என்றாலும் நம்மையும் அறியாமல் அப்பொருள்களின் நிழல்கள் நமது உள்ளத்தே விழுகின்றன. இப்புதையலைப் பின்னொரு காலத்தே வெட்டி எடுப்பவன் பாவலனே யாகும். பேயாய் நிழலாய் ஒதுங்கி நின்றவை பெரியோரின் பாடல் கேட்டதும் பேருயிர்ப் பொருளாய் மாறிப் பேரின்பம் ஊட்டுகின்றன. இதுவே புலவன் செய்யும் புதுமை. என்றாலும் சட்டியிலிருந்ததுதானே அகப்பையில் வருகிறது. அறியாமையாகிய மறைப்பு நீங்கியதும் உள்ளிருந்த இன்பம் ஓவென்றெழுந்து ஒளிர்கிறது. ஒண்மொழிப் புலவர்கள் என உயர்ந்தோர் உள்ளுறையாலேயே இவ்வொப்பிலாப் புதுமையை எங்கும் எடுத்துக் காட்டுகின்றனர். ஆகவே த்வனிகாரரை உள்ளிட்டோர் 'நிஷ்பத்திதி;' என்றதற்கு 'உள்ளுறையால் குறிக்கப்படுகின்றது' என்று பொருள் கண்டனர்.

**பேராசிரியர்:—** தமிழர் சுவைகோடல் என்று ஆராய்ந்தபோதும் த்வனிகாரர் வந்த முடிவிற்கே வந்தனர் என்பதை இங்கே வற்புறுத்த வேண்டும். பேராசிரியர் "இவற்றைச் சுவைகோடல் என்பதென்னை எனின், நகையும் அச்சமும் முதலாகிய உணர்வு முற்காலத்து உலகியலான் அறிவான் ஒருவன், அவற்றிற்கு ஏதுவாகிய பொருள் பிற கண்டவழித் தோன்றிய பொறியுணர்வுகள் அவ்வச்சுவை எனப்படும்" என்று உரைத்துப் போதல் காண்க அவ்விடத்தில் பேராசிரியர் முன்னறிந்த உணர்வினை வற்புறுத்துதலும் காண்க.

**உள்ளுணர்வு:—** பாவலன், நாம் முன்னரே புலனுணர்வால் உணர்ந்த முதல் கரு உரிப் பொருள்களை உள்ளுணர்வால் உணர்ந்து புனைந்துரைத்துப் போகின்றான். புலனுணர்வாக நமது மனத்தே புகுந்தவை ஒண்மொழிப் புலவனின் உரைவழியே உள்ளுணர்வாக நமது உள்ளத்திலும் உருப்பெற்று ஓங்கி எழுகின்றன. நகை முதலாகிய சுவைகளும் உரைவழியே உள்ளுறையால் உணர்த்தப்படுகின்றன. பொது உணர்ச்சியும், பொது நுகர்ச்சியும் அச்சுவைகளை நமது உள்ளம் நிறையப் பாய்ச்சி விடுகின்றன. கதையில் வரும் தலைவன் நுகரும் சுவையும் உள்ளக்குறிப்பும் நமது மனக்காதில் எதிரொலியாக வந்து ஒலிக்கின்றன. நமது மனக் கண்ணாடியில் அவற்றின் நிழலைக்கண்டு உணர்கின்றோம். உள்ளக் குறிப்பும் முதல் கரு உரிப் பொருள்களும்

ஒன்றுகியபோது உள்ளுறைவழியாகச் சுவையினைத் துய்க்கின்றோம். நாம் சுவையுணர்ச்சியைத் தவிர வேறொன்றும் அந்நிலையில் அறிவதில்லை. சுவைதந்து நிற்றலே சுவையின் உயிர்நிலை. உள்ளக் குறிப்பு ஒரு சுவையல்ல. கதையைக் கேட்டோர் மனதிலும் கண்டோர் மனதிலும் கதையில் கண்ட உள்ளக் குறிப்பின் உயிர்நிழல் விழுகின்றது. அதனுல் மனம் மாறியபொழுது பொங்கிஎழும் உள்ளக் கிளர்ச்சியே நாம் சுவையுணர்ந்து துய்த்ததைத் தெளிவாக விளக்குகின்றது. உலகிலே பொருள்கள் முதற்பொருளும் வழிப்பொருளுமாய்க் காரண காரியமென்னும் தொடர் போடு விளங்குகின்றன. இத்தொடர்பு பாட்டுலகில் இல்லை. பாட்டுலகம் பெருவகையில் மண்ணுலகினும் வேருக அதனினும் உயர்ந்திருப்பதொரு பொன்னுலகம். உள்ளுணர்வால் ஒன்றுபட்டு விளங்கும் பல பொருள்கள் கொண்டு திகழ்வது. அப்பொருள்களுக்கு அங்குள்ள தொடர்ப்பாடு தான் என்ன? கண்டோர் மனதிலும் கேட்டோர் மனதிலும் உள்ளக் கிளர்ச்சியை எழுப்பிச் சுவையை ஊட்டும் தொடர்ப்பாடே யாகும். இஃது உள்ளுணர்வால் ஒன்றுகும் தொடர்ப்பாடாகும்; எனவே. முதற் கரு உரிப்பொருள்களை நாம் தனித்தனியாக உணர்வதில்லை. இவை எல்லாம் ஒன்ருக இயைந்து ஒருருப்பெற்று ஒரு சுவையாகி ஒளிர்கின்றன. மிளகும் கற்கண்டும் பச்சைக்கர்ப்பூரமும் இன்னும் பலவும் கொண்டு காய்ச்சிய குடிநீரானது, கலவைப் பொருள்களின் சுவை ஒவ்வொன்றையும் தனித்தனியே தாராது அவற்றிற்கு வேருயதோர் ஒற்றுமைச் சுவையைத் தந்து நிற்பதுபோல முதற் கரு உரிப்பொருள்களும் ஒன்றோன்ருகத் தனித்தனியே விளங்காது, ஒன்றுபட்டு ஒற்றுமையே உருவாய்ச் சுவைதந்து நிற்கின்றன. இது பற்றியே வடநூலார் அக்குடிநீரின் பெயராகிய ரஸம் என்பதனை இச்சுவைக்கும் பெயராக வைத்து வழங்கி வந்தனர்.

**சுவையுணர்வும் மெய்யுணர்வும்:—** த்வனிகாரரை யுள்ளிட்டோர் வேதாந்திகளைப் பின்பற்றித் தம் சுவையாராய்ச்சியைச் செய்துவந்தனர் ப்ரஹ்மாஸ்வாதமும் ரஸாஸ்வாதமும் ஒத்திருக்கின்றன என்பர். எந்நாளும் தானுக விளங்கிய கடவுளைத் தானுக அறிவதே மெய்யுணர்வு. எந்நாளும் நம்முள்ளேயே பதிந்துகிடந்த சுவையினை உள்ளுக்குள்ளே ஒளிர்வதாக உணர்வதே சுவையுணர்வு. தானென்பது, அறியாமை என்னும் மறைப்பாகிய தடையால் வந்தது; அந்தத் தடை போனதும் வருவது மெய்யுணர்வு. சிற்றறிவினதாயும் சிற்றளவினதாயும் உள்ள சிறப்புணர்வு நீங்குவதே சுவையுணர்வில் தன்னிழப்பாம். பொதுவாக மக்கட்கெல்லாம் எழும் உள்ளக்கிளர்ச்சி உள்ளொடுங்கி நிற்கின்றது. அவை நம்மையும் அறியாமல் உள்ளத்தே புகுந்தவை புலனுணர்வாய்ப் புதைந்துகிடப்பன. இவ்வறியாமை நீங்கியதும் குருமொழிபோன்ற புலவனது பாடல்களைத் தானறிந்த சிறப்புணர்வால் அளந்துபாராது பொது

வுணர்ச்சியால் உணர்ந்து பொது நுகர்ச்சியால் துய்க்கும்பொழுது சிற்றறிவாகிய புலனுணர்வாக விளங்கியவை பேரறிவாகிய உள்ளுணர்வாக உருப்பெற்றதும் ஒருவன் உவகைக் கடலில் மூழ்குகின்றான். முதற் கரு உரிப் பொருள்களே தடையை நீக்கிக் கீழ் இருப்பதைத் தட்டி எழுப்புகின்றன. ஆகவே அவற்றிற்குத் தடை நீக்கிகள் (விக்நப்ரசாரகர்) என்று பெயர். மெய்யுணர்விலும் மெய்ப் பொருளாகிய செம்பொருள் அன்றி வேறொன்றின் உணர்ச்சியும் இல்லை. சுவையுணர்விலும் சுவையினைத் தவிர வேறோர் உணர்ச்சியும் இல்லை. (விகலித வேத்யாந்தர;) அங்குபோல் இங்கும் உணரப்படும் வேறெவற்றின் தொடர்பும் இல்லை, (வேத்யாந்தர ஸ்பர்சசூந்ய).

**சிறப்பு** நிலையில் எல்லாம் செம்பொருளாகத் திகழ்வதுபோல, அணி நிலையிலும், முதற் கரு உரிப்பொருள் என்றவையெல்லாம் சுவையாக ஒருருப்பெற்று ஒளிர்கின்றன. வீட்டின்பம் உண்டென்பதற்கு என்ன சான்று? சிறப்பென்னும் செம்பொருள் கண்டோன் துய்க்கும் இன்பமே சான்று. அஃதேபோலச் சுவை உண்டென்பதற்கும் உணர்வினின் வல்லோர் சுவையினை நுகர்ந்து நிற்பதே சான்றாகும். (ஸகல ஹ்ருதய ஹ்ருதய ஸம்வேதன ஸாக்ஷிதாத்.) ''அறிவை அறிவது பொருளென அருளிய பெருமாளே'' என்றதற்கிணங்க அறிவை அறிந்தோர் அதற்குரியர்; உணர்வினின் வல்லோர் இதற்குரியர். அறிவிற்கும் உள்ள வேற்றுமையறிந்தன்றோ ''உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்'' என்று நன்னூலார் செய்யுளை உணர்வினின் வல்லோரிடம் ஒப்படைத்துவிட்டார்.

**அருமை:**— சுவையே பாடலுக்கு உயிர்நிலையாதலினாலே அதை ஆராய வேண்டுவதாயிற்று. ஒரு கதையே பலரும் பலவகையாக நின்ற நிலைவேறுபாட்டாலும் நோக்க வேறுபட்டாலும் பலபடக் கூறும்போது அவற்றின் வேறுபாடு எல்லாம் சுவை வேறுபாடாக அமைதலின் இங்கு இவ்வாராய்ச்சி எழுந்தது. அதிலும் சுவையினை உய்த்துணர்தலின் அருமைபற்றி விரித்துரைத்தல் இன்றியமையாததாயிற்று. உள்ளுறை பொருளும் (வஸ்துத்வனி) உள்ளுறை அணியும் (அலங்காரத்வனி) தமது சொற்றொடரின் பொருளாற்றலால் வேறொரு பொருளையும் அணியையும் குறித்து நிற்பதனை யாவரும் எளிதில் உணரலாம். அவை எல்லாம் (ஸம்லக்ஷியக்ரமத்தால்) புலப்படுமுறையால் வேறு பொருள் உணர்த்துகின்றன என்பர். அஃதாவது அவை படிப்படியாக வேறு பொருள் உணர்த்தும் முறை முழுவதும் நமக்கு நன்கு விளங்கி நிற்கின்றது. ஆனால் உள்ளுறை சுவை (ரஸத்வனி) தோன்றும்பொழுதோ வெளிப்படையான பொருளினும் வேறாயதொரு சுவை குறிக்கப்படுகின்ற முறை நன்றாகப் புலனாவதில்லை. சுவையினைத் துய்த்து மகிழ்கின்றோமே

அன்றிச் சுவை வந்த வழியினை அறிகின்றிலோம். இதனைப் புலனுகா முறை (அஸம் லக்ஷ்யக்ரமம்) என்று கூறுவர். இது பற்றியன்றோ தொல்காப்பியனுரும்,

“ கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே. ”

என்று சுவையாராய்ச்சியின் அருமையைப் பாராட்டி மெய்ப்பாட்டியலை முடிக்கின்றார். அதனால்தான் இவ்வாராய்ச்சி அருகி வழங்குவதாயிற்று. ஆகவே, உணர்வினின் வல்லோரே உணர்ந்து துய்க்கும் உயரிய சுவையினை, அப்பெரியோர்கள் எவ்வாறு தாம் துய்ப்பதாக ஆராய்ந்து உற்று நோக்கிக் கூறியுள்ளார்கள் என்பதனை இதுவரையும் ஆராய்ந்தோம்.

## தனிப்பாடல்கள்

சேக்கிழாரது சிறப்பியல்பை உணர்வதெனில் மற்றையோரது கதையோடு இவர்கதையை ஒப்புநோக்குவதாய் முடிகின்றது. கண்ணப்பர் அன்பிற்கொரு பெரும் எடுத்துக்காட்டாக விளங்கியவராதலினால், அவரைப்பலரும் பலவகையாகப் புனைந்து பாடிப் போற்றி இருக்கின்றார்கள். முதலில் அவரது கதை முழுதினையும் பாடாது, தமது பாட்டின் நோக்கத்திற்கேற்ப அக்கதையின் நுணுக்கங்களில் சிலவற்றை மின்னிப் பொலியச்செய்து மேன்மைபெற்ற பாடல்களை ஆராய்வோம். ஒரு கதையினையே வெவ்வேறு சுவைக்குறிப்புத் தோன்றுமாறு பலரும் பலவாருகப் பாடிப்போவது வியக்கத்தக்கது.

**திருமுறை.-** கண்ணப்பர் கதைதான் என்ன? அதனைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் ஒருபாட்டிலேயே தேனெமுகத் திருவருளால் பாடியுள்ளார், **திருநாவுக்கரையர்.**

“ குவப்பெருந் தடக்கை வேடன்
கொடுஞ் சிலை இறைச்சிப் பாரம்
துவர்ப்பெருஞ் செருப்பால் நீக்கித்
தூயவாய்க் கலசம் ஆட்ட
உவப்பெருங் குருதி சோர
ஒருகணை இடந்தங் கப்ப
தவப்பெருந் தேவு செய்தார்
சாய்க்காடு மேவி னரே.

என்ற இனிமை கெழுமிய திருநேரிசை, நமது அடிகள் தமது உள்ளுணர்வால் கண்டுகளித்த கண்ணப்பர் கதையினைத் தெளி வுறுத்துகின்றது. கண்ணப்பர் என்பார் பிறப்பில் வேடர்; உடல் உரம் எல்லாம் ஓருருப் பெற்ற வடிவினர்; திரண்டுருண்டு தடித் திருந்ததோள்கள் அவர் காட்டின் குழந்தை என்பதைச் சுட்டுகின்றன. அவர் வடிவிலும் பெரியர்; அதனால் மிகமிகப் பெரிய செருப்பினை அணிய வேண்டியதாயிற்று. அவரது வளைத்தது வளைத்தபடி இருந்தவில்லோ கொடுமையன்று வேறொன்றும் அறியாதது. உண்ணும் உணவும் இறைச்சியே, பெற்றவர்! உடலுரம் பெற்றவர். உடலை வளர்ப்ப தொன்றே நோக்காக உடையவர், அஞ்சாவன்னெஞ்சர். அத்தகையவர் அறிவுரம்பெற்று இறைவனே நோக்கமாகஉடையவராய் அன்புருவாய் நெகிழ்ந்தமை என்ன வியப்பு. கடவுளை எவரும் வழிபடாத வழியில் வழிபட்டார். ஊத்தைவாய் நிறைய நீர் முகந்து வந்து இறைவன் திருமுடி மேல் திருமஞ்சனமாட்டுவதுடன் இறைவனார் திருமுடிமேல் இருந்த வற்றைச் செருப்படியால் அப்புறம்உதைத்துத் தள்ளுவது. இவ்வளவே அவர் வழிபாடு; ஆனால் இவ்வளவேயோ? ஒரு கையில் இறைச்சியும் ஒரு கையில் வில்லும் ஏந்தி வருவதால் கையில் கொண்டு வர இயலாது தமது திருவாயில் முகந்து வந்தார்; கையால் விலக்கமுடி யாதபடியால் காலால் விலக்கினர். அன்பினாலேயே இவ்வளவும் ஆயது. ஆகவே அவர் செருப்பும் பெருமை யுடையதே. அவர் வாயும் தூய கலசமே. அதில் என்ன ஐயப்பாடு? கடவுள் கண்ணிலே உவக் காண் குருதி வழிகிறது. தமது கண்ணை முன்பின் பாராது இடந்து அப்புகின்றார் கண்ணப்பர். இறைவனும் அவரைப் பெருங்கடவுள் எனச் சிறப்புச் செய்கின்றான். இதுவே கண்ணப்பர் கதை. இறை வனார் இந்நாயனாரை இறைவனார் ஆக்கிய பெருமையையும், அதற்கு இவருக்கிருந்த தகைமையையும், எதிர்பாராத இடத்தில் இவ்வின்ப அன்பு எழுந்து திகழும் அருமையினையும் புகழ்வதாகும் இத்திருநேரிசை.

**சம்பந்தர்;-** இப்பெருமையையும் தகைமையையும் அருமையையும் பாராட்டித் திருஞானசம்பந்தப் பெருந்தகையார்,

“ கானலைக் கும்மவன் கண்ணிடந் தப்பநீள்
வானலைக் குந்தவத் தேவு வைத்தான்.”

என்று இரண்டு வரியில் கதையின் உட்கருத்தை உள்ளுணர்வால் கண்டு அருளிச் செய்தார்.

**நம்பியாண்டார் நம்பி:—** நம்பியாண்டார் நம்பியோ,

"ஏவுசெய் மேருத் தடக்கை
எழிற்றில்லை யம்பலத்து
மேவுசெய் மேனிப் பிரானன்றி
அங்கணர் மிக்குளரே!
காவுசெய் காளத்திக் கண்ணுதல்
வேண்டும் வரங்கொடுத்துத்
தேவுசெய் வான்வாய்ப் புனலாட்
டியதிறல் வேடுவனே"

என்று இறைவனது பெருமை ஒன்றனையே புகழ்கின்றார். இறைவனது வன்மைகண்டு மருட்கைகொண்டு பாராட்டுகின்றும் "எச்சில்நீரைத் தலையில் உமிழ்ந்து வழிபட்டான். அவனோ பிறப்பில் மிகமிகத் தாழ்ந்த வேடுவன். அவனுக்கும் வேண்டும் வரம் கொடுத்து இறைவனுக்கி விட்டான் இறைவன். எனவே, சிவனினும் அருளுடையார் யார்" என்று மெச்சிப் புகழ்கின்றார்.

**சுந்தரர்:-** சுந்தரமூர்த்திப் பெருமானாரும் இவ்வண்மையை

"திருநாவினுக் கரையன்
கணைகொள்கண்ணப்பன் என்றிவர்பெற்ற
காதல் இன்னருள் ஆதரித்தடைந்தேன்"

என்றும்,

"எறிந்த சண்டி இடந்த கண்ணப்பன்
ஏத்து பத்தர்கட் கேற்றம் நல்கினீர்
செறிந்த பூம்பொழில் தேன்றுளி வீசும்
திருமிழலை
நிறைந்த அந்தணர் நித்தம் நாள்தொறும்
நேசத் தாலுமைப் பூசிக்கு மிடம்
அறிந்துவீழி கொண்டீர் அடியேற்கும்
அருளுதிரே"

என்றும் பாடிப் பரவுகின்றார். அவ்வண்மையைப் பயன்படுத்திக்கொண்டு தனக்குக் அருள் செய்யவேண்டும் என இரக்கின்றார். "முன்னர்க் கண்ணப்பனை உள்ளிட்டோருக்கும் அருள்புரிந்தீர். ஆகையால் உம்மிடம் வந்தால்தான் அருள் பெறலாகும் என அறிந்தேன். அறிந்து வந்தடைந்த அடியேனுக்கும் அருள் செயல் வேண்டும்" என இறைவனது திருவருள் திறத்தினைச் சிறப்பித்துக்கூறி இரந்து நிற்கின்றனர், நமது ஆளுடைய நம்பிகள் மற்றோரிடத்திலும்

"நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்
நாவினுக் கரையன் நாளைப் போவானும்
கற்ற சூதன் நற்சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்ல னென்றிவர்கள்
குற்றம் செய்யினும் குணமெனக் கருதும்
கொள்கைகண்டு நின்குரை கழலடைந்தேன்
பொற்றி ரண்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப்புன் கூருளானே,"

என்று, இந்தக் கருத்தினையே வற்புறுத்திக் கூறுகின்றார், யான் "குற்றமே பெரிதுடையேன், உய்வகையுண்டோ என வருந்தினேன்; கண்ணப்பன் முறைதவறி அன்பு பாராட்டினான், இறைச்சியை யூட்டினான், எச்சில் நீராட்டினான், அவற்றை எல்லாம் குணமெனக் கொண்டு அருள் புரிந்தீர். அவனொருவனுக்கே யன்று நீர் அருள் செய்தது. மற்றும் பலரும் பயன் அடைந்தார்கள். குற்றமே செயினும் குணமெனக்கொள்ளும் கொள் கையே உமது கொள்கை என அறிந்தேன். குற்றமே பெரிதுடைய கொடியேனும் உம்மை வந்தடைந்தால் உய்வேன். ஆகவே உம்மை வந்தடைந்தேன் அருள் புரிதல் வேண்டும்" என்று வாயாரப் புகழ்ந்து கையார இரந்து நிற்கின்றார்.

**வேறுபாடுகள்:—** இறைவனது பெருமையை எடுத்துப் பேசவந்த பெரியோர்கள் ஒருவர் கூறியதுபோல மற்றொருவர் கூறாது பலவகையாகப் பலநயம்படப் பல சுவைதோன்றப் புனைந்துரைத்துப்போதல் ஆராயற் பாலதாம். ஆளுடையபிள்ளையார் புராண நடையை ஒட்டிக் கதையின் கருத்துரைத்தார். "காட்டாள் கண்ணப்பினான். வீட்டாள் ஆயினான். கண் கொடுத்து வீடு பெற்றான்" என்கின்றார். இக்கருத்தினையே புனைந்துரை வகையால் விரித்துரைத்துச் சொன்னோக்கும் பொரு ணோக்கும் மிக்கு விளங்கும் பாடல் ஒன்று பாடினார் ஆளுடைய அரசர். கண்ணப்பரது பெருந்தகைமைக்கும் பேரன்பிற்கும் ஏற்பப் பெரும்பேறு தந்துதவினார் என்று பெருமானின் பெருமையைப் பாராட்டுகின்றார். நம்பி யாண்டார் நம்பியோ "ஏதும் கெட்ட வேடன் எச்சிலை உமிழ அதற்கு மகிழ்ந்து வானகம் அருளிய அருட்பெருங் கடல் என ஆண்டவனைப் புகழ்ந்து அவருக்கிணையில்லை எனச் செருக்கித் திளைக்கின்றார் மற்றைய வர்கள் இறைவனது வன்மையைப் புகழ்வதோடு நின்றுவிட, ஆளுடைய நம்பியோ வள்ளல்களிடம் சென்று அவர்களை வாயாரப் புகழ்ந்து மணியும் பொன்னும் இரந்து நிற்கும் ஏழைகளைப்போலத் தாமும் இறைவனது பேரருளால் பயன்பெற வேண்டி இரந்து நிற்கின்றார். கண்ணப்பர் முதலி யோரது கதை எளியோருக்கும் உய்வகை உண்டு என ஊக்கம் தந்து நிற்பதனை அறிந்து பயன்படுத்திக் கொள்கின்றார்.

**அப்பர் அருள்:-** இன்னும் பல கருத்துக்களையும் இவ்வாறு அழகுபட அப்பெரியோர்கள் பாடியுள்ளார்கள். இறைவனுர் கண்ணப்பநாயனுரது அன்பின் வலைப்பட்டு அலைந்ததைத் திருநாவுக்கரையர் மற்ருெரு திருநேரிசையில் தெரிவிக்கின்ருர்.

" காப்பதோர் வில்லும் அம்பும்
கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத்
தூயவாய்க் கலச மாட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய
குருதிநீர் ஒழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார்
குறுக்கைவீ ரட்ட னுரே. "

என்று இறைவனது இளகிய மனதைப் புனைந்துரைக்கின்ருர். அன்பன் தமக்காகத் தனது கண்ணையே அம்புவிட்டு அகழ்ந்தெடுத்துக் கொள் வதைப் பொறுக்காதவராய் நின்ருர் கடவுள். "கோப்பதும் பற்றிக் கொண்டார்" என்று இறைவனுர் குதித்தெழுந்து துடிதுடிப்பதுபோல ஓசையும் பொருளும் வரக் கூறியது அருமையினும் அருமை, இறை வனுர் அருட் பெருங்கடல் என்பதை "அருள் என்பதன் படம் எழுதிக் காட்டித் தெளி வுறுத்தினுர். கையோடு கையாகக் கண்ணப்பனது அன்பின் பெருக்கையும் கூறியருளினுர்.

**மணிவாசகர்-அன்பு:—** கடவுள் அருள் இருந்தவாறு அது வாயின் கண்ணப்பன் அன்பிருந்தவாறுதான் என்ன? ஆளுடைய அடிகளே அதன் உண்மையை அறிந்தவர். மணிவாசகப் பெருமானும் கண்ணப்பர் பெருமையையும் ஆண்டவனுர் அருளையுமே புகழ்ந்துரைக்கின்ருர். ஆனுல் அவர் வேறு வகையாகப் புனைந்துரைக்கின்ருர். அப்புனைந் துரையில் கண்ணப்பர் அன்பே தலை சிறந்து விளங்குகின்றது.

" கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை
கண்டபின்
என்னப்பன் என்னெப்பில் என்னையுமாட்
கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற
வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய்
கோத்தும்பீ "

என்னும் திருச் செய்யுளினை அறியாதார் யார்? "கண்ணப்பரே அன்பில் தலை சிறந்தார். ஆண்டவனும் அவரைப்போன்ற அடியாரையே வேண்டி நின்றார். பலநாள் தேடிப்பார்த்தார். அவர்க்கு ஒப்பானவரைக் காண்பது எவ்வுலகிலும் அருமையர்யது. 'இனி என்செய்வது' எவ்வளவு கீழானவராயினும் அன்பராக்கிக் கொள்வது' எனப் புறப் பட்டார். புறப்பட்டார்முன் எதிர்ப்பட்டேன் ஏதும் கெட்ட என்னையும் வா என அன்புடன் அழைத்து ஆட்கொண்டருளினார் ஆண்டவர்' எனவியந்து பாராட்டுகின்றார். இந்தக் கருத்தை ஒட்டிச் சிவப்பிரகாசனாரும் பாடி யிருப்பது திருமுறை யல்லவாயினும் ஒற்றுமை பற்றி இங்கேயே கூறி விடலாம். மணிவாசகரை ஒட்டிப் பாடியதாகும். அப்பாடல் அடிகள் தம்மொடு கண்ணப்பரைவைத்து வேற்றுமை கூறினாற்போலச் சிவப் பிரகாசரும் தம்மொடு வைத்து வேற்றுமையை விரிவாகக் கூறுகின்றார். ஆனால் அப்பாடல் வேறு வகையில் அமைந்துள்ளது.

" ஆடுற அடியேன் புதுக்குடம் தருநீர்
அன்பன் வாய்ப் புனலுனக் காமோ
கூடையின் மலர்பித் தையிற்றரு மலரோ
கூறுமென் கவியவன் மொழியோ."

என்று இரங்கிக் கதறுகின்றார். ஈது சேக்கிழாரினின்றும் சிவப்பிரகாசர் தமதுநூலில் திருடிவைத்துச் சாணைபிடித்ததோர் அருமணியாகும். (கண்ணப்ப நாயனார் புராணப் பாடல் 156-163.) சிவப்பிரகாசரது பாடல் மணிவாசகரது மற்றொரு பாடலிடம் நம்மை இழுத்துச் செல்கின்றது. நீராட்டல் பூச்சூட்டல் ஊண் ஊட்டல் என்ற வகையிலே கண்ணப்பர் வழிபாடும் மற்றையோரது வழிபாடு போலவே இருந்தது. ஆனால் முன்னதன் ஆழம் என்னே, என்னே!

" பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள்
போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம்
ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய
மெய்குளிர்ந்தங்கு
அருட்பெற்று நின்றவா தோள்நோக்கம்
ஆடாமோ."

என்கின்றார். கண்ணப்பர் அன்பின் அருமையை அடிகள் அறிந்தது போல வேறு யார் அறிவர். கண்ணப்பர் அன்பு அத்தகையது ஆதும்.

**பட்டினத்தார்-அருமை:—** அவ்வருமைபற்றி யல்லவா பட்டினத் தடிகள் அதனை எண்ணியதும் திடுக்கிடுகின்றார். கண்ணப்பரது திருத் தொண்டினைப் புகழ்ந்து வியந்து, 'அரிது அரிது' என நடுநடுங்கி "அங்ஙனம் செய்ய மாட்டாத யான் எங்ஙனம் உய்வேன்" என்கின்றார்.

"வாளான் மகவரிந் தூட்டவல்
லேனலன் மாது சொன்ன
சூளால் இளமை துறக்கவல்
லேனலன் தொண்டு செய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல்
லேனலன் நான்இனிச் சென்று
ஆளாவ தெப்படி யோதிருக்
காளத்தி அப்பனுக்கே."

என்று இரங்குகின்றார்.

## தனிப்பாடல்கள்

### உவமை

கண்ணப்பர் கதையினை உள்ளுறைப் பொருளாகக்கொண்டு புனைந் துரைத்த பாடல்களைக் கண்டோம். இனி அவர் கதையினை உள்ளுறை அணியாகக் கொண்டு பாடுவாரது செய்யுள்களையும் சிறிது ஆராய்வோம். நம் நாயனாரது கதை உலகறிந்ததொன்றாகலின் இவர் கதையினை உவமை யாகக் கொண்டு மற்றைய பொருள்களை விளக்கவருவார் பலர் ஆயினர். அறிந்தது கொண்டு அறியாததை அறிவிப்பதே உவமையின் உண்மைத் தொழிலாகும். அவ்வாறாயின் இவ்வடியார் அருங்கதையை அறியாதார் யார்? ஆகவே உவமையாதற்கு உரிமையுடையதே யாகும். மற்றும் "உள்ளுங்காலை உயர்ந்ததன் மேற்றே" என்று தொல்காப்பியர் கூறிய படி உவமையாக உரைக்கப்படும் பொருள் உயர்வுடையதாகவும் ஒளிர் தல் வேண்டும். அவன் கதையும் இவன் கதையும் ஆகாது சிவன் கதை யேயாகித் திகழும் இவ்வன்பின் பெருங்கதையை உயர்ந்தனவற்றில் எல்லாம் உயர்ந்ததென உரையாதார் யார்?

**கந்தபுராணம்:—** கச்சியப்பர் தாம்பாடிய கந்தபுராணத்தில் நாட் டினைக் கூறவந்து, நாட்டினை நாடாக்கும் ஆற்றினைப் புகழத் தொடங்கு கின்றார். ஆற்றினை ஆருக்குவதும் மழையே யன்றோ. அம்மழையும்

மழையாவது எதனுலே? அதனைக் கூறவந்த உயிர்நிலையான இடத்திலே தான் கண்ணப்பர் கதையை உவமையாகக் கூறுகின்ருர். இறைவன் கதையைக் கூறவந்தவர், அதனைக் குறிப்பாக அறிவித்தற்கு இவ்வன்பின் அருங்கதையை அழகியதோர் உவமையாகக் கொண்டது பாராட்டற்பால தாம். அந்நாட்டில் அவ்வாறு பாய்வதால் அன்பு பாய்வதைச் சொல்லவும் வேண்டுமோ? ஆறு பெருகி வழியும்படி மழை பொழியும் முகிற் குழாங் கள் கடலின் நின்றும் நீர் முகந்து வந்து நந்தி மலைமேல் சொரிவதனைக் கண்ணப்பரது செயல்கொண்டு விளக்குகின்ருர். வில்லும் கையுமாய் வரும் கறுத்த கண்ணப்பர் முகரியிலிருந்து வாயில் முகந்து வந்த நீரை சிவலிங்கத்தின் மீது திருமஞ்சனம் ஆட்டுவது போலக் கறுமுகிற் கூட்டங்களும், வானவில்லொடு தோன்றி நந்திமலையின்மேல் கடலினின் றும் தம் வாயில் முகந்துவந்த நீரை அன்புடன் மலைகுளிரக் கொட்டு கின்றன என்கின்றனர்.

"பூட்டு கார்முகந் தன்னெடும் தோன்றிய புயல்வாய்
ஊட்டு தண்புனல் நந்தியங் கிரிமிசை உகுத்தல்
வேட்டுவக்குலத் திண்ணனுர் மஞ்சனம் விமலற்(கு)
ஆட்டுகின்றதோர் தனிச்செயல் போன்றுள தன்றே."

என, வண்ண உவமமும் வடிவஉவமமும் வினையுவமமும் பண்புவமமும் பயனுவமும் வரப்பாடினுர் பாடவல்ல பெரியார். அங்கும் ஒரு வில். இங்கும் ஒரு வில். வளைத்துவைத்திருக்கும் வில் – கொடியதே. ஆனுல் இறைவன் மேல்வைத்த அன்பினுல் ஆயது. அங்கும் கறுத்த திருமேனி இங்கும் கறுத்த வடிவம். இவரையும் இதனையும் காணக் கண் அஞ்சும். கெடுப்பதும் எடுப்பதும் இரு நிலையிலும் காணலாம். அதோடு நந்தி மலையும் ஒரு சிவலிங்கந்தானே. அதனை நினைப்பூட்ட நந்தியங்கிரியை அதன் பெயரோடும் கூறினுர். கடல் நீர் புயலினது வாயில் "ஊட்டுதண் புனல்" ஆயிற்று. கண்ணப்பர் வாயில் முகரி நீர் அந்தணர் தமது அன்பு நீரானதையும் உள்ளுறையாக உணர்த்தி விட்டார்.

மழையின்றி வற்ருந்தரையாக மாறிய மலை, மழை பொழிந்ததும் புல்லும் பூண்டும் விளையப்பெற்றுப் பச்சைப் பசேரெனப் பட்டாடை உடுத்தியதுபோல விளங்கி, இலையும் பூவுமாய்ச் செழித்தமரங் களோடு விம்மிதமாய்ச் செல்வத்தில் திளைத்துச் சிரித்து வாழ்வதுபோலச் சிவபெருமானும் அடியாரது அன்புநீர் பட்டதும் அளவிலா இன்பம் பெற் றனர் என்பதும் உணர்கின்ருேம். இச்செய்யுள் தோண்டச் சுரக்கும் மணற்கேணி யாதலின் இவ்வாறே இன்னும் விரித்துரைத்துக் கொண்டே போகலாம். திண்ணனுர் செய்த திருமஞ்சனத்தின் சிறப்பினை எல்லாம் இச்செய்யுளொன்றிலேயே தெளிவாகவும் சிறப்பாகவும் தேனெழுகவும் திறமையாகவும் புனைந்துரைத்தமை புலவரது பெருமையே யாகும்.

**மருதவன புராணம்:-** முன்னோர் மொழிபொருளைப் பொன்னே போலப் போற்றுவது மரபாதலினாலே மருதவனப் புராணமுடையார் கந்தபுராணத்திலிருந்து ஓரகப்பை அள்ளித் தமது நூலில் சுவைபடக் கலந்து கொண்டார்.

"துங்க வெற்பினில் கருமுகில் சிலையொடும் துன்னி
பொங்கு தீம்புனல் சொரிதரல் புரையுநீ டெழிலார்
எங்கள் காளத்தி இடத்திலோர் அன்பன்வாய் இருநீர்
சங்க ரன்திரு முடிமிசை உமிழ்ந்திடும் தன்மை."

என வருதல் காண்க. எனினும் கந்தபுராணம் கந்தபுராணந்தான். மருதவனபுராணம் மருதவன புராணம்தான். இனிமையைப்பற்றி எல்லோரும் அறிவர், ஆகலின் யாம் ஒன்றும் எடுத்துரைக்க வேண்டுவதில்லை. கொடுந் தொழிலைக் குறிக்கும் வில்லினை அன்பின் வழிப்பட்டு ஆண்டவனைக் காத்தற்கு வேண்டி அறுபது நாழிகையும் வளைத்தபடியே பூட்டி வைத்திருத்தல் இங்குக் குறிக்கப்படவில்லை. வானவில் முழுதும் வளைந்திருந்தால்தான் வனப்புடைத்தாய் கண்டோர் கண்ணைக் கவர்கின்றது. இவ்வியற்கை யழகும் இங்குக் குறிக்கப்படவில்லை. "பூட்டு கார்முகம்" இருந்த இடத்தில் வெறும் சிலைதான் விழுந்து கிடக்கின்றது. காற்றில் அலையுண்டு முகிற்குழாம் வந்து தோன்றும்போது நமது உள்ளம் உவக்கும் நிலையினை என்னென்று இயம்புவோம். உழுதொழில் செய்து அவ்வுவகையை உணர்தல்வேண்டும். அங்ஙனமே செடியும் புதரும் மரமும் காடுமாய் உள்ள மலையில் வருகின்ற கண்ணப்பர் அவற்றால் மறைப்புண்டு பின் அருகில் வரவர வெளிவந்து பேருருவோடு தோன்றுதலும் கண்ணப்பர் கதையில் அழகுடையதோர் இடமாகும். அந்த அண்மை நிலையில் ஆண்டவன்மேல் வைத்த அன்பினால் அவரிடம் காணப்படும் பரிவும் பரபரப்பும் நினைவிற்கு வருகின்றன. இவ்வளவும் "தோன்றிய" என்னும் சொல்லில் உள்ள பொருள் ஆற்றலாகும். "துன்னி என்பது அத்துணைச் சிறப்புடையதன்றே. "ஊட்டு தண்புனல்" என உயிரூட்டி உவக்கச்செய்யும் தன்மையையும் செந்தண்மை பூண்டொழுகும் பெருமையையும் எடுத்துரைத்தார் கச்சியப்பர். அதுவுமன்றித் திருமஞ்சனமாட்டியபோது உடல் குளிர்ந்ததைக் குறிக்கத் தண்மையையே கூறினார். வாய்க்குள் அடங்கிய நீராதலின் பொங்குதல் கூறவில்லை. புனல் என்றதும் உண்பதை நினைத்துக்கொண்டு இனிமையைப் புகழத் தொடங்கிப் பொங்குதீம்புனல் என்கிறார் மருதவன புராணமுடையார். முகில்வாயில் முகந்துவந்த நீரன்றோ! அதற்கேற்ப உகுத்தல் என்று சொல்வதே பொருத்தமுடைத்து: சொரிதல் என்றாலோ முகிலை நினைந்து அதன்வாயை மறந்த கதையாக முடியும். கெடுக்குந் தன்மையையுடைய முகிலே கைதூக்கி எடுக்குந் தன்மையோடு வந்துளது என்பதைக்

குறிக்க உவமையில் திண்ணனுரது வேட்டுவக்குலத்தினை நினைப்பூட்டினுர் கச்சியப்பர். கண்ணப்பராவதற்கு முன்னுகத் திண்ணனுராக நின்ற நிலையையே உவமையாகக் கூறியதும் தகுதி உடையதேயாகும். மழை பொழிந்த பிறகு மலையும் நாடும் இன்புற்ற நிலை கண்ணப்பரது வீட்டுநிலையோடு ஒக்கும். ஆனுல் மழைபொழியத் தொடங்குகின்ற நிலையில் கண்ணப்பரை விடத் திண்ணனுரே சிறந்த உவமையாவர். மருதவன புராணமுடையார் இந்த இரண்டு நிலையையும் வேறுபடுத்தாது அன்பர் என்று கூறினுர். என்ருலும் திருமஞ்சனமாட்டியது திண்ணனுராய்த் திகழ்ந்தபோதே ஆதலின் அன்பர் என்பதற்கு அவ்வாறே பொருள் கொள்வோமாக. மருதவன புராணமுடையார் "இருநீர்" என்றும் "உமிழ்ந்திடும் தன்மை" என்றும் வேறு சுவைபடக்கூறுவர். கச்சியப்பர் தமது நோக்கத்திற்கேற்ப "மஞ்சனம் ஆட்டுகின்றதோர் தனிச்செயல்" என உவமையைச் சிறப்பித்துக் கூறுவர். நந்திமலையின் உடல் முழுதும் நனைந்ததுபோல இறைவன் உடன் முழுதும் குளிர்ந்தது என்பதை உணர்த்த வேண்டினுராகையால் மருதவனத்தார் போலத் திருமுடியொன்றினையே எடுத்துக் கூருது "விமலற் காட்டுவது" எனப் பொதுவாகப் புனைந்துரைத்தார். "நந்தியங்கிரி" என்பது போலத் "துங்க வெற்பு" என்ற சொற்ருெடர் சிவலிங்கம் என்பதனைக் குறிக்கும் பொருளாற்றல் உடையதல்ல. இவ்வளவும் கூறியதால் தெய்வப்புலவர் திருமொழியில் ஒருசொல் மாற்றினும் பொருள் வேறுமாறி வெறும் மொழியாகும் என்பது தெளிவாகும்.

**தியாகராஜ லீலை:-** அறிஞர் மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களும் தமது தியாகரஜலீலை என்னும் இனிய நூலில் நாட்டின் நீர்வளத்தைச் சிறப்பிக்கத் தொடங்கி முகில்கள் உப்புநீரைக் கடலின் நின்றும் முகந்து வந்து பின்னர் நன்னீராகப் பெய்ய அந்நீர் கடலிற் சேருவதை அழகுறப் பாடவேண்டினுர். உப்புநீரை முகில்களுக்குத் தந்து இனிப்பு நீரைப் பெற்றது கடல் என்ருர். இதனை விளக்கக் கண்ணப்பரை உவமை காட்டினுர். இழிவான இறைச்சியை இறைவனுக்கு ஊட்டிவிட்டு இறைவனிடமிருந்து இணையிலாப் பேரின்பம் கண்ணப்பரும் பெற்ருரன்ருே? சிறிது கொடுத்துப் பெரிது அடித்துப்போகும் வகையில் கடலின் செய்கையும் கண்ணப்பர் செய்கையும் ஒத்துள்ளன என்கின்ருர்.

"இழிதக இறைச்சி எச்சில் எம்பிரான் உண்ண நல்கி
அழிவில்பே ரின்பந் துய்த்த அன்பர்கண் ணப்பரே போல்
இழிதக உவர்நீர் எச்சில் எழிலிகள் உண்ண நல்கி
அழிவிலின் சுவைய நன்னீர் அருந்திய தாழி மாதோ"

என்ருர். எம்பிரான் என இறைவனது பெருமையைச் சுட்டினுர். அத்தகையவர் இறைச்சி - அதிலும் இழிதகைய பன்றி இறைச்சி - அதிலும்

எச்சில் இறைச்சி உண்டார். ஏன்! ஆண்டவன் வேண்டிய அன்பு அங்குண்டு. கண்ணப்பர் அன்பர் என்ற மறைபொருளையும் வெளியிட்டார். ''கருங்கடல் என்ன நின்ற கண்படா வில்லியார்'' என்று சேக்கிழார் புனைந்துரைத்தார் ஆதலினால் அன்பில் அழியாரென அடியாரை ஆழிக்கு உவமை கூறுதலும் பொருத்தமுடையதேயாகும்.

எழுச்சியை யுடையது இங்கே கடல் மட்டத்திற்கு இழிந்தது. அக்கடல் நீரோ உவர்நீர். அதிலும் நீச்சு நாற்றம் உடையநீர். அகத்தியன் விட்ட சிறு நீராகிய எச்சில் நீர். அவ்வாறுயின் அதை உண்வான் ஏன்? அதுதான் ஆழி. அதுதான், எழிலிவேண்டிய நீர் அகப்படும் பெருநீர் நிலை.

**பெருந்துறைப் புராணம்:—** இப்பெரியாரே திருப்பெருந்துறைப் புராணத்தில் நாட்டின் ஐந்திணையையும் ஐந்திணை மக்களையும் பழைய வழக்கப்படி பாடவந்தார். வேடரைப் புனைந்துரைக்கத் தொடங்கி அவர்கள் செயலை விரித்துரைத்தார். கொலையும் புலையும் கள்ளும் மடமையும் கூறினர். ஆனால் கண்ணப்பருக்குப் பின் இன்னோர் செயலை எம்மனோர் இகழ்தலாகுமோ என்று அவர்களையும் உயர்த்தித் தாம் கூற வந்த நாட்டையும் சிறப்பித்தார்.

> "கடமை பன்றி மான் முதலிய மிருகவூன் கவர்ந்து
> சுடர்கொ ளுந்தழற் காய்ச்சுபு தேனிற் ரேய்த்தருந்து
> மடமை என்னெனக் கிராதரை இகழவா யுண்டோ
> படவ ராவணி காளத்தி யார்செயல் பார்த்தும்"

என்று பாடுகின்றார். இஃது நேரே உவமை கூறியதல்ல எனினும், நாட்டு வளத்தை விரித்துரைக்கும் வகையில் மற்றைய வற்றோடு இயையுடைமையின் இடைப்பிறவரலாக இங்கேயே கூறினோம்.

**குற்றாலப் புராணம்:—** இழுமெனும் அருவிபோலத் தங்கு தடையின்றி ஓடும் திருக்குற்றாலப் புராணம் பாடிய திரிகூட ராசப்பக் கவிராயர் அப்புராணத்தின் முதலில் அவையடக்கம் கூறுகின்றார். இறைவனே மிகப் பெரியவன். பெரியோரால் புகழப் பெற்றவன். அவரது புராணத்தைப்பாடத்தொடங்கிய யானே புழுவினும் சிறியேன், எனினும் என் புன்சொல்லும் அவனுக்குகந்த பொன் சொல்லாகும். எங்ஙனம்? முன்னொரு நாளில் கண்ணப்பனரது எச்சிலையும் அமிழ்து எனக் கொண்டாடி உண்டான் அன்றோ? அங்ஙனமே என் குறை சொல்லும் அவனுக்கு நிறை சொல்லாகும்.

"கவையடி விலங்கின் வல்லூன்
கண்ணப்பர் கனிவாய் ஏறி
அவிகளின் அமிழ்தின் மிக்கா
அமலனுக் கானுற் போல
குவிதரு நெறியொன் றில்லென்
குறைமொழி நிறைசொல் மேலோர்
செவிபுகிற் றிரிகூ டத்துச்
செல்வனுக் கினிய தாமால்."

இழிதகையதாகிய இறைச்சி கண்ணப்பர்வாயிற் புகுந்ததால் தூய தாகியது; என். புன்சொல்லும் பெரியோர் செவி புகுந்தால் தூயதாகும். கனிவாய் என்று கண்ணப்பர் வாயைச் சிறப்பித்தமை காண்க. அவியினை உவமை கூறியதைப் பெரியபுராணத்திலும் காண்கின்றோம்,

**திருவாரூர்ப் புராணம்:—** கண்ணப்பர் கதையின் உயிர்நிலை எதுவோ அதனை எடுத்து உவமையாகக் காட்டினர் திருவாரூர்ப் புராணம் உடையார். ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவர் பெரியார் என மரபில் வழங்கிவரக் காண்கின்றோம். கல்வியில் அனந்தன் என்றும், வனப்பில் மாரன் என்றும் அரச முறையில் மனுச்சோழன் என்றும், செல்வத்தில் குபேரன் என்றும் எல்லோரும் பேசிக்கொள்கின்றனர். இந்தக் கோவையில் உள்ளாரோடு கண்ணப்பரையும் தனிப்பெருஞ் சிறப்புடைய வராகக் கலக்கப் பார்த்துவிட்டவர் இப்புராண முடையவரேயாகும். அன்பில் கண்ணப்பர் என்று வழக்கிற் கொணர்ந்து ஒரு மரபினை நிலைநாட்டினர். 'கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்' என அடிகள் கூறி இருந்தாலும் மரபாக வழங்கி வரும் இக்கோவையில் கண்ணப்பர் பெயரையும் புகுத்தி விட்ட பெருமை நமது புராண முடையாரையே சேரும்.

"மாரவேள் வனப்பில் நீதி
மாட்சியில் மனுவின் மைந்தன்
வீரவண் சிறப்பில் மேக
மிகுபெருங் கொடையில் முக்கண்
கார்தவழ் கண்டன் அன்பில்
கண்ணப்பன் நிதிக்கோன் செல்வத்
தார்தரு கல்வி தன்னில்
அனந்தனென் றகில மேத்த."

என்று புதியதோர் உவமையை வழக்கில் கொணர்ந்த அருமை பாராட்டற் பாலதாகும். சேக்கிழார் பாடிய கதை இல்லையாயின் இவ்வுவமைவந்தே இராது என ஒருதலையாகக் கூறலாம்.

உள்ளுறை பொருளும் உள்ளுறை அணியும் தோன்றுமாறு கண்ணப்பர் கதையைப் பல புலவர் பெருமக்கள் பாடியது போலவே உள்ளுறை சுவை தோன்றவும் பாடியுள்ளார். சிலர் நகைச்சுவை படக் கண்ணப்பர் கதையினைக் கூறி இறைவனை எள்ளி விளையாடுகின்றனர். இறைச்சி தின்றதனை இகழ்வார் சிலர்; செருப்பால் அடி பட்டதற்கு இரங்குவார் சிலர்; கண்ணப்பியது கண்டு அரைகண்ணன் என்று ஏசுவார் சிலர். அடிப்போருக்கும் உதைப்போருக்கும் அருள் செய்யும் ஆண்டவன் என இழித்துப் பேசுவார் சிலர்; ஆனால் சிலர் அனைத்தும் அன்பால் ஆயிற்று எனச் சொல்லாமற் சொல்லிப் போவர்?

இறைவனுர் இறைச்சி தின்றதனை எடுத்துப் பேச வந்த சிவப்பிர காசர் "இறைச்சியை ஒழித்துவிட வேண்டும், அல்லாக்கால் எரிவாய் நிரயத் திடர்படுவீர்" என உலகத்தினர்க்கு உரைத்தருளினீர். நீரோ இறைச்சியை, வேடன் எச்சில் பண்ணித் தந்தாலும் இகழாது விரும்பி யுண்டீர். அம்மட்டோ? இறைச்சியின் சுவையின் அருமையை அறிந்து அதனை உதவிய கண்ணப்பனுக்கு வீடும் அருளினீரே" என்கின்ருர்.

"நீவிர்புல வருந்திலெரி நிரயத்தி லிடுவமெனத்
தேவவெமக் கியம்பினைநீ சிலேவேடன் இடும்பிசிதம்
ஆவலொடும் மிசைந்தவனுக் கருளினைமெய்க் கதி என்கொல்"

எனவரும் திருவெங்கைக்கலம்பகப் பாட்டு இறைவன் முன்பின் தெரியாது உளறினன் என்கின்றது. இந்தக் கருத்தையே திருவிடை மருதூர் உலா உடையாரும் கூறுகின்ருர்.

ஏங்கொடுக்க மாட்டாதென் றெங்கட்குரைத் தொருவர்
தாங்கொடுக்கும் போதெல்லாம் தானுண்டான்."

என்று பாடி இறைவன் தனக்கொரு வழியும் பிறர்க்கொரு வழியும் பேசிவைத்தான் என எள்ளி நகையாடுகின்ருர்,

சிவப்பிரகாசர் பாடியதாக வழங்கும் மற்ரெரு செய்யுளும் கண்ணப் பரைச் சுட்டுகின்றது.

"விற்ற தார்க் கலே பாதியோடு
வனத்தி லேயழ விட்டதார்
வெஞ்சி றைப்புக விட்டதார்
துகிலு ரியவிட்டு விழித்ததார்
உற்ற தாரமும் வேண்டுமென்றினி
மன்னர் பெண்கொளல் ஒண்ணுமோ ?
உமிய டாமணம் என்றவாய்கிழித்
தோலே காற்றி லுருட்டடா"

வெற்றி யாகிய முத்திதந்தருள்
வேங்கை மாநகர் வேடர்யாம்
விமல ரானவர் எமையடுத்தினி(து)
எங்கள் மிச்சில் மிசைந்தபின்
பெற்ற வேலர்த மக்குயாமொரு
பெண்வ ளர்ப்பினில் ஈந்தனம்
பெற்ற பிள்ளை கொடுப்பரோ
இதென்பேய் பிடித்திடு தூதரே.

என்பதே அப்பாட்டு, மறம் என்பது கலம்பகத்தில் வருவதோர் துறை. நூலுக்குத் தலைமகனது ஊரில் வாழும் மறவர்களாகிய வேடர்களது மறத்தை (வீரத்தை) யும் சிறப்பையும் கூறுவதாகும் இத்துறை. தம் குடியைப் புகழ்ந்து அரசர் குடியை இகழ்ந்து அரசரினும் மறவர் மேம்பட்டாராதலின் அரசர்க்குத் தம் பெண்ணை மணம் செய்துகொடுத்த லாகாதென அம்மறவர்கள் கூறுவதாகப் பாடுவது வழக்கம். அங்ஙனமே சிவப்பிரகாசர் வெங்கைக் கலம்பகத்தின் உள்ளுறுப்பாக அமைக்காவிடி னும் அதனைச் சார்ந்ததாக அமைத்துள்ளார் இச்செய்யுளை. "அரிச்சந்திர னைப்போலத் தாம் மணந்த மனைவியை விற்றும், நளனைப்போலப் பெண் டாட்டியை ஆரும் துணையின்றி அல்லலாடும்படி நடுக்காட்டில் அவள் மானத்தைக் காக்கக் கட்டியிருந்த துணியிலும் பாதி அரிந்துகொண்டு விட்டோடியும், இராமனைப்போல வாழ்க்கைத் துணையை மாற்றான் ஊரில் சிறைபுகவிட்டும், மற்றொருவன் தமது மனையாளை இழுத்துப்போய் நாலுபேர் எதிரிலும் துகிலுரியப் பாண்டவர்கள்போல, வில்லுந்தடியு மாய்த் தடியர்போல நின்று மானமின்றி மருள மருள விழித்து வாளா இருந்தும், வாழ்ந்துவரும் அரசர்கள் பெருமையிதுவாக அவர்களுக்கு இனியொரு பெண்டாட்டியும் வேண்டுமா ? அப்படி பெண் கேட்பதாய் இருந்தாலும் ஒப்புயர்வற்ற திருவெங்கையில் வாழும் வேடர்களிடத்தா கேட்பது? நாங்கள் எத்தகையோர்? எவ்வளவு ஒருமை உடையவர்கள்! எல்லோருக்கும் வீடு கொடுத்து ஒன்றும் வேண்டாது உயர்ந்த ஓர் இறைவனே எங்களது குடியின் பெருமையை அறிந்து எங்களோடு உற வாடி உயரவேண்டினான். ஒரு பெண்ணை எங்கள் குடியிலிருந்தும் கொள்ளுவதற்கு என்ன பாடுபட்டான். எச்சில் சோற்றில் விழுந்து, எங்கள் கண்ணப்பர் தமது எச்சில் குழைய மென்று துப்பிய இறைச்சியை எல்லாம் ஒரு நாளுக்குப் பலநாள் தின்று எங்களை அண்டிப் பிழைப்பார் போல நச்சித் திரிந்ததால் எங்கள் மனமும் இரங்கியது. அவர் பெற்ற வேலருக்கு ஒரு பெண் கொடுத்தோம். ஆனால் நாங்கள் பெற்றெடுத்த பெண்ணைக் கொடுத்தோமா ? நாங்கள் வள்ளிக்குழியில் கண்டெடுத்து வளர்த்த வளர்ப்புப் பெண்ணைத்தான் கொடுத்தோம். அங்ஙனமாகப் பெற்ற பிள்ளையை யாரேனும் கொடுப்பார்களா ? தூதர்களே நீங்கள்

என்ன பேய் பிடித்து உளறுகின்றீர்களா. அடே! அஞ்சாது பெண் என்று கேட்ட வாயைக் கிழித்தெறியுங்களடா! கொண்டுவந்த ஓலையைக் காற்றில் பறக்க விடுங்களடா" என வேடர்கள் கூறுவதாகப் பெருமிதச் சுவைக்குறிப்புத் தோன்றப் பாடியுள்ளார். இதிலே கண்ணப்பர் கதையைப் பயன்படுத்திக் கொண்ட முறை வியக்கத்தக்கது.

கண்ணப்ப நாயனுர் இறைவனுரது திருமுடியில் இருந்தவற்றைச் செருப்பால் உதைத்துத் தள்ளியதை எண்ணி இறைவனைநோக்கி ஒன்று வினவுகின்ருர் சிவப்பிரகாசர். இறைவனது திருமுடியில் என்றும் இடையருது இனிதுவீற்றிருக்கும் கங்கையும் கொன்றையும் திங்களும் பாம்பும் கண்ணப்பர் உதைத்தபோது என்ன வாயின என்று கேட்கின்ருர். தலைமீதிருந்த பாம்பானது வலிய வேடனது செருப்படியில் அகப்பட்டுச் செத்துப் பிழைத்து நசுக்குண்டதோ? இளம்பிறையானது நோய்பொறுக்க மாட்டாது ஒதுங்கி ஓடிப் பிழைத்ததோ! "இது என்னடா ஒரு வேடன் உதைக்கின்ருனே" என்று கங்கையானவள் அருவருத்து முகஞ் சுழித்துக் கொண்டாளா? கொன்றைமாலை வேடனது காலிலே சிக்கிக் கொண்டு அவன் காலை அப்புறம் எடுக்கவொட்டாமல் வலித்திழுத்ததோ! எனச் சுவை பட வினவுகின்ருர்.

"காணுமல் அயன்தேடும் நின்முடிக்கண்
கண்ணப்பன் தொடுகழற்கால் வைத்தபோதில்
கோணுகம் முரிந்ததுவோ குளிர்வெண் திங்கள்
கொழுந்துபொரு தொதுங்கிற்ருே நீர்ப்பெண் அன்பு
பூணுமல் அருவருத்து நோக்கி ஞள்கொல்
பொன்னிதழித் தொடையல்சூழ்ந் திழுத்ததோசொல்
வீணுள்பட் டழியாத அன்பர்க் கன்பாம்
விமலனே வெங்கைவரும் அமரர் ஏறே."

என்று தம் உள்ளுணர்வால் இறைவன் முடியில் என்ன என்ன நடந்திருக்கலாம் என்று கண்டுணர்ந்து புனைந்துரைத்துச் சுவைபடப் பாடியுள்ளனர்.

வசைபாடுவதில் வல்ல காளமேகன் கடவுளையும் விட்டான் இல்லை. புகழாப் புகழ்ச்சியாகப் பாடுவதில் வல்ல காளமேகனே முதலானேர் புனைவினில் புகழ்ச்சியணிவரப் பாடும்போதெல்லாம் கண்ணப்பர் கதையை மறப்பதில்லை. காளமேகம் தில்லையிற்சென்று சிவபெருமானைக் கும்பிட்டுக் கூத்தாடிப் போகையில் ஓர் பாட்டுப் பாடினுன். சிவபெருமான் மிக்க ஏழ்மையாக இருந்து ஓடேடுத்து இரந்து ஒருவேளை உணவுக்கும் ஓரோடும் நிறையாமல் ஊரெல்லாம் உழன்று வருவதால்தான் கண்டவர் எல்லாம் அவரைக் கண்டபடி அலைக்கழிக்கின்ருர்களாம்.

ஐயோ என இரங்குகின்ருன். இல்லாக்கால் ஏதும் கெட்ட ஓர் பெண் பிள்ளையாகிய கங்கை ஆண்பிள்ளை என்றும் எண்ணுது தலைமேலேறிக் குந்தி யிருப்பாளா? கீழ்குடியிற் பிறந்த வேடனுன கண்ணப்பன் செருப்பால் அடிப்பாளு? சுந்தரன் பித்தா என்று வைவானு? அருச்சுனன் வில்லால் அடிப்பானு? என்று தான் சொல்லியதை நிலை நாட்டுகின்ருர்.

" தாண்டி ஒருத்தி தலையின்மேல் ஏருளோ
பூண்ட செருப்பால் ஒருவன் போடானே—மீண்டொருவன்
வையானே வின்முறிய மாட்டானே தென்புலியூர்
ஐயாநீ ஏழையா னல்.

என்று கண்ணப்பர் செருப்படியால் உதைத்ததும், இறைவனது ஏழ்மை யால்தான் எனத் தற்குறிப் பேற்றமாகப் பாடிப் போகின்ருர். அன்பர்க்காக என்ன பாடும்பாடுவான் எனக் குறித்தும் போகின்ருர். இப்பாடலில் உலக வழக்கில் வழங்கிவரும் "என் தலைமேலே ஏறுகிருயே", "போட்டான், மாட்டினுன்" என்ற சொற்ருெடரையும் சொற்களையும் அழகுறப் பயன்படுத்தியமை உற்று ஆராயத் தக்கது.

இவ்வாறு கண்ணப்பன் செருப்பால் அடிபட்டதற்கு மற்ருேர் தற்குறிப்பேற்றமும் கூறியுள்ளான். கல்லாலும் வில்லாலும், கைப்பிரம் பாலும் கண்ணப்பன் செருப்பாலும் அடிபட்டதேன்? ஏன் என்று கேட்க ஒரு தாயோ தந்தையோ இல்லாத குறையால் அல்லவா? என்று இரங்குவதுபோல இறைவனது முதன்மையை எடுத்து மொழிகின்ருன்.

" வில்லால் அடிக்கச் செருப்பால்
உதைக்க வெகுண்டொருவன்
கல்லால் எறியப் பிரம்பால்
அடிக்கவிக் காசினியில்
அல்லார் பொழில்தில்லை அம்பல
வாணர்க்கொ ரன்னைபிதா
இல்லாத தாழ்வல்ல வோஇங்ங
னேஎளி தானதுவே."

என்று "தாயில்லாத பிள்ளையா தலைமேலடிக்க" என வழங்கிவரும் பழமொழியை ஒட்டிப் பாடினுன்.

இக்காளமேகமே திருவிடைமருதூருக்குச் சென்று கடவுளை வழி பட்டு வருகையில் இந்த முறையில் மற்ருேர் பாடலும் பாடியுள்ளான். "சிறுத்தொண்டன் இட்ட பிள்ளைக் கறியும் தின்றீர்; கொள்ளத் தக்கன தள்ளத் தக்கன என ஆராயாது கண்ணப்பன் எல்லா விலங்குகளையும்

கொன்று கிழித்துச் சுட்டுக் காய்ச்சிக் கொணர்ந்து தந்த கறி எல்லாம் சீராகத் தின்றீர்.

இவை எல்லாம் போதாதா? இன்னும் அந்தோ பன்றிக்குட்டியின் மேலும் (பன்றி உருவெடுத்த திருமாலின் மகனுன மன்மதன்) வேணவா கொண்டு தீய்த்துவிட்டீரே, ஈதென்னே உமக்குப் புலால், உணவில் இருந்த ஆர்வம்'' என்று பாடுகின்றுன்.

"கண்ணன் இடுங்கறியும் காட்டுசிறுத் தொண்டரன்பிற்
பண்ணுசிறு வன்கறியும் பற்ருதோ—தண்ணேடு
மட்டியையும் சோலே மருதீசரே பன்றிக்
குட்டியையேன் தீத்தீர் குறித்து.

என்று கடவுளது கன்மனத்தைக்கண்டு இகழ்வது போலப் பாடுகின்றுன். கண்ணப்பிய பெருமைபற்றிக் கண்ணப்பரைக் கண்ணன் என்றே இங்கு வழங்கியமை பாராட்டற்பாலது.

திருவானேக்காவில் சென்றிருந்தபோது சிவபெருமான் நஞ்சுண்டதனே வேறுவகையாகத் திரித்துப் பாடி இன்பூட்டுகின்றுன். "கடவுளே கல்லாலும் வில்லாலும் அடிபட்டும் கண்ணப்பர் செருப்பால் உதைபட்டும் ஒன்றியாய் நிற்கின்றீர். இந்தக் கீழ்நிலேமைக்கு வெட்கி உடல் குன்றினீர்; மானம்விட்டபின் வாழாமை முன்னினிதே எனத் துணிந்து நஞ்சுதின்றேனும் சாகலாம் என நஞ்சுண்டீரோ? என்று வேடிக்கையாக வினவுகின்றுன்.

"கல்லால் அடித்ததற்கோ காலால் உதைத்ததற்கோ
வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர்—சொல்வீரால்
மஞ்சுதனேச் சூழும் மதில்ஆனேக் காவாரே
நஞ்சுதனேத் தின்றதென்முன் நாள்.

எனச்சிவன் நாணமடைந்து நஞ்சு தின்றதாக இரங்குகின்றுன்.

மற்ருெரு காலத்திலே சொல்லுகின்ற போக்கிலே சுவைபிறக்க ஓர் பாட்டுப் பாடுகின்றுன் நமது காளமேகம். திருமாலே மாடாகி வந்து சிவபெருமானேத் தாங்குகின்ருர் எனச் சிவன்கதை செப்பும். சிவஞரது திருமாடாம் திருமாலுக்கு உகந்த பெரிய கோயிலாய் இருப்பது திருவரங்கம் ஆதலின் அதுவே சிவனது மாட்டுக்கொட்டில். திருமறைகளேக் குதிரையாகப் பூட்டித் தேரோட்டிஞன் மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வன். அவ்வாறு குதிரைகளான திருமறைகளோ மலரவனது வாயின் நின்றும் வந்தவை. ஆதலிஞல் பிரம்மனது வாயே சிவனது

குதிரைகட்டும் இலாயம். கண்ணனுர் சிவனைத் தொழுகையில் ஓராயிரம் பூவில் ஒரு பூவானது குறையத் தயங்காது தன் கண்ணையே மலராகச் சிவபெருமான் திருவடியில் இட்டார். ஆதலின் அக்கண்மலர் பூக்கும் பொய்கை கண்ணனுரது திருமுகமே. சிவபெருமான் சிறுத்தொண்டரது மகன் கறியைத் தின்ன வந்தவர் அல்லவா? சீராளன் கறிகாயானுல் அக்கறிகாய் வளரும் தோட்டம் அவனது தாய் வயிறேயாகும். தில்லையில் சிவபெருமான் கூத்தாடுவதாலே அவ்வம்பலமும் அவரது கூத்து மேடையாகும். மடைப்பள்ளியிற் சமைத்து மென்மையாக்குவதுபோலக் கண்ணப்பனுர் தாம் கொண்டுவந்த இறைச்சியினைத் தம் வாயில் இட்டு மென்று மென்மையாக்கித் தந்தனர். ஆதலினுலே அவர் வாயே சிவனுரது மடைப்பள்ளியாகும்.

" ஏறுகட்டிய கொட்டில் அரங்கமே
ஈரிரண்டு முகன்வாய் இலாயமே
மாறு கண்ணப்பன் வாய்மடைப் பள்ளியே
வாய்த்த ஓடை திருமால் வதனமே
வீறு சேர்சிறுத் தொண்டனில் லாளுந்தி
வேட்டநற் காய்க்கின்ற தோட்டமே.
நாறு பூம்பொழில் சூழ்தில்லை அம்பல
நாரி பாகற்கு நாடகச் சாலையே.

என்று அழகாகத் தாம் சொல்லும் பொருளை நேராகக் கூருது வளைத்துப் புதுமை தோன்றக் கூறியுள்ளார்.

**பலபட்டடைச் சொக்கநாதர் :—** காளமேகனைப் போலவே பலப்பட்டடைச் சொக்கநாதப் புலவரும் பலவாறு புனைவிலிபுகழ்ச்சியணிபடப் பாடி இருக்கின்றனர். இறைவன் குண்டைக்கு ஒருத்தன் (குண்டை மாடு; அதனையுடைய ஒப்பற்றவன்); கூத்தாடும் பித்தன் (பித்தன் - மெய்யுணர் வுடையோன்.) குண்டுணி (சங்கிலியிடம் சென்று சுந்தரன் தன்னை மகிழமரத்திலிருக்குமாறு வேண்டிக்கொண்டதைக் கோள் சொல்லியவன்) கண்டக் கறுப்பன் (நஞ்சம் உண்டு நெஞ்சு கறுத்தவன்.) பிள்ளையைத் திண்ணி (சிறுத் தொண்டனது பிள்ளையின் கறியைத் தின்ன வந்தவன்,) மண்டைக் கரத்தன் (எல்லாம் அழியும் பேரூழியில் மலரவனையும் அழித்து அவனது மண்டையோட்டைக் கையில் ஏந்துபவன்,) கண்ணப்பன் எச்சிலை வாரிஉண்ட பண்டைப் பறையன் (பரை - அம்மை; பண்டைப் பரையன்; பழமையாக அம்மையோடே இருப்பவன்) என இரட்டுற மொழிந்து வைவதுபோல வாழ்த்துகின்றுர்.

குண்டைக் கொருத்தனைக் கூத்தாடும்
பித்தனைக் குண்டுணியைக்
கண்டக் கறுப்பனைப் பிள்ளையைத்
தின்னியைக் காணஅயன்
மண்டைக் கரத்தனைக் கண்ணப்பன்
எச்சிலை வாரியுண்ட
பண்டைப் பரையனை யோதேவன்
என்று பகருவதோ,

என்று வசைமொழிகளை நிறைத்துவைத்துப் பாடி யமை காண்க.

முன்னர்க் காளமேகம் தாய்தந்தை இல்லாமையைப் பற்றிப் பாடியது போலவே இருவரும் பாடுகின்றனர். ஏனென்று கேட்கத் தாயோ தமரோ உனக்கு இல்லாமற் போனதால் அல்லவா உன்னைத் தொடவும் தகாத வேடன் உன் அருகில் வந்தான்; உன் தலைமேல் செருப்பாலும் அடித்தான். எச்சிலை நின் தலையில் துப்பினான்; எச்சிற் சோற்றினை வலியவும் ஊட்டினான். அவனைக்கண்டு அஞ்சிக் கண்ணீர் ததும்பி நீயும்நின்றாய் என்ற பொருள்பட

சேராது வேடன் செருப்பால்
உதைக்கவுந் தீண்டவுந்தன்
நீர்வாய் உமிழவும் உச்சிட்டம்
போடவும் நீண்டசிலைத்
தாரால் இடிக்கவும் கண்ணீர்
ததும்பும் தாய்தமர்கள்
ஆராகிலும் இல்லையோதிருக்
காளத்தி அப்பனுக்கே.

என்ற செய்யுளைப்பாடி இரங்குகின்றார்.

திருமறைக்காடு சென்று சிவபெருமானைத் தொழுது ஒன்று பாடுகின்றார். சிவனுக்குள்ளது அரைக்கண்தான் என ஏசுகின்றார். "முன்னோர்கள் முக்கண்ணன் என்று மொழிவார்கள். ஆனால் உடலிற் பாதி பகிர்ந்து கொண்ட அம்மை அம்முக்கண்ணில் செம்பாதியாக ஒன்றரைக் கண்ணைத் தனக்கெனக் கொண்டாள். நின்றது ஒன்றரைக் கண்ணே அவ்வொன்றரையிலும், கண்ணப்பன் அப்பியது ஒன்று, ஆகவே தனது கண்ணாய் நின்றது அரைக்கண்ணே" என்கிறார்.

முக்கண்ணன் என்றரனை முன்னோர் மொழிந்திடுவார்
அக்கண்ணற் குள்ள தரைக்கண்ணே — மிக்க
உமையாள்கண் ணொன்றரைமற் றூன்வேடன் கண்ணொன்
றமையும்இத னாலென் றறி.

என்று கூட்டியும் கழித்தும் வகுத்தும் புள்ளிப்போட்டுக் கணக்கெடுத்துக் கொடுக்கின்றார்.

இவரே மதுரை சென்றபொழுது பாண்டியன் பிரம்பாலடித்த கதையை நினைத்துக்கொண்டு பாடுகின்றார். "என்னே! இப்பாண்டியனுக்கு நெஞ்சில் எள்ளளவும் ஈரம் இல்லையா? அந்தோ பாதியுடல் பச்சைப் பசும்பெண்ணென்றும் பாராது அடித்தானே - இவ்வடிபட்ட சொக்கேசனே சொன்ன பேச்சுக் கேட்கும் ஆளாயிற்றே. அவனை அடிக்கவும் வேண்டுமா? செய்யென்றால் செய்யானோ? ஏதும் கெட்ட வேடன் எதிர்நின்று எச்சிலிறைச்சியை உண்ணென்றதும், குறுக்கொன்றும் பேசாது சொன்னபடி செய்தானே, இத்தகையவனை எவ்வாறு பிரம்பாலடித்தானோ" என்று இரங்குகின்றார்.

மண்ணென்ற மண்டலம் எல்லாம்
புரக்கும் வழுதிசற்றும்
தண்ணென்ற நெஞ்சம் தரித்தில
னேதனு வேடனெச்சில்
உண்ணென்ற போதுண்ட வர்சொக்கர்
பாதி உடலம்பச்சைப்
பெண்ணென் றறிந்தும் அடித்தானெவ்
வாறு பிரம்புகொண்டே.

எனப்பாண்டியனை இழித்துக்கூறி இறைவனுக்கு இரங்கிப் பாடுவது போலப்பாடி "அடியார்க்கெளியன்" என்பதைக் குறித்துப் போகின்றார்.

**சொக்கநாதப் புலவர்:-** சொக்கநாதப் புலவர் என்று பெயர்படைத்த மற்றொருவர் தில்லை வாணரைநோக்கிப்பாடுகின்றார். "என்னேஇது! கல்லாலும் வில்லாலும்,பிரம்பாலும்—அம்மட்டோ, செருப்பாலும்கூட, அடிஅடி என்றடித்தவர்களை நல்லவர்கள் என்று நம்பிய அந்த நால்வருக்கும் நன்மையே செய்தீர். அந்தோ உன்னை இகழ்ந்தானா? உன்னை அடித்தானா? ஒன்றும் செய்யவில்லையே. மெல்லிய பூக்கொண்டு மெத்தையிடுவது போலவே விளையாடி எரித்த மன்மதனை ஏனோ எரித்து விட்டீர்," என்று இகழ்வதுபோலப் புகழ்ந்து உள்ளநிலை உறுதி உடையது என்பதையும் புறத்தொழில் எல்லாம் பொய்த்தொழில் என்பதையும் விளக்கினார்.

"செல்லாரும் பொழில்புடைசூழ் புலியூரம்
பலவாண தேவா உம்மைக்
கல்லாலும் வில்லாலும் செருப்பாலும்
பிரம்பாலும் கடிந்து சாடும்

எல்லாரும் நல்லவரென் றெண்ணியருள்
ஈந்ததென்ன இகழ்ச்சி ஒன்றும்
சொல்லாமல் மலரால்விட் டெறிந்தவனைக்
காய்ந்ததென்ன சொல்லுவீரே ''

என்று நன்மை தீமை தெரியாது வாழும் பித்தரெனப் பெருமானை ஏசுகின்றார். மனம்போல வாழ்வு என்பதை வற்புறுத்துகின்றார்.

மற்றொரு காலத்தில் மற்றொரு வகையாகப் பாடுகின்றார். "கல்லால் அடித்த சாக்கியனுக்கும் வீடு அகப்பட்டது. வேடிக்கையாக அடித்தாலும் குற்றமில்லை. சண்டைக்கு வந்து மும்மரமாக மலைந்து உம்மை ஓங்கி வில்லால் அடித்தவனுக்கு வில்லொன்று போதாதென்று அம்புங் கொடுத்தீர். செருப்பாலுதைத்த திண்ணனும் சிவஞானன். ஐயோ கண்ணீரும் கம்பலையுமாக, அழுது புரண்டலமந்து நீயே உய்வழி எனப் புகழ்கின்றோமே! (தியாகையா) வள்ளல் எனப் பேரும் கொண்டீர். எங்களுக்கு ஒன்றும் இல்லையா? இது அறமுறையா '' எனக் கையேந்தி இரத்தற்குத் தொடங்குகின்றார்.

நல்லானை இடமருவும் தியாகையா
உம்மிடத்தில் நியாயம் காணேம்,
கல்லாலே எறிந்தோர்க்கும் செருப்படியால்
உதைத்தோர்க்கும் கடிந்து போரில்
வில்லாலே அடித்தோர்க்கும் கொடுத்தீரே
அல்லாமல் விழிநீர் சோர
எல்லாம்உம் செயலன்றே இருப்போருக்
கியாதொன்றும் ஈகிலீரே.

என்று கொடுமைபாடிக் கூழுக்குத் தாளம்போடுகின்றார்.

திருக்கழுக்குன்றத்திற்குச் சென்றிருந்தபோது பன்னிரண்டாண்டிற் கொருமுறை இடிவிழுந்து திருமஞ்சனமாவதைக் கண்டு ஓர் பாட்டுப் பாடினார். "முதலிலேயே பாண்டியன்பால் பிரம்படிபட்டாய். பின்னும் சாக்கியன் வந்து கல்லெறிந்து போயினான். அத்தனைக்கும் ஆளான பின்னும் அவை போதா என்று ஒரு வேடனது செருப்பாலும் உதைபட்டாய். அந்தோ நீவந்தவழி இப்படியும் இருக்கவேண்டுமா. தலையும் சடைப் பிடித்துப் போயிற்று. மலையிலோடிப் புகுந்தீர். முதற்கோணல் முற்றிலுங் கோணலாய் முடிந்ததே. இங்கும் விட்டபாடில்லை. இப்போது இன்னும் இடியும்விழ – ஐயோ நீ இதையும் பொறுத்திருக்க வேண்டுமோ – நீயா ஒரு கடவுள்'' என இரங்கி இகழ்கின்றார். அன்பின் அருமையைப் புகழ்கின்றார்.

அடிபட்டீர் கல்லாலும் எறிபட்டீர்
அத்தனைக்கும் ஆளாய் அந்தப்
படிபட்டும் போதாமல் உதைபட்டீர்
இப்படியும் படுவார் உண்டோ
முடிபட்ட சடையுடையீர் கழுக்குன்றீர்
முதற்கோணல் முற்றக் கோணல்
இடிபட்டும் பொறுத்திருந்தீர் சிவசிவா
உமைத்தெய்வம் என்ன லாமே.

என இளிவரற் சுவைக் குறிப்புத்தோன்றப் பாடுகின்றார்,

**நமச்சிவாயப்புலவர் :** நமச்சிவாயப் புலவர் என்பவர் இத்திருக் குன்றினுக்கே சென்றபோது கழுகுகள் நாளும் வந்து போவதைக் குறித்து ஓர் பாடல்பாடி உள்ளனர்.

“மான் பிடித்தீர் முயன்மிதித்தீர்
எவரும் காண
மன்றுதனில் ஆடெடுத்தீர்
மதத்து வந்த
ஊன் பெருத்த யானையைக்கொன்
றுரித்தீர் இப்பால்
உரப்பான தலைக் கறிக்கும்
உவந்தீர் ஐயா
மீன் பொதிந்த விழி மடவாட்
கொருபங் கீந்திர்
மேலான வேட னெச்சில்
மிகவே கொண்டீர்
கான்பொதிந்த வேதகிரி
நாதா உம்மைக்
கழுக்கள் வந்து சுற்றுவதும்
காணத் தானே ”

என்பதே அப்பாடல். “கழுகுகள் இங்கு வருவது உம்மைக் காணவல்ல· அவைகளுக்கு விருப்பமான புலாலுணவு உம்மிடம் இருத்தலினாலே உம்மை வட்டமிடுகின்றன. மானைக் கையில் பிடித்து வைத்திருக்கின்றீர். முயலை (முயலகனை) மிதித்துக் கொண்டிருக்கின்றீர். ஆடு (தில்லையில் கூத்து) எடுத்தீர்! யானையை உரித்தீர். சீராளன் தலைக்கறி (அல்லது மலரவன் தலையோடு) வேண்டும் என்றீர். கண்ணப்பன் மென்று தந்த பன்றிக்கறியும், மான்கறியும், இன்னும் என்ன என்ன கறியோ அவையும் நிறையத்தின்றீர் ” பாதியுடல் பெண்ணுக்குக் கொடுத்தீர். அவள் கண்

களிலும் மீன்கள் பொதிந்துள்ளன. புலாலை உண்டு புலாலைப் போர்த்து புலாலின் இடையே பொருந்தியுள்ள புலையரென அறிந்து உம்மைப் பார்த்துக்கொண்டே திரிகின்றன கழுகுகள்'' எனத் தற்குறிப் பேற்றமாகப் புதுமை நயம் தோன்றக் கூறுகின்றார்.

**இராமச்சந்திர கவிராயர் :** அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ் சாகும். தனிப்பாடல்கள் எவ்வளவு இனிப்பதாக இருந்தாலும் அவற் றையே சொல்லிக்கொண்டு பொழுதுபோக்க இயலாது. ஆகவே மற் றொரு பாட்டினை எடுத்துக்கூறித் தனிப்பாட்டாராய்ச்சியை முடித்துக் கொள்வோம். இராமச்சந்திர கவிராயர் என்ற பாவலர் .ஒருவர், வேறு ஒரு புலவன் கதையை ஓர்பாட்டாகப் பாடுகின்றார். ஒரு புலவன் உலகத் தினரைப் பாடினால் பொருள் வரும் என எண்ணினான்.

அவர்கள் வீட்டிற்குச்செல்வதில் செருப்புந்தேய்ந்து காலும் தேயத்தேய நடையாக நடந்து காலெல்லாம் புண்ணாகி நின்றான். அவர் வாயிற்படியில் பலமுறையும் போகும் போதும் வரும் போதும் முட்டிக் கொண்டு முட்டிக் கொண்டு தலை எல்லாம் புண்ணாய்ப் போனது. அவர்கள் வைத வசைச் சொற்களை எண்ணி எண்ணி மனமும் புண்ணானான். இனி, இன்பம் தருவோன் (சங்கரன்) எனப் பெயர் படைத்த இறைவ னிடத்தில் போனாலாவது ஏதேனும் கிடைக்கும் என்று அவரிடம் சென்று தன் தலைப் புண்ணையும் கால் புண்ணையும் நெஞ்சிற் புண்ணையும் காட்டி நின்றான். இறைவனோ அவனுக்குமேல் தாம் புண்பட்டிருப்பதாகக் கூறிப் பிரம்படி பட்ட புண்ணையும், வில்லடிபட்ட புண்ணையும் கண்ணப்பன் தன் வலிவு கொண்ட அளவு உதைத்ததால் வந்த புண்ணையும் காட்டிக் கையை விரித்து விட்டாராம். இவ்வளவே அந்தக் கதை.

'' வஞ்சர்பால் நடந்த லைந்த
காலிற் புண்ணும்
வாசல்தொறும் முட்டுண்ட
தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகு
நெஞ்சிற் புண்ணும்"
தீருமென்றே சங்கரன்பால்
சேர்ந்தேன் ''அப்பா
கொஞ்சமல்ல பிரம்படியின்
புண்ணும் வேடன்
கொடுங்காலால் உதைத்தபுண்ணும்
கோப மாகப்

பஞ்சவரில் ஒருவன் வில்லால்
அடித்த புண்ணும்
பார்" என்றே காட்டி நின்ருன்
பரமன் தானே."

எனப் பாவலர்கள் படும்பாட்டை நயம்படப் பாடிப்போகையில் கண்ணப்பர் கதையையும் இடையில் இழுத்துவிட்டுப் பாடிப்போகிருர்.

**வேற்றுமை நயம்:—** பொருளை விளக்கிச் சென்றவர்களும் அணிகள்வரப் பாடியவர்களும் சுவைக்குறிப்புத் தோன்றச் செய்யுள் இயற்றியவர்களுமாகப் பலரும் பல வகையாகக் கண்ணப்பர் கதையினைக் கையாண்டார்க்ள். தத்தமக்கு வேண்டியவாறு கதையைப் பயன்படுத்திக் கொண்டனர். உவகைச் சுவை ஓங்கித் தோன்றவும் அவலச் சுவையில் ஆழ்ந்துபோகவும், இளிவரற் சுவையில் இழிந்து எழவும், பெருமிதச் சுவை பெருகி ஒளிரவும், அச்சச் சுவை ஆட்டிப் படைக்கவும் நகைச் சுவை நகை விளைக்கவும் வெகுளிச்சுவை மிகுதியாய்ப் பொங்கவும், மருட்கைச் சுவை மனதைக் கவரவும், பலவாருக ஒரு கதையினையே பாடுவதனை ஆராயஆராய மருட்கைச் சுவையே விளைகின்றது. இனி ஒரு சுவையே வரப் பலர் பாடும்போதும் சுவைப்பொருளை மாற்றிப் பலவகையாக மாற்றித் தற்குறிப்பேற்றமாகப் பலவகையாகப் பாடுவதும் பெரும் வியப்பே. இவ்வாறெழுந்த பாக்களுடன் சேக்கிழார் கூறிவரும் கதையினையும் உடன்வைத்து ஒத்து நோக்குக.

## நக்கீரர் திருமறம்

**தொடர்நிலைச்செய்யுள்:-** கண்ணப்பர் கதையைத்தனிப்பாடல்களில் குறித்துப் போகாது சேக்கிழாரைப்போல விரித்துரைக்கும் நூல்களையும் ஒரு சிறிது ஆராய்ந்து ஒப்புநோக்குதல் வேண்டும். அத்தகைய நூல்கள் தமிழிலேயே பழைய நாள் தொடங்கிப் பல நிலவி வருகின்றன. நக்கீரர் எழுதியதாகப் பதினேராந் திருமுறையில் காணப்படும் திருக்கண்ணப்பர் திருமறம் ஒன்று; அத்திருமுறையிலேயே கல்லாடனுர் பாடியதாக வழங்கும் மற்ருேர் திருமறம் இரண்டு; ஆனந்தக் கூத்தர் பாடிய திருக்காளத்தி புராணத்தில் காணக்கிடக்கும் "கண்ணப்பர் சிவகோசரியார் முத்தியடைந்த அத்தியாயம்" மூன்று; சீகாளத்தி புராணத்தில் சிவப்பிரகாசர் பாடியருளிய "கண்ணப்பர் சருக்கம்" நான்கு. இந்த நான்குமே இவ்வகையில் சிறந்து விளங்குகின்றன.

இவற்றிலே இப்பொழுது யாம் ஆராயவேண்டுவன நக்கீரர் திருமறமும் கல்லாடனார் திருமறமுமேயாகும். திருக்காளத்தி புராணம் கூறிப் போவது சேக்கிழார் கதையின் சுருக்கமேயாகும். சீகாளத்தி புராணமும் பெரும்பான்மையும் பெரியபுராணத்தைத் தழுவியே செல்கின்றது. இவ்விரண்டு புராணமும் பெரியபுராணத்திற்குப் பின்னர் எழுந்தவையாகும். ஆகவே சேக்கிழார் கதையினை ஆராய்ந்த பின்னரே இவற்றை ஆராய்ந்து முடிந்தது முடித்தலாக ஒத்து நோக்கவேண்டும். நக்கிரனார் திருமறமும் கல்லாடனார் திருமறமும் சேக்கிழார்க்கு முன்னிருந்தோர் எழுதியவை ஆதலின் அவற்றை முன்னர் ஆராய்வதால் சேக்கிழார் நூலுக்கும் இவற்றிற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை நன்கு புலனாகும். அன்றியும் முன்னோர் நூலினைப் பின்னோர் எங்ஙனம் பெரிதும் பயன்படுத்திக்கொண்டனர் என்பதும் வெளியாகும். எனவே சேக்கிழார் படிந்து திளைத்து இன்பந் துய்ப்பதற்கு முதனூலாய் இருந்தன இவை என்பதனை ஆராயும் வகையிலேயே, நின்றநிலையினையும் நோக்க வேறுபாட்டையும் குறித்துப் போவதே எமது நோக்கம் என்க. இத்திருமறம் இரண்டும் பல அடிகள் கொண்டு விளங்கினாலும் ஒவ்வொரு பாவாகவே எண்ணப்படுதலினால், தனிப்பாடல்களோடு ஒருங்குவைத்து ஆராயத் தக்கவையாம். எனவே முன்னைய பகுதியோடு பின்னைய பகுதி பெரிதும் தொடர்புடைய தென்க.

நக்கீரர் பின்வருமாறு தமது நூலில் கூறிச் செல்கின்றார். திருக்கண்ணப்பரது சிறந்த தவச்செய்கையைக் கேட்பதில் உலகத்தினருக்கு விருப்பம் மிகுதியும் உண்டு என்கின்றார். ஆதலினால் அக்கதையினை விரித்துரைப்பதும் வேண்டற்பாலதே என்று கருதி இக்கதையினைச் சொல்லிப்போகத் தொடங்குகின்றார்.

இத்தகைய பெருந்தவம் செய்தார் பிறந்தகுடிதான் யாது? காட்டில் திரியும் வேட்டுவர் குடியே. அதிலும் எத்தகைய வேட்டுவக்குடி? தேன் கூடு எங்குக்கட்டியிருக்கின்றதோ என்று தேடிச்சென்று தீக்கோல் கொண்டு தேனீக்களைத் தேய்த்துத் தீய்த்துத் தேனடைகளை அழித்துத் தேனினைக் கொண்டுவரும் கொலையாளி வேடர்கள். உண்ணவேறொரு உணவுமின்றித் தாம் வேட்டையாடிக் கொன்ற விலங்குகளின் தசையைத் தீயிற்சுட்டு வதக்கித் தேனிற் றோய்த்துத் தோய்த்துத் தின்னும் திண்ணிய வேடர்கள். நீர் என்பது சிறிதும் பெறாது தேனையே குடிக்கும் திருட்டு வேடர்கள். இவ்வாறு தேய்த்தும் தீய்த்தும் கொன்றும் சுட்டும் குடித்தும் களித்தும் செருக்கித் திரிந்து காட்டில் வாழ்வதால் முரடரான வேடர்களது குடியில் தான் திருக்கண்ணப்பர் பிறந்தார்.

**நாடு:** பிறந்தகுடிஇதுவானால் இருந்தநாடுயாது? நாடோகாடுதான். அவர் திரிந்து வாழும் இடமோ பெருங்காடு. அதிலும் மலையடர்ந்ததொரு

பாலைவனம். அங்கேஎப்போது நின்று கேட்டாலும் ஒருபுலியேனும் பசிக் கிரங்கி குமுறிக்கிடக்கக் கேட்கலாம். அக்காட்டில் அவருக்கு அருந் துணையாவார் யார்? நாயன்றி வேறு ஒருவரும் இல்லை. அந்நாயோ சினத் தான் சிவந்துநெருப்புப்பொறிபறக்கும் கண்கொண்டு விளங்குவது. அதுவே அனைவரும் அஞ்சும் அந்தவனத்தில் அறுபது நாழிகையும் அவருடன் இருந்து அவரது நிழல்போல் திரிவது. பார்வை விலங்குகளும் பக்கத்தே இருந்தன. ஆனல் அவையும் கொலைத்தொழிலில் துணையாய் இருப்பன வேயாம். மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல, விலங்குகளைப்பிடிப்பதற் காக அவ்விலங்கினத்திலும் ஒவ்வொரு பார்வை விலங்கினை வளர்த்து வந்தார். அவர் பழகுவதுதான் என்ன? விசையுடன் வளைந்து, "ரய் ரய்" என்று அம்பினை விட்டுக் கொன்று குவிக்கும் கொடிய வில்லும், வெட் டொன்று துண்டு இரண்டு என்று கொத்தித்தள்ளும் கூரியவாளும், குத்திய குத்தின்முன்னே குடல்சரிந்து வெளிவரப் பின்னே முதுகுவரை உருவிச்சென்று வெளிப்படும் வேலும் முதலான கணக்கு வழக்கில்லாத கொடும் படைகளைத்தான் நாளும் பயின்றுவந்தார். வேருென்றும் பயின் றவர் அல்லர். குடியிருக்கும் வீடும் கொலைக்களமே. அவர் வீட்டில் இங்கும் அங்கும் இறைச்சித்துண்டுகள் விழுந்து கிடக்கின்றன. கொலைக் கேற்ற குடியும் உண்டு. குடம் குடமாக கொம்புத்தேன் குடித்ததும் மிகுந் ததுமாக எங்கும் இருக்கின்றது. தசையும் கொழுப்பும் ஒட்டிக்கிடக்கும் வாளும் அம்பும் தரையில் சிதறுண்டு கிடக்கின்றன. ஒழுங்கோ அமை தியோ, ஒன்றும் இல்லை. அண்ட நிழல் இல்லாத அவ்வனற்காட்டில் அவர் ஒதுங்கி வாழும் சிறு குடிசையின் கூரை எவ்வாறிருக்கும். உலர்ந்து போன விழல் நாணல் முதலியவற்றை மேலே பரப்பிக் கூரைஎன்று வைத்துள்ளார். அக்காடெல்லாம் வெட்டிவந்தாலும் அவ்விழலும் நாணலும் அச்சிறு கூரைக்கும் போதவில்லை. ஆகவே மயிற்பீலிகொண்டு இடைவெளி எல்லாம் மூடிவைத்துள்ளார்.

அவரது தொழில்தான் என்ன? வெட்டவெளியில் உலாவவரும் விலங்குகளைப் பிடித்துத்தின்னப் பேரவாக்கொண்டு வலையைவிரித்து அவற்றிற்கு அவ்வலை தெரியாதபடி புலித்தோல் போர்த்து மூடுகின்ருர். அந்தோ பட்டினி கிடத்தற்கு அஞ்சி இரவும்பகலும் அவ்வலையை பழுது பார்த்துச் சரிசெய்து வைக்கின்ருர். அவ்வெட்ட வெளிக்குள் விலங்குகள் வந்து சிக்கிக்கொண்டால் அதோடு விட்டுவிடுவாரா? தமது கொடிய நாயை அவற்றின்மேல் ஏவிவிட்டுத் தெறுத்துவார். ஆணும் பெண்ணும் குட்டியும் குஞ்சுமாகத் தொன்றுதொட்டு உலகில் உலவிவரும் உயிர்கள் அடங்கலையும் "விர் விர்" என வில்லைவளைத்து அம்பினை ஏவி எய்தும் சுரிகைக்கத்தியால் ஓங்கி ஓங்கிக் குத்தியும், எங்கும் ஓடி அவற்றின் பூண்டும் இன்றிப் போகக் கொன்று குவிப்பதே அவரது தொழில்.

அவரது வடிவோ அஞ்சத்தக்கது. காணக்கண் நடுங்கும். வலிய புலியொடு எதிர் நின்று சண்டையிடுகையில் அவரது கைக்குள் சிக்கி நோய் பொறுக்கமாட்டாது அப்புலி தன் பல் ஆழ்ந்து பதியக் கடித்து விட்ட வடு குழிந்து முன்னங் கையில் இன்னும் தோன்றுகிறது. கல்லைப்போன்ற வலிய மார்பை மாற்ருரது வாளும் வேலும் அம்பும் கொம்பும் கிழித் தெறிந்ததால் எழுந்த தழும்பு தடித்துப்போய் உள்ளது. கூரிய பல்லினை உடைய கரடி வெகுண்டெழுந்து கடித்துப் பிய்த்துக் கொண்டுபோனது, நெற்றியில் ஒருபுறத்தில் மூளியாய்ப் பள்ளமாய்த் தோன்றுகின்றது. யானை தனது கொம்பால் அவரது தொடையிலே முட்டிக் குத்திவிட தொடை எலும்பு பிதுங்கி முன்வந்து மேலே தூக்கிக்கொண்டு இருக்கின்றது. தலைமயிரோ புதர்போல எழுந்து நிற்கின்றது. கண்ணோ செவ செவ எனச் சினத்தாலும் குடியாலும் சிவந்துள்ளன.

இனிமைஎன்பது எள்ளளவு மின்றிக் "கடுகடு" என்று சீறிவிழுந்து பேசுகின்ருர். ஓர் இமைப்பொழுதேனும் கொல்லும் படைகளை அப்புறம் வைத்தபாடில்லை. அவர்மனமோ கல்லினுங் கடிது (நகையாடி நறுக்கு நறுக்குஎன நூற்றுக்கணக்காய் பேன்களைக் குத்தியபின்னும் இன்னும் அகப்படாவா என்று தலைபார்த்துத் திரியும் நங்கையரைப்போலக்) கும்பல் கும்பலாகக் கொன்று குவிக்கும் வேட்டையில் அகப்படும் பல உயிர்களை யும் பதைக்கப்பதைக்கக்கொன்றும், அவை பதைப்பதுகண்டு களிப்பதற் காகத் தலைவேருகவும் கால்வேருகவும் உடல்வேருகவும் சிறுகச் சிறுகத் துண்டுதுண்டாகவெட்டியும், அவைநடுநடுங்கி ஓலமிட்டுத்துள்ளித்துள்ளிக் குற்றுயிராய்க் குதிப்பதுகண்டு கைகொட்டிச் சிரித்தும் களிப்பவர். இன்னும் கொன்று குவித்து வெட்டி விளையாட விலங்குகள் வெளிவராவோ என்று இரங்குவார். அத்தகையது அவரது உள்ள நிலை. இதுவே அக்கானத் தலைவர் தன்மை.

**அன்புநிலை-திருமுன்பு:—** ஆனல் மங்கைபங்காளனும் வானத் தலைவனிடம் அவர்செல்லுமளவில் முற்றும் மாறி விடுகின்ருர். தாயைக் காணுவிடின் பாலுண்ணுது பட்டினிகிடக்கும் பச்சிளங்கன்று தாய்ப் பசுவைத் தூரத்தே வரக்கண்டாலும் "அம்மா" எனக் கூவிக்கொண்டே குதித்தோடுவதுபோல, இறைவனிடம் அன்போடும் சென்று அறவாழி அந்தணனின் அழகிய மலரடியை அன்ருடமும் வணங்கி வருகின்ருர். இறைவனது திருவடியைச் சென்று கண்டல்லது ஒருபருக்கையும் வாயில் இடார். (இது என்னே வியப்பு?)

இவ்வாருக அவரது கொலைச் செய்கையினையும் தவச்செய்கை யினையும் கண்டு வியந்து பாடிப் பின் அவர்செய்த வழிபாட்டை விரித் துரைக்கின்ருர் நக்கீரனர்.

**வழிபாட்டிற் கேற்பாடு:—** கொதிக்கின்றான் கதிரவன் என்று வெங்கதிர்களை விரிக்காதபடி குண்டுகட்டாகக் கட்டப்பட்ட ஞாயிறு சிறுகச்சிறுகத் தங்கட்டினை அவிழ்த்துக்கொண்டு உச்சிவந்ததும் தன்வெங் கதிர்கள் முழுவதினையும் விரித்துக்கொண்டு நெருப்பென மேல்காய் கின்றான். பாலைவனத்தில் அடிஎடுத்து வைக்குந்தோறும் சுறீல் சுறீல் எனக் கால்பற்றிக்கொள்ளவே கொப்புளம் கொள்கின்றன. வற்றியுலர்ந்த மரங்கள் சுற்றிலும் சூழ்ந்திருக்கும் வெளியிடத்தில் விலங்குகளைப்பிடிப் பதற்காக அவ்வவ்வினத்திலும் ஒவ்வொன்றாகப் பழக்கிவைத்திருக்கும் பார்வை விலங்குகளைப் பக்கமெலாம் பரவி ஓடவிட்டுச் சந்து பொந்து களில் பதுங்கிஇருக்கும் விலங்குகளை எழுப்பி ஏமாற்றிக்கொண்டு வரச் செய்கின்றான். அவ்வாறு வெளிவந்தவற்றின் மேலே நாயானது போய் மேல்விழுந்து கவ்விப்பிடித்துக் கடித்துத் தள்ளுதலால் அவைதிக்கு முக்க லாடித் திகைப்புல் மிதித்தாற்போல மயங்கி நாலாப்பக்கமும் ஓடுகின்றன. அம்புவிட்டெய்து அவற்றினை துண்டுதுண்டாகக் கொத்துகின்றார்.

விறகுகொண்டு கடைந்து தளதளவென்று நெருப்புண்டாக்கி, அந் நெருப்பில் இறைச்சியைச் சுட்டு எடுக்கின்றார். கொத்திய அத்தசை களில் நல்லனவற்றை நாவில் இட்டு நன்றாகச் சுவைபார்த்துச் சிறந்தன வற்றை இறைவனுக்கென்று வேறு பிரித்து எடுத்துக்கொள்கின்றார். ''தண்'' என்றிருக்கும் இனிய சுனைநீரை வாயே குடமாக முகந்துகொண்டு உள்விழுங்காது அச்சத்தோடும் ஆர்வத்தோடும், வாயிலேயே வைத்துக் கொண்டு வழி நடக்கின்றார். காட்டுப்பூவைக் கைநிறையப் பறித்துத் தலைகொள்ளுமட்டும் செருகிக் கொள்கின்றார். வளைத்த வில்லோடும் கூரிய அம்பினைத் தம் கையிலேந்தி வருகின்றார். நெருப்புப்போன் றெரியும் கண்ணோடு 'லொள் லொள்' என்று கேட்டோரும் கண்டோரும் அஞ்சி நடுங்குமாறு குரைத்துக்கொண்டே அவரது நாயானது அவர் பின்னே ஓடோடியும் வருகின்றது. கண்ணப்பரும் மலைமே லேறுகின்றார்.

**மறையவர் வழிபாடு:-** முன்னாகவே இறைவனைநாள்தோறும் வந்து வழிபட்டுப் போகும் மறையவர் பழமை போலவே மலைமேல் வந்து தூய்மையான நீர் கொண்டு திருமஞ்சன மாட்டினார், நறும்புகை யூட்டினார், நல்விளக்கேற்றினார், பட்டாடை சூட்டினார், பட்டமாலையைப் பரக்கச் சாத்தினார். தூக்கமாலையைத் தொங்கவிட்டார். இடையிடையே உதிரிப் பூக்களை ஒவ்வொன்றாக அழகு படச்செருகினார். இவ்வாறெல் லாம் அழகிய ஒப்பனையைச் செய்து முடித்தார். இறைவனை வழிபடு முறையை எடுத்துக் கூறும் நூல்கள் சொல்லியபடி எல்லாம், ஒன்றும் குறையாதும் தவறாதும் செய்தார். போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வணங் கினார். முத்திரைகளைக் காட்டினார். மந்திரம் ஓதினார். வலமிடமாகச் சுற்றிவந்தார். இறைவனிடம் விடைகொண்டு இல்லம்போய்ச்சேர்ந்தார்.

இந்தத் தறுவாயில் மலையேறிய கண்ணப்பர் கடவுளிடம் வருகிறார். அவ்வந்தணர் அழகுபடச் சாத்தியவற்றை எல்லாம் ஒரு செருப்படியால் உதைத்துத் தள்ளுகின்றார். வாயில் முகந்துவந்த இனியநீரை இறைவனது திருமேனியில் உமிழ்கின்றார். தலையிற்செருகி வந்த காட்டுப்பூவைத் திருமுடியிற் சாத்துகின்றார். இறைச்சியை இறைவன் எதிரே வைத்துப் படைக்கின்றார். எம்பெருமானைக் கண்டுகண்டு உள்ளங் கசிந்து கசிந்து உருகுகின்றார். அன்பினால் தன்னையும் மறந்து குதித்துக் கூத்தாடுகின்றார். திருவடியை அன்பினால் இறுகத் தழுவிக் கொள்ளுகிறார். ஆரா அன்பொடும் இறைவனை நினைந்துருகிய வண்ணமாய்க் கானகம் திரும்புகின்றார்.

**அந்தணர் அதைக் காணல் :** பொழுதும் போகிறது. இருளும் பரவுகிறது. நள்ளிரவாய்ப் பொழுது புலர்கிறது. இருளை நீக்கிக்கொண்டு கதிரவன் எழுந்து தோன்றும் பொழுது மறையவரும் விழித்தெழுந்து போகின்றார். நீரினில் மூழ்கிக் குளித்தெழுந்து ஆண்டவனிடம் அன்புடனே வருகின்றார். முன்னையநாள் தாம்செய்த ஒப்பனை ஒன்றும் காண்கின்றார் இல்லை. திருமுடிமேல் காட்டுப்பூச் சிதறிக் கிடப்பதைக் காண்கின்றார். இது ஒன்றுதானோ பழுதெனப் பார்க்கின்றார். இறைச்சியும் எலும்பும் எதிரே தென்படுகின்றன. திடுக்கிட்டு மனம் நோகின்றார். பின் ஒருவாறு தேறி, "இவ்வாறு செய்வார் யார்" எனக் கண்டறியவேண்டும் எனக் கருதினவராய் எவருடைய கண்ணுக்கும் புலனாகாதபடி ஓரிடத்திலே மறைந்து நிற்கின்றார். அவ்வகன்ற காட்டில் அக்கொடிய வேடுவர் முன் போலவே வருவதைப் பார்த்ததும் குலை எல்லாம் நடுநடுங்க வேர்த்து நிற்கின்றார். அவ்வேடுவர் செய்யும் வழிபாடனைத்தையும் முதலிலிருந்து முடிவுவரை கண்ணெரிய உடலெரிய மனமெரியக் காண்கின்றார். எச்சில் உமிழ்ந்தாட்டுவதனையும் இறைச்சி எதிர்ஊட்டுவதனையும், தலைப் பூவைச் சூட்டுவதனையும் கண்டு கண்டு எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணாக நின்று பின்னர் மெல்ல வீடுபோய்ச் சேருகின்றார்.

**முறையீடு :--** மறுநாளும் இறைவனிடம் வந்தபோது முன்னாள் கண்டதை நினைத்து முறையிடுகின்றார். "இறைவனே நடந்ததைக் கேட்டருளும். நாள்தோறும் நான்வந்து உமக்கு அழகான ஒப்பனைசெய்து போகின்றேன். வழிபாடு இயற்றுகின்றேன். நான் போனதும் ஒரு வேடுவன் நாயும் தானுமாய்ப் புகுந்து மிதித்து உழக்குகின்றான். செருப்படியால் ஐயோ உதைத்துத் தள்ளுகின்றானே. மாசுமறுவற்று வாலியதாய் எவராலும் தீண்டுதற்கரிய உமது திருமேனியின்மீது தனது வாய் எச்சிலை உமிழ்கின்றான். சடைபிடித்து நாறிக்கிடக்கும்தலையில் செருகிவந்த சருகிலையும் பூவும் மயிரோடு விழுமாறு தனது குடுமியை அவிழ்த்துவிட்டு உதறுகின்றான். வீச்சடிக்கும் இறைச்சி ஏதேதோ கொண்டுவந்து பழிபிறங்காத

உமது அழகிய கோயிலின் முன்பு இட்டுப் போகின்றான். ஒருநாளா இரண்டு நாளா ? இது உமக்கு என்றும் இனிதாக விளங்குகின்றதோ ? யான் போய் அவனைத் தடுப்பது என்றாலோ என்னை உருக்கண்டாலும் ஓங்கி யறைந்து கொன்றே தொலைப்பான். அத்துணைக்கொடியன் அவன். பிறரைக்கொண்டு தடுப்பதென்றாலோ கொண்ட கொள்கையை விடாத முருடன். எவர் சொல்லையும் கேட்பவன் அல்லன். அவனைத் தடுக்கும் வன்மையும் உலகில் ஒருவர்க்கும் இல்லை. ஆகவே பழுது புகுந்ததனை நீரே தீர்த்தருள வேண்டும். உமது திருவுள்ளக் குறிப்புத்தான் யாதோ'' என்று புலம்பி முறையிட்டுத் தம்வழியே போகின்றார்.

**கனவு:—** இரவாகிறது. அந்தணர் நன்றாகத் தூங்குகின்றார். கனவொன்று காண்கின்றார். காளத்தியப்பன், பிறையணிந்திலங்கும் பின்னிய சடைமுடியும், கடல் நஞ்சுண்டு கறுத்த கழுத்தும், நெருப்பேந்திய கையும் நெற்றிக்கண்ணும், திருமேனி முழுதும் பூசிய திருநீறும், பருத்த தோர் மாடும், பக்கத்து அம்மையும் உடன் தோன்றத் தோன்றுகின்றான். தன் திருவுருவப் பொலிவை அந்தணர்க்குக் காட்டா நிற்கின்றான். கண்ணப்பனார் அன்பின்பெருமையை விரித்துரைக்கின்றான்.

'' என்னை அன்புடன் வழிபடும் வேடனை, இழிந்த கானவன் என்று எண்ணி மனம் புண்ணாகாதே. அவன் தலைசிறந்த குணங்களால் விளங்கும் முனிவரன் என்று உணர்ந்துகொள். அவன் இருக்கும் காடு பெருந் தவப்பள்ளியாகும். அவன் செருப்படியும் செருப்படியோ? அவன் வாய் எத்துணை அழகியது [குடம் நிறுத்தி மறையோதிக் கங்கைநீர் நிரப்பி அதில் பொற்பூ எனப் பொன்னும் மணியும் இட்டுப் பின் கீழே மூன்று கூறாக வகிர்ந்து நுனியில் ஒன்றாகச் சேர்த்து முடியுமிட்ட தருப்பையாம் குசையைக் குடத்தின்மேல் வைப்பது திருமஞ்சனமாட்டு முறையாகும். அவ்வாறே இவனும் திருமஞ்சனம் ஆட்டுகின்றான்] அவனுடைய அழகிய திருவாயே யான் இதுவரையிலும் திருமஞ்சனமாடும் போதில் கண்ட குடங்களில் மிகமிகத் தூயதாகும். அதில் அவன் முகந்துவரும் நீரோ வாலிதாகிய கங்கைநீராகும். எச்சில் என்று இகழவும் படுமோ? அக்குடத்தில் இடும் மணியும் அவனது பற்களது வரிசையே. அந்தப் புனலை என்மீது உமிழும்போது அந்நீர் பட்டுத் தெறிக்குமாறு தடுத்து நிற்கும் மீசைப் புன்மயிர் எனது திருவடிக்கு மிகவும் இனிதாக இராநின்றது. நூல்கள் கூறும் குசையும் அத்துணைச் சிறப்பினதல்ல. அவன் தலையினின்றும் மயிரோடு சிக்கிக்கொண்டு என்மீது விழுவன வெறுஞ் சருகிலையல்ல. முள்ளம்பன்றியின் முள்போல நிற்கும் அவன் தலைமயிர் தருப்பையேயாகும். ஆகவே அவன் என்மீது அன்புடன் இடும் மலர்கள் வானகத்துள் கற்பகத் தலரைத் தருப்பையில் பழுது படாதபடி பொதிந்து வைத்துக்கொண்டு வந்தவையாகும். அவன் மனம் உவந்து படைக்கும் இறைச்சியோ ஞானிகள் வேள்வியில் தரும் நெய் பால் அவி போல்

எனக்கு இனியதாகும். இவ்வாறு அவன் வழிபாடு எனது மனதிற்குப் பிடித்தமாக இருக்கின்றது. அவன் என்னுடன் ஒன்று கலந்து அன்பு பாராட்டுவதனை நாளைக்கு உனக்குக் காட்டுவேன். நீ செய்யும் நல்ல வழிபாட்டினைச் செய்து முடித்ததும் அங்கேயே இரு. எல்லாவற்றையும் காண்பாய்" என்று திருவாய்மலர்ந்தருளிப் போகின்றான் இறைவன்.

**மறுநாள்:–** இறைவன் மறைந்ததும் மறையவர் நடு நடுங்கி விழித்து எழுகின்றார். "இறைவனே எனது கனவில் எழுந்தருளினனே. இறைவனே புகழும் இவ்வேடுவனை இகழ்ந்தோமே" என்று மனமிகக் கூசுகின்றார். பொழுது புலர்வதன் முன்னரே போய்க் குளித்துவிட்டு மலையேறிப் போகின்றார். தாம் வழக்கப்படி செய்யும் ஒப்பிலா ஒப்பனையும் வழிபாடும் எல்லோரும் புகழுமாறு சிறப்பாகச் செய்து முடித்து ஒருவருக்கும் தோன்றாதபடி ஒருபுறமாக ஒதுங்கி ஒளித்திருக்கின்றார்.

**கண்ணப்பர்:-** கரகரஎன்று கதிரவன் எழுகின்றான். வான்றனி முகட்டில் வந்து நெருப்பினைக் கொட்டத் தொடங்குகின்றான். இறைவனுக்காகவேண்டி ஆவலோடும் அன்போடும் நடுப்பகல் வரையில் வேட்டை ஆடுகின்றார் கண்ணப்பர். பிடித்துக்கொன்ற பெரியதோர் உடும்பினைத் தூக்கிக்கொண்டு, சிலையையும் கணையையும் தாங்கித் தோலுடை உடுத்துக் காலில் செருப்பினை மாட்டிக்கொண்டு நாயானது தம்மைப் பிரியாது பின் தொடர்ந்து வரக் கண்ணப்பர் அந்தக் காட்டில் தூரத்தே தோன்றுகின்றார். முக்கண் படைத்த திருக்காளத்திச் செல்வனார் தமது திருக் கண்ணொன்றில் புண்ணீர் நில்லாது ஒழுக வீற்றிருக்கின்றார். காண்கின்றார் கண்ணப்பர். நடுநடுங்கிப் பதைபதைத்து நிற்கின்றார். இன்னதுதான் செய்வதென்று அறியாது ஏதேதோ எண்ணி மனஞ்சுழல நிற்கின்றார். எதிர்பாராதபடி இடி விழுந்தாற்போல நேர்ந்த இதனால் அவர் வாயில் கொண்டுவந்த நீர் அவரையும் அறியாமல் கீழே சிந்திவழிகின்றது. கண்ணீர் ஆறாகப் பெருகுகின்றது. கையிலிருந்த வில்லும் அம்பும் கைதவறி நழுவி விழுகின்றன. விழுந்தவை குப்பாயத்தில் அழுந்த அவர் நிலையற்ற பனைபோல் விழுகின்றார். ஆற்றாமை மிகுதியினால் தரையில் புரண்டு புரண்டு புலம்புகின்றார். ஏதோ ஓர் எண்ணம் தோன்றுகின்றது. சடுக்கென எழுகின்றார். வில்லையும் அம்பையும் தூக்கிக்கொண்டு எங்கோ ஓடுகின்றார். இறைவனுக்கு இத்தீங்கினை இழைத்தவர்கள் இதற்குள்ளாக இவ்வனத்தின் எல்லைதாண்டி இருக்க இயலாது. பழிக்குப் பழி வாங்குகின்றேன்." என்று எங்கெங்கோ ஓடோடியும் தேடுகின்றார். ஓர் ஈ, காக்கையும் காண்கின்றார் இல்லை. "இனி என் செய்வது" என இரங்குகின்றார். இப்புண்ணிற்குத் தக்கனவாகிய மருந்துகள் பலவற்றினுள்ளும் நல்லன என்று கைகண்டவற்றை எல்லாம் எண்ணி எண்ணிப் பார்த்து எங்கெங்கோ தேடிக் கொண்டு வருகின்றார். கண்ணில் பிழிகின்றார். பிழியப் பிழியக் குருதி மேலும் மேலும் பொங்கிப் பெருகி

ஒழுகி ஓடியதே யன்றி நின்றொழிந்த பாடில்லை. இனிச் செயலாவது ஒன்றும் இல்லை என்று தம் நிலைகுலைகின்றார். "ஐயோ அத்தனுக்கு நேர்ந்தது என்னவோ என்னவோ" என்று அன்பு பற்றி எரிய, வாய்விட்டுக் கதறி அழுகின்றார். சிறிதும் பொறுக்க மாட்டாதவராய், "இந்தத் தீங்கினைக் கண்ட என் கண்ணைப் பிடுங்கி விடுகின்றேன், என்ன ஆகின்றதோ பார்க்கலாம்" என்று அம்பினை எடுத்துத் தம் கண் ஒன்றை அகழ்ந்து கையில் வைத்துக்கொண்டு இறைவன் கண்ணில் ஒக்க வைத்து அப்புகின்றார்.

கடவுளது கண்ணும் பழையபடி விளங்குகிறது. காண்கின்றார் இதனை. நெஞ்சுவந்து நிற்கின்றார். மற்றைய கண்ணிலும் கூரிய அம்பினை ஊன்றி அழுத்தப் போகின்றார். இறைவன் "இதுவே போதும்" என எண்ணுகின்றான். அழகிய சிவலிங்கத்தின் நின்றும் அகன்றதொரு மல ரென அழகிய கையை மேலே தூக்கி நீட்டி "நில்லு கண்ணப்ப, நில்லு கணணப்ப, என் அன்புடைத் தோன்றல்! நில்லு கண்ணப்ப" என்று கூறி, விரைவாகக் கண்ணப்பர் கையை அம்போடும் அகப்படப் பிடித் துக் கொள்கின்றான். வானவர்கள் மேலிருந்து பூமாரி பொழிகின்றனர். சங்கும் பறையும் தம்பட்டமும் ஒலிக்கின்றன. தொன்று தொட்டுவரும் சிறப்பினையுடைய முனிவர்களும் ஏத்திப் புகழ்கின்றார்கள். திருக் கண்ணப்பரும் விரைந்து சிவப்பேறு பெறுகின்றார்.

இவ்வாறு கதையைக் கூறி முடிக்கின்றார் நக்கீரனார். இக்கதைப் போக்கில் பலவகைச் சுவைக்குறிப்பும் தோன்றுகின்றன. எனினும் இவற்றில் எதுவோ தலையாகி விளங்கி முற்றி முதிர்ந்து இக்கதையில் சுவை எனப் பெயர் பெறுவது ?

**உவகை :—** கண்ணப்பர் கடவுளை வழிபடும்போது அகமகிழ்ந்து அன்பினால் கூத்தாடுகின்றார்.

> " பிரானைக் கண்டுகண் டுள்ளம் கசிந்து காதலிற்
> கொண்டதோர் கூத்துமுன் ஆடிக் குறைகழல்
> அன்பொடும் இறுக இறைஞ்சி ஆரா
> அன்பொடும் கானகம் அடையும் "

எனவருதல் காண்க, கண்ணினை அப்பியதும் குருதி நின்றபோது அக மகிழ்ந்து உவகை பூக்கின்றார், கண்ணப்பர்.

> " அப்பலும் குருதி நிற்பதொத் துருப்பெறக்
> கண்டுநெஞ் சுகந்து "

என்கிறார் நக்கீரர். இறைவன் கண்ணப்பரது வழிபாட்டினை அன்பினால்

மெச்சிப் புகழ்ந்து அந்தணர் கனவில் உவகையோடும் உரைத்துப் போகின்றார்.

"புரிவொடும்

பூசனை செய்யும் குனிசிலை வேடன்
குணமவை யாவன உரிமையிற் சிறந்த
நன்மா தவன்என் றுணர்அவன் உகந்து
இயங்கிய இடம்முனி வனமது வேஅவன்
செருப்படி யாவன விருப்புடை துவலே
எழிலவன் வாயது தூய பொற்குடமே
அதனிற் றங்குநீர் கங்கையின் புனலே
புனற்கிடு மாமணி அவன்நிரைப் பல்லே
அப்புனல் விடும்பொழு துரிஞ்சும் மீசைப்
புன்மயிர் குசையினும் நம்மடிக் கினிதே
அவன்தலை தங்கிய சருகிலை தருப்பையிற்
பொதிந்த அங்குலிக் கற்பகத் தலரே
அவனுகந் திட்ட இறைச்சி எனக்குநன்
மாதவர் விட்ட நெய்பால் அவியே
இதுஎனக்கு உனக்கவன்
கலந்த அன்பினைக் காட்டுவன் நாளை"

என்றெல்லாம் வருவன உவகைச் சுவைக் குறிப்புடன் ஒளிர்வன.

**அச்சம் :—** கண்ணப்பரது பிறப்பும் வளர்ப்பும் வடிவும் செயலும் கூறும் அடிகளோ கேட்போர் மனதை நடுநடுங்கச் செய்கின்றன.

"கரந்திருந் தம்பர்க் கானவன் வரவினை
பரந்த காட்டிடைப் பார்த்து நடுக்குற்று."

என்று அந்தணர் கண்டு அஞ்சி நிற்கின்றார். அவ்வச்சத்தினை,

"எனைஉருக்

காணில் கொன்றிடும் யாவ ராலும்
விலக்குறும் குணத்தன் அல்லன்"

என்று இறைவனிடம் அறிவிக்கின்றார். இவை எல்லாம் அச்சச் சுவைக் குறிப்பு நிரம்பி நின்றவை.

வெகுளி:— "நெடிதினிற் றேறிச்

சிலைக் கொடும் படைகடி தெடுத்துப் படுத்தவர்
அடுத்த இவ்வனத் துளர்எனத் திரிந்து"

என்றபடி கண்ணப்பர் வெகுண்டெழுந்து இறைவனுக்குத் தீமை விளைத்தவர் யார் எனத் தேடியது வெகுளிச் சுவையோடு வெளிவருவதாகும்.

இளிவரல்:— . " இறைவ

உற்றது கேட்டருள் உன்றனக் கழகா
நாடொறும் நான்செய் பூசனை தன்னை
ஈங்கொரு வேடுவன் நாயொடும் புகுந்து
மிதித்துழக்கித்
தன்செருப் படியால் நீக்கித் தன்வாய்
இடும்புனல் மேனியில் ஆட்டித் தன்றலை
தங்கிய சருகிலை உதிர்த்தோர் இறைச்சியை
நினதிருக் கோயிலில் இட்டுப் போமது
என்றும் நின்றனக் கினிதே எனைஉருக்
காணிற் கொன்றிடும் யாவ ராலும்
விலக்குறும் குணத்தன் அல்லன் என்றும்
திருக்குறிப்பு "

எனக் கண்ணப்பர் வழிபாட்டை இகழ்வதும், தமது மென்மை கண்டு தம்மாலொன்றும் தடுக்க முடியாதென உட்கொண்டு தம்மை இகழ்ந்து கொள்வதும் இளிவரற் சுவைக்குறிப்போடும் எழுந்தவையாகும்.

அவலம்:—

" வந்தவன் செய்து போயின வண்ணம்
சிந்தையிற் பொருது "

அந்தணர் இரங்கிப் புலம்புகின்றார். கடவுளது கண்ணில் புண்ணீர் ஒழுகக் கண்டு கண்ணப்பர் பட்டபாடெல்லாம் நம்மையும் அழச் செய்யவில்லையா?

" செல்வன் திருக்கா ளத்தியுள் அப்பன்
திருமேனியில் மூன்று கண்ணுள்
ஆங்கொரு கண்ணிலும் உதிரம்
ஒழியா தொழுக இருந்தன னுகப்
பார்த்துநடுக் குற்றுப் பதைத்துமனஞ் சுழன்று
வாய்ப்புனல் சோர மலர்க்கண்ணீர் அருவ
கரம்பயில் சிலைக்கணை கவசத் தழிந்து
நிலம்படப் புரண்டு நெடிதினிற் றேறி
சிலைக்கொடும் படைகடி தெடுத்துப் படுத்தவர்
அடுத்த இவ்வனத் துளரெனத் திரிந்தாங்கு

இன்மை கண்டு நன்மையில்
தக்கன மருந்துகள் பிழியவும் பிழிதொறும்
நெக்கு நெக்கிழி குருதியைக் கண்டு
நிலேதளர்ந் தெனத்தனுக் கடுத்தெனத்தனுக்கடுத்த
தெனத்தனுக் கடுத்தென் றன்பொடும் கனற்றி
இத்தனே தரிக்கிலன் இதுதனேக் கண்டஎன்
கண்ணினே இடந்து கடவுள்தன் கண்ணுறும்
புண்ணில் அப்பியும் காண்பன் என்ருெரு
கண்ணிடைக் கணேயது மடுத்துக்
கையில் வாங்கி அணேதர அப்பினன்"

பெருமிதம்:—

"கட்டற விரித்த கணக்கதிர் உச்சி
சுட்டடி இடுந்தொறும் சுறுக்கொளும் சுரத்தில்
முழுமரன் நிரந்த முட்பல வளாகத்
தெதிரினம் கடவிய வேட்டையில் விரும்பி
எழுப்பிய விருகத் தினங்களே மறுக்குறத்
தன்ஞய் கடித்திரித் திடவடிக் கணேதொடுத்
தெய்து துணித்திடும்"

எனவரும் வேட்டையின் சிறப்பும், புலி முதலியவற்ருேடு பொருதுவென்ற பெருமையும் கண்ணப்பர் வானவராலும் முனிவராலும் வாழ்த்தப்படும் முதன்மையும் பெருமிதச் சுவையைப் பெருக்குகின்றன.

**நகை:-** பெரியோர் வீடுகட்டிச் சோறு சமைத்து வாழ்வது கண்டு சிறுவர்களும் மணலில் வீடுகட்டிச் சோறு சமைத்துத் தெருவில் விளேயாடுவதுபோல, அந்தணர் செய்த வழிபாட்டை ஒட்டிக் கண்ணப் பரும் செய்வது ஒருவகையில் நமக்கு நகைப்புக் கிடமாகின்றது.

" துணித்த விடக்கினே
விறகிற் கடைந்த வெங்கனற் காய்ச்சி
நறுவிய இறைச்சி நல்லது சுவைகண்
டண்ணற் கமிர்தென அதுவே றமைத்துத்
தண்ணறுஞ் சுனேநீர் தன்வாய்க் குடத்தான்
மஞ்சன மாக முகந்து மலரெனக்
குஞ்சியிற் றுவர்ப்பூச் செருகிக் குனிசிலே
கடுங்கணே அதனெடும் ஏந்திக் கனல்விழிக்
கருங்குரல் நாய்பின் தொடர யாவரும்
வெருக்கோ ளுற்ற வெங்கடும் பகலில்
திருக்கா ளத்தி எய்திய சிவற்கு

வழிபடக் கடவ மறையோன் முன்னர்
துகிலிடைச் சுற்றித் தூநீர் ஆட்டி
நல்லன விரைமலர் நறும்புகை விளக்கவி
சொல்லிய பரிசிற் சுருங்கலன் பூவும்
பட்ட மாலையும் தூக்கமும் அலங்கரித்
தர்ச்சனை செய்தாங் கவனடி இறைஞ்சித்
திருந்து முத்திரைகள் சிறப்பொடும் காட்டி
மந்திரம் எண்ணி வலமிடம் வந்து
விடைகொண் டேகிய பிற்றெழிற் பூசனை
தன்னை புக்கொரு காலிற்
றெருசெருப் படியால் நீக்கி வாயின்
இன்புனல் மேனியில் ஆட்டித் தன்றலை
தங்கிய துவர்ப்பூ ஏற்றி இறைச்சியிற்
பெரிதும் போனகம் படைத்துப் பிரானைக்
கண்டுகண் டுள்ளம் கசிந்து காதலிற்
கொண்டதோர் கூத்துமுன் ஆடிக் குரைகழல்
அன்பொடும் இறுக இறைஞ்சி ஆரா
அன்பொடும் கானகம் அடையும் ''

எனவரும் அடிகள் ஆண்டவர் நிலையில் அன்புச் சுவையினையும், அந்தணர்நிலையில் இளிவரற் சுவையினையும் குறித்து நின்றாலும் ஒரு வகையில் நகைச்சுவைக் குறிப்புடனும் நயம்பட வருகின்றன.

**மருட்கை:-** இவ்வாறு பலவகைச் சுவைக்குறிப்புகள் தோன்றி நின்றாலும் இக்கதையின் சுவை மருட்கைச் சுவையாகவே முற்றமுடிய மாறாமல் விளங்குகின்றது. கானத்தலைவரது கொடுமையைப் பன் முறையும் வற்புறுத்திக் கூறுகின்றார் நக்கீரர். அவர் வானத்தலைவனிடம் வந்தவுடன் தாயைக்கண்ட கன்றுபோல அன்பு உருவாகி நிற்றலையும் பலவாறு புனைந்துகூறுகின்றார். வேட்டையில்அகப்படும்உயிர்களுக்கு அகனமர்ந்துறைவோர் கடவுள் கண்ணில் புண்ணீர் ஒழுகக்கண்டு ஒரு கண்ணிற்கு இருகண்ணையும் அகழ்ந்தெடுத் தப்புவதை நமக்குக் காட்டு கின்றார். இழிவான வழிபாட்டினைக் கண்டு மனமிரங்கிய அந்தணருக்கு ஆண்டவனே கனவில் எழுந்தருளி வேடனாரின் மேலாம் அன்பினை விரித்துரைத்தபோது அம்மறையவர் மனமிகக் கூசினார் என்கிறார். இகழத்தக்கது புகழதக்கதானமை கண்டு போற்றுகின்றார். அங்ஙனம் கன்மனம் படைத்தவன் இங்ஙனம் நீராய் உருகுகின்றானே என்று வியந்தே பாடுகின்றார் நக்கீரர். தாம் எந்தச் சுவைவரப் பாடவருகின்றார் என்பதனை, முன்னுரையிலேயே கூறிவிட்டுத்தான் தம் கதையினைச் சொல்லத் தொடங்குகின்றார்.

"திருக்கண் ணப்பர் செய்தவத் திறத்து
விருப்புடைத் தம்மவிரிநீர் உலகே—பிறந்தது
தேனழித் தூனுண் கானவர் குலத்தே திரிவது
ஒருபுலி குமுறும் பொருப்புடைக்காடே-வளர்ப்பது
செங்கண் நாயொடு தீவகம் பலவே—பயில்வது
வெந்திறற் சிலையொடு வேல்வாள் முதலிய
அந்தமில் படைக்கல மவையே—உறைவது
குறைதசை பயின்று குடம்பல நிறைத்துக்
கறைமலி படைக்கலம் கலந்த புல்லொடு
பீலிமேய்ந்தவை பிரிந்த வெள்ளிடை
வாலிய புலித்தோல் மறைப்ப வெள்வார்
இரவும் பகலும் இகழா முயற்றியொடு
மடைத்த தேனும் வன்னுய் விட்டுச்
சிலைவிடு கணையிலும் திண்சுரி கையிலும்
பல்கிளை யவையுடன் பதைப்பப் படுத்துத்
தொல்லுயிர் கொல்லும் தொழிலே வடிவே
மறப்புலி கடித்த வன்றிறல் முன்கை
திறப்படை கிழித்த திண்வரை யகலம்
அயிற்றெங்கு கவர்ந்த அருந்தண் நெற்றி
அயிற்கோட் டென்ன பெடுத்தெழு குறங்கு
செடித்தெழு குஞ்சியிற் செந்நிறத் துறுகண்
கடுத்தெழு வெவ்வுரை அவ்வாய்க் கருநிறத்
தடுபடை பிரியாக் கொடுந்திற லதுவே—மனனே
மிகக்கொலை புரியும் வேட்டையில் உயிர்கள்
அகப்படும் துயருக் ககனமர்ந் ததுவே—இதுவக்
கானத் தலைவன் தன்மை கண்ணுதல்
வானத் தலைவன் மலைமகள் பங்கன்
எண்ணரும் பெருமை இமையவர் இறைஞ்சு
புண்ணியப் பாதப் பொற்பா மலரிணை
தாய்க்கட் கன்றெனச் சென்று கண்டல்லது
வாய்க்கிடும் உண்டி வழக்கறி யானே"

என மருட்கைச் சுவையினைக் குறித்தல் காண்க. ஆகவே, கானத் தலைவரது தன்மை கொடியதெனக் காட்டி அவர் வானத்தலைவனிடம் வந்ததும் தாயைக் கண்ட ஒன்றுமறியாச் சிறுகுழவிபோல மாறி நிற்கும் அன்பு நிலையோடு முன்னைய அச்ச நிலையை ஒன்ருக வைத்து நோக்கி "ஈதென்ன மாறுதல் இருந்தபடி" என வியந்து நிற்கின்ருர் நக்கீரர். வானவர்க்கும் அரியது கானவர்கட்கு எளியதானமை கண்டு வியந்து நிற்கின்ருர். இவ்வியப்புக் கன்மனக் கொடியோன் அன்பினிற் குறியோன் ஆனஆக்கம் பற்றி எழுந்த தொன்ருகும்.

## திருமறம் . கல்லாடர்

**கல்லாடம் :—** கல்லாடனுரது திருமறம் நக்கீரனுரது போன்று அத்துணை நீண்டதுமல்ல; கதையினை அவ்வளவு விரிவாக எடுத்துரைப்பதும் அல்ல. கல்லாடனுர் தமது கல்லாடத்திலும் கூட இக்கதையினைக் குறித்துள்ளார். ஒன்றுமறியா வேடனது வழிபாட்டிற்கு மகிழ்ந்துபோய், அவன் கொண்டுவந்து ஊட்டும் எச்சில் இறைச்சியை நிரம்ப உண்டு, " இன்னும் இறைச்சி இல்லையோ ? " என்று அவாவி நிற்பவன் என்று இறைவனை இகழ்வதுபோல அவனது அருளின் திறத்தைப் புகழ்கின்றுர்.

" முன்னொரு காலத் தடுகொலைக் கணைந்த
முகிலுருப் பெறுமோர் கொடுமரக் கிராதன்
அருமறைத் தாபதன் அமைத்திடு செம்மலைச்
செருப்புடைத் தாளால் விருப்புடன் தள்ளி
வாயெனும் குடத்தில் வரம்பெற எடுத்த
அமுதுகடற் றள்ளு மணிநீர் ஆட்டிப்
பின்னல்விட் டமைந்த தன்றலை மலரினைத்
தருமலர் விண்புக மணிமுடி நிறைத்து
வெள்வாய் குதட்டிய விழுதுடைக் கருந்தடி
வைத்தமை யாமுன் மகிழ்ந்தமு துண்டவன்
மிச்சிலுக் கின்னும் இச்சைசெய் பெருமான் "

என்பது கல்லாடம். இவ்வாறு இறைவன் தன்னை இழித்துக்கொண்டது இதனுல் என்பதனை இம் மறத்திலே எடுத்து இயம்புகின்றுர்.

**வேடத் திருமேனி :—** அன்பானது ஓர் உடலும் உயிரும் பெற்று உலகில் உலவுவது போன்றவன் அக்கண்ணப்பன். பிளவுபட்ட வாரினைக் கால்மேல் போர்த்து, உள்ளங்காலில் ஒட்டிக்கிடக்கும் செருப்பினை இறுகக் கட்டிக்கொண்டான். இடுப்பைச் சுற்றிலும் தோலுடையாகிய கச்சொன்றினை வரிந்து கட்டினுன். அதிலே எஃகால் செய்த சுரிகைக் கத்தியைச் செருகியும் வைத்தான். அல்லும் பகலும் வேட்டையாடி உயிர்களை அலைக்கழித்துக் குத்திக்குத்திக் கொன்றுவருவதால் அச் சுரிகையில் குருதிக்கறை மறைந்தபாடில்லை. (ஊசிகொண்டு தைப்போர் அவ்வூசி விரலில் குத்திக்கொள்ளாதபடி பித்தளையில் பூண்செய்து நடு விரலுக்கு இட்டுக்கொள்வது போல) வில்லை வளைத்து நாண் எறிகையில் கைவழுக்கித் தசை பிய்த்துப்போகாதபடி கைக்கட்டியும் அணிந்தான். தோலாற்செய்த நீண்ட பையில் மெத்தென்றிருப்பதற்காக, அப் பை நிறையச் சிறுகச்சிறுக வெட்டிய குறுமயிர் இட்டு அடைத்து வார்கொண்டு கையில் இறுகக் கட்டியிருந்தான். இதுவே இவனது கைக்கட்டி. புலியினது வளைந்த உகிரினையும் பன்றியினது வெள்ளென்றிருக்கும் கோரைப் பல்லையும் ஒன்று மாற்றி ஒன்று வைத்துக் கோத்த மாலை ஒன்றைத் தன் மார்பில் அணிந்திருந்தான். அதைவிட்டால் அவனுக்கு

மேலாடை என்பது வேறு ஒன்று இல்லை. நெற்றியைச் சுற்றிலும் நீலநிறம் பொருந்திய மயிற்பீலியை அழகாகச் சூடி நின்றான். அதனோடு காடு போல அடர்ந்துகிடக்கும் தலைமயிரில் பலகறைகளைக் கோத்துப் புனைந்து கொண்டான். வேர்க்க வேர்க்க வேட்டையாடி மேலெல்லாம் குருதி ஒழுக விலங்குகளைக் குத்திக் கொன்று அவற்றின் புலாலை உண்டு பின் வாய் கழுவாதும் உடல் குளியாதும் திரிந்துவரும் அவ்வேடுவனது அருகில் அணுகாதபடி வீச்சம் அடிக்கும். அவன் வடிவோ ஓ எனும் எழுத்தைப் போல வளைந்து முறுக்கிக்கொண்டு கிடக்கும்.

(சிவபெருமானும் இவனது இனத்தாரே). இவன் வேட்டையில் வேங்கைப் புலிகளைக் கொல்வது போலச் சங்கரனும் புலியினைக் கொன்று அதன் தோலை வெற்றியின் அறிகுறியாக அணிந்துகொள்ள வில்லையா? [இத்தகைய இழிந்த வேடனே சிவபெருமானுடைய அடியவர் இனத்தில் தலைசிறந்தவன். இனம் இனத்தைக் காக்கும்.]

**வேட்டை வழிபாடு :—** இவ் வேடன், குறி தவறாது பட்டுருவிக் கொன்றே தொலைக்கும் கூரிய அம்பும் நீண்ட வில்லும் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். செங்குத்தாய் வானத்தில் தொங்கவிட்டாற்போலத் தனித் தனியாய் நிற்கும் உயர்ந்த கல்கள் நிரம்பிய மலைகளானவை நெருங்கி அடர்ந்திருக்கும் பாலைவனத்தில் காற்றைப்போல் விரைந்து பறந்து தாவிக் குதித்துத் தாண்டி ஏறி இழிந்து ஓடி, விலங்குகளைத் தேடித் திரிந்தான். வில்லைச் சடக்கென வளைத்துக் குறிபார்த்து விசையிற் செல்லும் மிகக் கூரிய அம்பினை விட்டுக் கொழு கொழுத்த பன்றிகளாகப் பார்த்துக் கொன்றான். கொன்றவற்றை அம்பைக்கொண்டு தோல்போகக் கிழித்துத் தசையைக் கூறுபோட்டு. அரிந்தரிந்து தன் அம்பில் கோத்தெடுத்து நெருப்பை நன்றாக மூட்டிக் காய்ச்சினான். நன்றாக வெந்ததோ, இனிதாக இருக்கின்றதோ என்று நாவிலிட்டுச் சுவைத்தும் பார்த்தான். அதுவே இறைவனுக்கு உணவாவது. திருமஞ்சனமாட்ட எண்ணித் தண்ணீரைத் தன் வாயே குடமாக முகந்து சென்றான். திருப்பள்ளித் தாமமாகச் சாத்தத் தன் தலையில் பூக்களைப் பொதிந்து வைத்துக்கொண்டு போயினான். கானப் பேரூரனை கண்ணுதலது திருமுன்பு வந்து நின்றான். அவரது திருமுடியில் அதற்கு முன்பு வழிபாடு செய்து சென்ற சிவகோசரியார் இட்டுப்போன பூக்களை எல்லாம் செருப்படியால் உதைத்துத் தள்ளினான்.

**கண்ணப்பர் :—** 'என்னே! இவ்வேடன் இவ்வாறு செய்கின்றானே' என்று மனமிரங்கிய கோசரியாருக்கு இவனுடைய அன்பின் ஆழத்தைக் காட்ட எண்ணினார் கடவுள். முக்கண் அப்பனார், தமது வலது திருக்கண்ணில் செங்குருதி பொங்கி வழிவதுபோலக் கண்ணப்பனுக்குக் காட்டி நின்றார். கண்டான் வேடன். கண்ட அப்பொழுதே அழுது கீழ் விழுந்தான். பலவகையாலும் தொழுதான். " ஏதேனும்

செய்தாலன்றோ இது தீரும் ” என நினைத்துச் ‘ சரேல் ’ எனக் குதித்து எழுந்தான். ஆற்றாமை மிகுதியால் ‘ ஐயையோ ’ என அரற்றிப் புலம்பிக்கொண்டே ஓடினான். புனங்களில் சென்று மருந்துகளைத் தேடிக் கொண்டு வரினும் அவற்றால் எல்லாம் இந் நோய் நீங்காது என்று அவனுக்குத் தோன்றியது. தன்னையே மருந்தென்று தன் கண்ணை இடந்து அப்பினான். குருதி அப்பொழுதே நின்றுவிட்டது, ஆனால், மற்றொரு திருக்கண்ணிலிருந்தும் குருதி ஒழுகியது. “ இது முன்னைய கண்ணில் வந்த நோய் போன்றதே. ஆகவே ‘ மிகுதி நிற்கும் மற்றொரு கண்ணையும் அப்பிவிடுவேன் ’ என்று அம்பின் நுனியால் கண்ணை அகழத் தொடங்கினான். வீணே வாட்டி வருத்துவதைப் பொறாத ஆண்தன்மை மிக்க ஆண்டவனார் கோசர்க்கு வேடனது வெள்ளப் பெருக்கெடுக்கும் மேலாம் அன்பினைக் காட்டியது போதும் என்று எண்ணினார். தமது திருக்கையால் வேடனது இரண்டு கைகளையும் சட்டெனக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். “ இதோ பார்! எமது புண் ஒழிந்து போயது. நீயே நல்லவன்; நீயே நல்லவன் ” என்று கூறித் தடுத்தார். தட்டிக் கொடுத்தார்.

**பிறவிக்கு மருந்து :—** இனிச் சிவனைத் தொழவேண்டுவதில்லை நல்லவன் என்று சிவபெருமானாலேயே கொண்டாடப்பெற்ற இத் திரு வேட்டுவரது திருவடியைக் கைதூக்கிக் கும்பிட்டாற் போதும். வினையினால் தாயின் கருப்பையைத் தேடிப்போய்ப் பிறந்திறப்பதே தொழிலாய் நாம் படும் பாடெல்லாம் அடியோடு ஒழிந்துபோகும்.

**கதைப் போக்கு :—** இதுவே கல்லாடனார் கண்ட கண்ணப்பர் கதை. எவ்வாறு கண்ணப்பர் கதையை இப் பெரியார் எடுத்துரைக்கின்றார்?

“ பரிவின் தன்மை உருவுகண் டனையவன் ”

என்று தொடங்குகின்றார். இம் முதலடி கண்ணப்பரது உயர் தனிச் சிறப்பை முன்னராகவே சுட்டிக் காட்டுகின்றது. ஆனால் அவனது உருவையும் வடிவையும் அணியையும் செயலையும் பாருங்கள். நகைப் புக்கிடமாய் இகழ்தற்குரியனவாய் இருக்கின்றன. அவனது வன்பு நிலையைக் கண்டபின் அவனது அன்பு நிலையை உணரலாகுமோ ? இவ் வேற்றுமையை எல்லோர் மனதிலும் எளிதிற் பதியவைத்தற்காகவே தொடக்கத்திலேயே அவன் அன்புருவன் என்று எடுத்துக்காட்டி அவனை உயர்ந்தோன் எனப் புகழ்ந்ததற்கேற்ப, மரபு பற்றி “ உள்ளங்கால் முதல் உச்சி வரை ” முறையே புனைந்துரைத்துப் போகின்றார்.

"போழ்வார் போர்த்த தாழகச் செருப்பினன்
குருதி புலராச் சுரிகை எஃகம்
அரையிற் கட்டிய உடைதோற் கச்சினன்
தோல்நெடும் பையிற் குறுமயிர் திணித்து
வாரில் வீக்கிய வரிக்கைக் கட்டியன்
உழுவைக் கூனுகிர் கேழல்வெண் மருப்பும்
மாறுபடத் தொடுத்த மாலை உத்தரீயன்
நீலப் பீலி நெற்றி சூழ்ந்த
கானக் குஞ்சிக் கவடி புல்லினன்"

என்று அவனது வார்த்தோல் கட்டிய செருப்பினையும், சுரிகைக் கத்தியையும், கச்சையையும், மாலையையும், பீலியையும், பல கறையையும் புனைந்துரைத்து அவற்றில் அவனது அன்புநிலை அடங்கியிருக்கின்றதா என ஆராய்ந்து, அவற்றில் அவனது இழிதகைமையும் அறிவின்மையும் கீழ்மையுமே இருப்பனவாகக் காட்டுகின்றார் கல்லாடனார். சிறுகச் சிறுக அவனது இழிவின் பெருக்கை விளக்கிக்கொண்டே போய் அவனுடைய இழிவின் உயர் தனிச் சிறப்பை "முடலை நாறும் குடிலை யாக்கையன்" என்று விளக்கி அவனது வீச்ச நாற்றத்தையும் வளைந்த உடலையும் எள்ளி இகழ்ந்து நகையாடுகின்றார். இவ்வாறு இளிவரற் சுவைக் குறிப்பும் நகைச் சுவைக் குறிப்பும் தோன்ற அவனைப் புனைந்துரைத்தபின்,

"வேங்கை வென்று வாகை சூடிய
சங்கரன் தன்னினத் தலைவன்"

என்பதாக இத்தகையவனே சிவனடியாரில் சிறந்து விளங்குபவன் எனத் தெளிவுறுத்தி மற்றொரு முறையும் வேற்றுமையை நமது மனத்திலே எழுப்பிக் காட்டுகின்றார். சிறப்பைக் கூறியவர் அடுத்தாற்போல இழிவையும் கூறுகின்றார். காட்டிலும் மலையிலும் வாழும் விலங்குகளைப் போல ஓடித் திரிந்து வேட்டையாடிவந்து அவன் செய்யும் வழிபாட்டினை எல்லோரும் எள்ளி நகையாடுமாறு சுருக்கமாகக் குறித்துவிடுகின்றார்.

..................."ஓங்கிய
வில்லும் அம்பும் நல்லன தாங்கி
ஏற்றுக் கல்வனம் காற்றினில் இயங்கிக்
கணையில் வீழ்த்துக் கருமா அறுத்துக்
கோலின் ஏற்றிக் கொழுந்தீக் காய்ச்சி
நாவில் வைத்த நாட்போ னகமும்
தன்தலைச் செருகிய தண்பளித் தாமமும்
வாய்க்கல சத்து மஞ்சன நீரும்

கொண்டு கானப் பேருறை கண்ணுதல்
முடியிற் பூசனை அடியால் நீக்கி ''

என்று அவன் வழிபடவரும் நிலையினைப் பாடுகின்றார். " செருப்படி " எனக் கூற மனங்கூசி வாளா அடி எனவே கூறிவிடுகின்றார். மறைகள் சொல்லிய முறைப்படி வழிபடும் கோசரியார்க்கு இவனது பேரன்பு எவ்வாறு விளங்கும்? அவருக்கு இவனது அன்பினை நேரில் காட்ட எண்ணினார். கடவுள் என்பதாக மறுபடியும் கண்ணப்பனது உயர்வை நமக்கு நினைப்பூட்டுகின்றார். கண்ணப்பன் செய்கையைத் திறம்பட விரித்துரைக்கின்றார்.

" நீங்காக் குணத்துக்
கோசரிக் கன்றவன் நேசம் காட்ட
முக்க ணப்பனுக் கொருகணில் உதிரம்
தெக்க ணத்திடை இழிதர அக்கணம்
அழுது விழுந்து தொழுதெழுந் தரற்றி ''

என்பதாக இவன் புலம்புவதனை அவலச்சுவைக் குறிப்புத் தோன்றக் கூறினார். உயிரையுங் கொடுத்துதவும் வள்ளல்களைப் போல

" புனமருந் தாற்றப் போகாதென்று
தன்னை மருந்தென்று மலர்க்கண் அப்ப
ஒழிந்த மற்றை ஒண்திரு நயனம்
பொழிந்த கண்ணீர்க் கலுழி பொங்க
அற்ற தென்று மற்றைக் கண்ணையும்
பகழித் தலையால் அகழ ''

என்றபடி தன் கண் இரண்டையும் முன்பின் பாராது அகழ்ந்துதவ முன் வந்த செயலினைப் பெருமிதச் சுவைக்குறிப்புத் தோன்றக் கூறிஉள்ளனர். இக்கண்ணப்பன் சிவனுலேபுகழப்பெற்றான். சிறுகுழந்தை பூச்சிக்காரனைக் கண்டு அஞ்சியோ, தாய் இல்லையே யென்று வருந்தியோ அழுவதுகண்டு தாயானவள் மனம் பொறுதவளாய், விளையாடியது போதியதென்று வெளி வந்து " இதோபார் பூச்சிக்காரன் போய்விட்டான். உன்தாய் நான் இதோ இருக்கிறேன். என்மேல் இத்துணை அன்பா உனக்கு - நீயேநல்லகுழந்தை- என்கண்ணே '' என்றுபுகழ்ந்து தட்டிக் கொடுத்து அழுகை ஓயப் படுத் துவது போலச் சிவபெருமானும் சிறு குழவிபோல அன்புருவாய் நின்ற கண்ணப்பனை

"ஆண்டகை
ஒருகை யாலும் இருகை பிடித்து
ஒல்லே நம்புண் ஒழிந்தது பாராய்
நல்லே நல்லே"

என்று தட்டிக் கொடுத்ததைப் புகழ்கின்றார். இனிச் சிவன் ஒருவன் எதற்கு என்கின்றார்? இக்கண்ணப்பனேப் போற்றிஞல் போதாதா? விஃனயும் ஒழியும். வீடும் பெறலாம் என்று கண்ணப்பனே உயர்த்திக்கூறி முடிக்கின்றார்.

"நல்லே நல்லே எனப்பெறும்
திருவேட் டுவர்தம் திருவடி கைதொழக்
கருவேட் டுழல்விஃனக் காரியம் கெடுமே"

இதுவரையில் ஒருமையில் கூறிவந்தவர் இப்போது திருவேட்டுவர் எனப் பன்மையாற்கூறி உயர்த்திப் போற்றுவது காண்க

**மருட்கை :—** இவ்வாறு இக்கதைப் போக்கில் நகையும் இளிவரலும், அவலமும் பெருமிதமும் தோன்றிஞலும், இதனில் சுவையாக முற்றி விளங்குவது மருட்கையேயாகும். கொலேத்தொழிலேக் கண்டு குலேநடுங்கிப்பின் அன்புநிலேயைக்கண்டு "இது என்னே மாறுதல்" என வியந்து நின்றார் நக்கீரஞர். கல்லாடஞரோ வேறு வகையில் வியந்து நிற்கின்றார். செயற்கெளியவும் செய்யமாட்டாத சிறியோரில் மிக மிகக் கடையோஞகிய அறிவிலா வேடன் பலகறையும் பன்றிப் பல்லும் அணிந்துகொண்டு எல்லோரும் எள்ளி நகையாடும் வழிபாடியற்றிய கானவன் – செயற்கரிய செய்வாரில் பெரியோஞகித் தன் கண்ணேயும் பிடுங்கித் தந்து கடவுளால் புகழப்பெற்றானே என்று வியந்து நிற்கின்றார். பேராசிரியர் "இனி மதிமை சாலா மருட்கை, என்றமையானே சிறுமைப் பொருள் பெருந்தொழில் செய்தலும் பெருமைப்பொருள் சிறுதொழில் செய்தலும் வியப்பாம் என்க" என்று தமது தொல்காப்பிய உரையில் கூறியுள்ளதை இங்கு உற்று நோக்க வேண்டும். கீழான குடியிற் பிறந்து கீழ்க்குடிச் செய்கையுடைய கண்ணப்பர் மேலானவரும் செய்தற்கரிய பெருஞ் செய்கை செய்தமை கண்டு இங்கு வியப்புத் தோன்றியது.

**சேக்கிழார்.—** இவை எல்லாம் சேக்கிழார்க்கு முன்னூல்களாகும். அவருக்கு முதல் நூல், சுந்தரரது திருத்தொண்டத் தொகையும் அதன் வழிநூலாக நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியுமே யாகும். "கலேமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்" என்கின்றார் சுந்தரர். அதனே விரித்துரைக்க வந்து வழிநூல் இயற்றிய நம்பியாண்டார் நம்பி.

நிலத்திற் றிகழ்திருக் காளத்தி
யார்திரு நெற்றியின்மேல்
நலத்திற் பொழிதரு கண்ணிற்
குருதிகண் டுண்ணடுங்கி
வலத்திற் கடுங்கணை யாற்றன்
மலர்க்கண் ணிடந்தப்பினுன்
குலத்திற் கிராதன்நம் கண்ணப்ப
னுமென்று கூறுவரே.

எனப் பாடுகின்றூர்! சார்புநூல் செய்துயர்ந்த சேக்கிழாரது கதையின் விரிவைப் போக்கிச் சொல்லுவோம். அக்கதைச் சுருக்கத்தை ஒரு செய்யுளில் அடக்கி உமாபதி சிவாசாரியார் தமது திருத்தொண்டர் புராண சாரத்தில் பாடியுள்ளார்.

வேடரதி பதியுடுப்பூர் வேந்த னுகன்
விளங்கியசேய் திண்ணனுர் கன்னிவேட்டைக்
காடதில்வாய் மன்சனமும் குஞ்சிதருமலரும்
காய்ச்சினமென் றிடுதசையும் காளத்தியார்க்குத்
தேடருமன் பிணிலாறு தினத்தளவும் அளிப்பச்
சீறு சிவகோசரியும் தெளிய விழிப்புண்ணீர்
ஓடஒரு கண்ணப்பி ஒருகண்ணப்ப
ஒழிக எனும் அருள் கொடருகுற நின்ருரே.

என வருதல் காண்க.

**உவகை :—** இனி இந்தச் சேக்கிழார் பாடிய கதையில் சுவையாகத் தோன்றி விளங்குவது யாது ? பலசுவைக்குறிப்பும் தோன்றுகின்றன என்பதைப் பின்னர்க் கதையினை விரிவாக ஆராயும்போது காண்போம். ஆனுல் இவற்றில் சுவையாக முற்றி முதிர்ந்தது உவகையே என்று உறுதியாக இங்கேயே உரைத்து விடலாம். இவ்வுவகைச்சுவை அன்புச்சுவை எனப் போற்றத் தக்கதாகும். அன்புடையார் இருவர் இணைபிரியாது கூடிநின்று இன்பம் துய்ப்பதுபோலக் கண்ணப்பனுரும் கடவுளும் உள்ளத்தே உவகை ததும்பி ஒன்றுகூடி நின்றனர். அன்பராயினுர் தமது காதலருக்கு வந்த துன்பத்தைத் தமக்கு வந்ததேபோல எண்ணி மனம்வருந்திப் பின் அந்நோய் தீரும்வகை அறிந்தால், தம் உடல் பொருள் ஆவிமூன்றினையும் பிறிதொன்றும் பாராது வருத்தம் என்பது சிறிதுமின்றிப் அகமகிழ்ந்து தந்துதவுதல் போலக் கண்ணப்பனுரும் கடவுளுடைய கண்ணிற் புண்ணைக் கண்டு வருந்திப் பின் தம்கண்ணை இடந்து அப்பின் அந்நோய் தீரும் என்று தோன்றியபோதே, சிறிதும் தாழ்க்காது கண் போய்விடுகின்றதே என்றும் கலங்காது நோகும் என்று தயங்காது

அகமகிழ்ச்சியோடும் கண்ணை அம்பினால் அகழ்ந்து எடுத்து, அப்பினார். பின்னரும் மற்றொரு திருக்கண்ணில் நின்றும் புண்ணீர் ஒழுகி வழிந்த போது மிகுதியாய் நின்ற தமது இரண்டாம் கண்ணையும் அகழப்போயினார். அவ்வாறு அகழ்வது அவருக்குப் பெரியதோர் இன்பமாயது. அவர் செய்கின்ற வழிபாட்டினைச் சேக்கிழார் இளிவரற்சுவையேனும் நகைச்சுவையேனும் தோன்றக்கூறாது அக்கண்ணப்பரது பேரன்பால் நிகழ்ந்த வழிபாடு எனக் காடடிக்கொண்டே உவகைச் சுவைபடப் புனைந்துரைத்துள்ளார். ஆகவே அன்பர்கள் கூடியபொழுது எழுந்து விளங்கும் உவகைச்சுவையினையே சேக்கிழார் பாடிய கதையில் முற்ற முடிய யாம் உணர்ந்து துய்க்கின்றோம்.

## அன்பே அகம்.

**இன்ப அன்பு:—** இத்துணையும் கூறியதால் அன்பினை உவகைச் சுவைபடச் சேக்கிழார் செவ்வையாகப் புனைந்துரைக்கின்றார் என்பதாயிற்று. உவகைச் சுவையினை முன்னரே விரித்துரைத்தோம். இனி அன்பாவது என்னை ஒருவகையால் நோக்குமிடத்து உவகை அல்லது இன்பமே அன்பின் உருவமாகும். யாம் எவரிடத்து அன்பு பாராட்டுகின்றோமோ அவரை நோக்க அவ்வின்ப நிலை அன்பெனப் பெயர் பெறுகின்றது. எம்மை நோக்க அவ்வள்ள நிலையேல் இன்பெனப்பெயர் பெறுகின்றது. அன்பு, இன்பு, என்பவற்றிலுள்ள அகர இகரங்கள் அவன், இவன் என்பதிற்போலச் சுட்டெழுத்துக்கள் அல்ல; அல்லவாயினும் அவற்றிற்கு அச்சுட்டுப் பொருள்பட வேடிக்கையாக ஓர் உரை கூறலாம். அகரம் சேய்மை சுட்டாதலின் அன்பு என்பது தனக்கு புறத்தாரைப் பற்றியது எனலாம்; இகரம் அண்மைச் சுட்டாதலினாலும் தன்னினும் தனக்கு அண்மையில் உள்ளார் இல்லை ஆதலினாலும், தனது உள்ள நிலையைப்பற்றிய தெனலாம். உள்ளநிலை என்னமோ ஒன்றுதான். நோக்க வேறுபட்டால் வெவ்வேறு பெயர் பெறுகின்றது. ஆகவே இன்பமும் அன்பும் ஒன்றேதான். தெய்வச் சேக்கிழாரும் "முடிவிலா இன்பமான அன்பு" என்று இக்கதையிலேயே எழுதியுள்ளார். பின்னும் "இன்ப அன்பு" எனக் காரைக்கால் அம்மையார் வாயில் வைத்துக் கூறுவார்.

**அன்புச் சுவை:—** அன்பும் உவகையும் ஒன்றேயாயின் முன்செய்த சுவைஆராய்ச்சி ஒருவகையில் பயனுடையதேயாகும். சுவையாராய்ச்சி

அன்பாராய்ச்சிக்குப் பக்கத்துணையாகி நிற்பதுபற்றி அதனை முன்னர்ச் செய்ய வேண்டியதாயிற்று. தொல்காப்பியனாரும் பொருளாராயவந்தார் பின்னே மெய்ப்பாட்டியல் ஒன்று கூறவில்லையா? இனி அன்பினைச் சுவை யறிந்து ஆரத் துய்ப்போமாக.

**தமிழ் அன்பு:-** அன்பாராய்ச்சி, தமிழிற்கே உரியது. அன்பு என்ற அருந்தமிழ்ச் சொல்லை மொழிபெயர்க்கவே முடியாது. அது தமிழின் உயிர்நிலையாயதோர் அருமைத் திருமொழி. அன்பு என்ற சிறிய சொல் தமிழர் கண்ட உயரிய கொள்கைகளை எல்லாம் தன்னுள்ளே அடக்கிக் கொண்டு ஒளிர்கின்றது. அதன் உண்மைப் பொருளை உணர்ந்தார் இறையனாரும், ஆண்டாளும், வள்ளுவனாரும், மணிவாசகனாரும், நக்கீரரும், நம்மாழ்வாரும், அகத்தியனாரும், தொல்காப்பியனாரும் ஆகிய தெய்வப் புலவர்களே ஆவர். அவர்கள் விரித்துரைத்த அன்பினையே சேக்கிழாரும் வேறொரு வகையால் ஓவியம் எழுதிக் காட்டுகின்றார். அதனாலன்றோ அவரையும் தெய்வப் புலவர் என்பது.

சேக்கிழார் பெருமான் பாடியருளிய திருக்கண்ணப்பரது தெய்வத் தமிழ்க்கதை, அப்புலவர் பெருமானுக்கு முன்னர் என்ன என்ன வேறு பாடுகளோடு வழங்கிவந்ததென்பதனைச் சுவையாராய்ச்சியில் கண்டறிந் தோம். கண்ணப்பரது கதைக்கும் வாயிருந்தால் அதுவும், மணிவாச கரைப்போலப்

“ புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவரராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன். ”

என்று பாடி நிற்கும், கண்ணப்பர் கதையும், கல்லாயும் புல்லாயும் மரமாயும் மக்களாயும் புலவரிடத்தே மாறி மாறிப் பிறந்து கடைசியாகக் கடவுளாக மாறி நமது செல்வச் சேக்கிழாரின் திருவாய்மலரில் திருவவதாரம் செய்து திருவருட் பெருக்காக உலகில் உலவி வருவதனையும் முன்னர்க் கண் டோம். அங்ஙனமே, மற்றொன்றும் கண்டறிய வேண்டும். சேக்கிழார் தமது கடவுள் தன்மையால் கடைந்துவைத்த அன்புப்பிழம்பாகிய மணிவிளக்கு இவருக்கு முன்னர் எவ்வாறு எரிந்து வந்தது. இவர் புத்தம் புதிதாகச் செய்த வேலைப்பாடென்ன? அவ்விலையுயர்ந்த அரவின் மணியினை (மாணிக்கத்தினை) இவர் எவ்வாறு சாணைபிடித்துத் “ தக தக ” வெனக் கொழுந்து விட்டெரியச்செய்தார். எத்தனை பட்டை தீற்றி மின்னலைப்போல் மின்னிப் பொலியச் செய்தார்? இவற்றினை எல்லாம் அன்பு ஆராய்ச்சி

வழியாகச்சென்று கண்டறிதல் வேண்டும். அப்போதுதான் சேக்கிழார் பெருமானின் பெருமையும் புதுமையும் தெரியவரும்.

**அன்பும் பக்தியும்:—** அன்பு என்னும் அருஞ்சொல், தமிழ் என்ப தொன்றேயல்ல. கண்ணப்பர் கதையே தமிழ்க் கதை. கண்ணப்பர் பிறந்த வேடர்குடி பழந்தமிழ்க் குடியாகும். கண்ணப்பனுரைச் சேக்கிழாரும் செந்தமிழ்நாட்டுச் செல்வப்பிள்ளையாகவே சிறப்பித்துப் பேசுகின்றூர். கண்ணப்பனுர் கதை, ஓர் தமிழ்ப் பெருமகனுரது வரலாறு என்பதொன்றே யல்ல. கண்ணப்பரது அன்பே தமிழ் அன்பு. அவர் ஒழுக்கமே தனிப் பெருந் தமிழொழுக்கம். அவ்வன்போ "பக்தி" என்று பொதுவாக வழங்கி வருவதற்கு ஒருவகையில் முற்றும் முரண்பட்ட தெனலாம். சிவகோசரி யாரது பக்தி—கண்ணப்பனுரது அன்பு—இவ்விரண்டினையும் ஒத்து நோக்கின் இவற்றின் ஒற்றுமை வேற்றுமை இனிதின் விளங்கும்.

நாலுபேர் சென்றதால் நன்ருகத் தேய்ந்தவழியில் நடந்து செல்வது பக்தி. அன்பிற்கோ தேய்ந்த வழி யென்றும் பழகிய வழியென்றும் இல்லை. கண்டதெல்லாம் வழிதான். காடு மேடெல்லாம் தவிடு பொடிதான். காற்றில் பறப்பார்க்குக் காடென்ன? மேடென்ன? அன்பிற்கு வழியும் இல்லை வாய்க்காலும் இல்லை; அணையும் இல்லை; அளவும் இல்லை. அறிஞர்களும் அறிவு நூல்களும் இட்ட வேலிக்குள் இருந்து வாழ்வது முன்னது. பின்னதோ வானம்போல் வரம்பற்றது; வரையறையற்றது. அது கொழுகொம்பிற் படருங் கொடி; இது அடர்ந்து இருண்டதொரு பெருங்காடு. அது ஓர் சிறிய நீர்க்கால்வாய். இது கங்கு கரையற்றதொரு பெருங்கடல். சுருங்கச் சொல்லுமிடத்து அது கட்டுப் பட்டுக்குட்டுப்படுவது; இது எங்கேனும் இன்பத்துடன் எழுந்து பறப்பது. அன்போ அறிவு நூல்களின் எல்லைக் குட்பட்டதல்ல. எத்தனை முறை குட்டிக்கொள்வது, குந்திக்குந்தி எழுவது, சுற்றிச்சுற்றி வலம்வருவது, சோற்றை எவ்வண்ணம் குழைப்பது, நீரை எவ்வண்ணம் குடிப்பது, என்று இவற்றை யெல்லாம் ஆய்வது அன்பின் முறையல்ல. நூல்களும்அன்பின் எல்லையை வரையிட்டுக் கூறுவதில்லை. கடலுக்குக் கரையிட வல்லார் யார். அன்பு நிலையில் செய்யத்தகுவது இது என்றும் செய்யத்தகாதது இது என்றும் இயம்புதற்கில்லை. இவ்வாறிரு எனச் சிறையிடுவார் இல்லை. இதைச் செய்யாதே என விலங்கிடுவார் இல்லை. இதைச் சொல்லாதே என வாயை மூடுவாரும் இல்லை. உலைவாயை மூடலாம்; ஊர்வாயை மூடினுலும் மூடலாம். ஊழிக்காலத்து எரிமலையின் வாயை மூடவல்லார் யார்? காற்று மழையும் கலந்தடிக்கும் கடையூழிக்காலத்திலே கடல் பொங்கி வழியுமானுல் அதனை அணையிட்டு அடைத்துத் தடுப்பார் யார்? எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு புரண்டோடுகின்றது இவ்வன்பு. நூலோர் இட்டவேலியும், நாலுபேர் போன வழியும் வெள்ளக்காடாய் மறைந்தொழிகின்றன.

பொருட் பாகுபாடு:— இவ் அன்பாராய்ச்சியினைத் தமிழர்கள் பொருளாராய்ச்சியின்பாற் படுத்தினர். பொருளாவது நூல்கள் கூறும் கருத்துக்கள். நூல்கள் எடுத்துக்கூறும் பொருள்களை எல்லாம் அகம் புறம் என்ற இரண்டு பாகுபாட்டிலேயே அப்பழந்தமிழர்கள் அடக்கிவிட்டார்கள். அகம் என்றால் உள் என்பது பொருள். புறம்என்றால் வெளிஎன்பது பொருள். தானுணர்ந்த ஒழுக்கத்தினை இன்னொருவனுக்கு இவ்வாறிருந்ததென எடுத்துச் சொல்ல இயலாததாய் எப்பொழுதும் உள்ளத்துணர்வாலேயே துய்க்கப் படுவதாய் நின்ற ஒழுக்கத்தினைக் கூறுவது ஒருவகைப் பொருள். இஃது, உள்ளுக்குள்ளேயே கசிந்துகசிந்து உருகுவது; புறத்தாருக்குப் புலனாகாதது. உள்ளுக்குள்ளேயே உணரப்படுதலினாலே இதனை உள்ளொழுக்கம் என்றனர். அகஒழுக்கம் என்று பெயரிட்டனர். அகப்பொருள் என்று பாகுபடுத்தினர். அவ்வாறன்றி வெளியால் எல்லார்க்கும் விளங்கக் கூடியதாய், வெளியார்க்கு வெளியிடக்கூடியதாய் விரிந்து கிடப்பது வேறொன்று. வெளிக்குப் புலனாகி வெளியில் விளைதலால் இதனை வெளி ஒழுக்கம் என்றனர். புறவொழுக்கம் எனப் பெயரிட்டனர். புறப்பொருள்எனப் பாகுபடுத்தினர். காதலனும் காதலியும் கலந்து நுகரும் இன்பம் அகவொழுக்கமாகும். போர்புரிந்து புகழ்பெறுவதோ புற ஒழுக்கமாகும்.

அகமும் அன்பும்:— ஒத்த அன்பினர் துய்க்கும் இன்பம் ஒன்றினையே பழந்தமிழ் நூல்கள் அக ஒழுக்கம் எனச்சிறப்பித்து ஓதுகின்றன. எனினும் காதற் பாட்டுக்கள் எல்லாம் அகப்பாட்டுக்கள் ஆக மாட்டா. அன்பு என்று தமிழர் கூறுவது எங்கு உண்டோ அங்குதான் அகஒழுக்கம் உள்ளதாக அவ்வுயரிய தமிழர்கள் தமது உள்ளத்தால் கண்டு கொண்டனர். இன்னுமுள்ள இடங்களில் இணைபிரியாத காதல் இருப்பினும் அதனைப் புறமென்றும் அகப்புறம் என்றும் கொண்டு, முல்லைப் பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை எனப் பாகுபடுத்தி அன்பினைந் திணை என்னும் அகஒழுக்கத்தின் நின்றும் வேறு பிரித்தனர். ஆகவே, காதல் பாட்டுக்களை எல்லாம் அகத்திணை என்று அத்தமிழர்கள் அருமை பாராட்டியதாகக் கொள்ளுதல்கூடாது. அவர்கள் அனைவரும் காதலால் கண்மூடிய கடையர்கள் என்று கருதிவிடுதலும் ஆகாது.

காதற்பாட்டோ:— பொய்யடிமையில்லாத புலவர்கள் என்று போற்றப்பட்ட சங்கப்புலவர்கள்பாடிய நூல்கள் பல, அகப்பொருள் பற்றியவாய் விளங்குவதனை நாம் நுணுகிஆராய்தல்வேண்டும். அகநானூறு நற்றிணைநானூறு, குறுந்தொகை, கலித்தொகை, ஐங்குறுநூறு, பரிபாடல் என்ற தொகை நூல்கள் எல்லாம் அகப்பொருள்தானே. பதினெண் கீழ்க்கணக்கிலும் பலநூல்கள் அகப்பாட்டாய் அமைந்தவைதானே. ஐந்திணை என்ற ஐந்திணை ஐம்பதும், திணை எழுபதும், திணைமாலை நூற்று

ஐம்பதும் திணைமொழி ஐம்பதும், இன்னிலையும், திருக்குறளோடு ஒன்றாக வைத்து எண்ணப்பெற்றன அன்றோ? திருவள்ளுவனாரும் காமத்துப் பாலில் இவ்வக ஒழுக்கத்தினைத்தானே எடுத்துப் பேசுகின்றார். காதல் என்பதைக் கனவிலுங் கருதாத அறவண அடிகளும், தமதுநாலடியாரைத் துறவுமுதலாகப் பாடத் தொடங்கிக் கடைசியில் காமத்துப்பாலைக் கூறித் தானே முடிவு கட்டினார்கள். திருவாதவூரடிகளது திருக்கோவையும் நம்மாழ்வாரது திருவாய்மொழியும் அகப்பொருள் நிரம்பிய கோவைகள் அன்றோ? இன்னும் இறையனார் அகப்பொருள் என்பது ஏன்எழுந்ததென எண்ணிப்பார்த்தல் வேண்டும். முன்னொரு காலத்திலே பாண்டியன் ஒருவன் அஃதஃதில் சிறந்த அறிஞர்கள் பலரையும் தன்னூரில் குடியேறி வாழ வரவழைத்தான். எல்லோரும் வந்தனர். ஆனால் எங்கேபோய்த் தேடினாலும் பொருளறிந்த புலவர்களைக் காணக் கூடவில்லை. அரசன் அழுதுபுரண்டான். ஆண்டவனை வேண்டினான். அரசனது துயரம் அறிவின் பால தாதலினாலே இறைவன் தானே தன் கைப்பட ஓர் அகப்பொருள் எழுதியருளினான். அரசன் அழுவானேன்? இறைவன் இரங்கி அருளு வானேன்? இறையனார் அகப்பொருளை எழுதுவானேன்? இக்கதை உண்மையாய் உலவினும் உலவுக; பொய்யேயாய்ப் போயினும் போக. அகப்பொருள் ஆராய்ச்சி அருமையானதென இறைவனும் எண்ணத் தகுந்தது என்பதனை இக்கதை விளக்குகின்றது. இத்துணை உயர்வாக எண்ணப்பட்ட அகப்பாட்டு வெறுங் காதற்கதையாகுமா? இப்பெரியோர் களும் இவர்களது இறைவனும், காதற்பாட்டுப் பாடிக் கண்மூடிக் கொள்ளுவார்களா? இவ் வுலகிற்கு வழிகாட்டிகள் இவர்களே அன்றோ? இவ்வாறானால் இவர்கள் ஏன் இக்காதற்பாடல்களை இங்ஙனம் பாடி யுள்ளார்கள்? அன்பு என்பதன் பொருளினை உணர்வோமானால் இந்த உளவும் தெரியவரும்; இப்பாடல்களை இப்பெரியோர்கள் இந்த உலகத் திற்கு ஒரு எளிய வழியைக் காட்டவேண்டி இயற்றி அருளினார்கள் என்பதும் இனிது விளங்கும்.

அன்பே தமிழர்கண்ட உண்மை என்றோம். மற்றொன்று விரித்து இதனை விளக்கவேண்டி யிருக்கின்றது.

## அன்பே இன்பம்

**உலகம் துன்பம்:-** உலகத்தைச் சுற்றி முற்றிலும் உற்றுப்பார்த்தால் என்ன காண்கின்றோம் "பிறந்தோருறுவது பெருகிய துன்பம்" என் கின்றார் சீத்தலைச் சாத்தனார். பிறந்ததுமுதல் இறப்பது வரையும் துன்பம் நம்மைவிட்டுப் பிரிந்துபோவதில்லை. உடலை எல்லாம் முறுக்கிவளைத்துக்

கையிலும் காலிலும் விலங்குபூட்டிக் குண்டுகட்டாய்க்கட்டி இருட் குகையில் எறியப்பட்டாற்போலத் தாய்வயிற்றிலே கட்டுண்டு சிறைப் பட்டுத் தாயின் வயிற்றுத் தீயிலே வெந்து புழுங்குகிறோம். பின்னர், நெருக்குண்டு வெளித் தள்ளப்பட்டபோது படும் பாடுதான் என்னே! என்னே! உள்ளிருந்த சூட்டிற்கும் வெளியிலிருக்கும் குளிருக்கும் எவ்வளவு வேற்றுமை இருக்கின்றது. இந்தக் குளிரில் வாடி வதங்கிப் பின்னர்ச் சிறிதுசிறிதாகப் பழகி வளர்கையில் ஏதொன்றும் செய்ய இயலாது மண்ணுங்கட்டிபோல விழுந்துகிடந்து எடுப்பார் கைப் பிள்ளையாகப் பிறர் அருளாலே உலகில் வாழ்ந்து வருகின்றோம். அறிவு வளரவளரக் கண்ட கண்ட பொருள்களின்மேலெல்லாம் எண்ணம் ஓடு கின்றது. அது வேண்டும் இதுவேண்டும் என்று அழுது புலம்புகிறோம். பின்னர்ப் பள்ளிக்கூடத்துக்குப் போய் "வாத்தியார் சாவாரா என் வயிற் றெரிச்சல் தீராதா" என்று குந்திக் குந்தி அழுகின்றோம். காதலால் கரைந் துருகிக் கனவிலுங்கூட உடலும் உள்ளமும் உயிரும் ஒருங்கே வெம்பி வெதும்பித் துடிதுடித்துப் புழுங்குகின்றோம். மக்களைப்பெற்று வளர்ப்பதோ மலையைச் சுமந்து திரிவதாய் முடிகின்றது. பாழும் இவ்வயிற்றை வளர்க்க வேண்டிப் பலரிடமுஞ் சென்று பல்லெல்லாம் தெரியக்காட்டிப் பத்துப்பணம் பெறுவதும் பட்டினி கிடப்பதும் சொல்லத் தரமல்ல. ஊர் வம்பளந்து உற்றாரோடும் உறவினரோடும் ஒன்றாகக் கலந்து வாழும் உலகவாழ்க்கையில் வரும்படியான மனக்கசப்பே முடிவில் கொடிய நஞ்சாய் நம்மைக் கொல்லவும் செய்கின்றது. நோய்களுக்குப் பெருந் தாயகமாகிய நமது உடலமானது நாம் சென்றசென்ற இடத்திற்கெல்லாம் கூடக்கூட வந்து நம்மை வாட்டுவதையும் சுடுகாட்டிற் கோட்டுவதையும் சொல்லவும் வேண்டுமோ?

எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய் புன்குரம்பை
உலகத்தினர் அந்தோ என் செய்வர்.
உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந்தெண்ணுவன-கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான்.

இனி, இறப்பதனை எண்ணி என்ன சொல்லுவோம்? சிவனேயாய திருவாதவூரரே "யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்." என்று புலம்புவாரானால் ஒன்றுமறியா யாம் என்ன பாடுபடுவோம். இதனாலன்றோ திருவள்ளுவனாரும் "சாதலின் இன்னாதது இல்லை" என்பா ராயினர்.

**இன்ப நாட்டம்:-** உலகம் துன்பமே ஓர் உருவானது, எனவே எல்லோரும் இன்பத்தையே நாடவேண்டியதாயிற்று.

"இன்னு தம்மஇவ் வுலகம்
இனிய காண்க இதன் இயல் புணர்ந்தோரே"

என்றூர் பக்குடுக்கை நன்கணியார். அப்போது பிறந்த குழவியும் சுவைக்க இனிக்கும் தாய்ப்பாலுண்டு தன்னை மறந்து விடுகின்றது. தலையானது வெளியில் வந்திருக்க உடலானது உள்ளே அகப்பட்டு நெருக்குண்டு பிறந்ததும் பிறவாததுமாய்க் கிடக்கும் அச்சிறு குழவிகூட யாரேனும் அதன் வாயில் விரலையிட்டால் அதனைச் சுவைத்துக்கொண்டே தான் படும் அல்லலை மறக்கின்றதென மருத்துவர் கூறுகின்றனர். சிறுவர் தானு? பெரியோரும் அப்படித்தான். நமது தொழில்கள் எல்லாம் இன்பத்தை நாடித் தோன்றுவனவே. எல்லோரும் அறிந்த பழங்கதை யொன்று இப்போது எமது நினைவிற்கு வருகின்றது. ஒரு குடியானவன் தன் வீட்டினில் தாய் தந்தையரை விட்டுவிட்டுத் தன் மனைவி மக்களை அழைத்துவர மாமியார் வீட்டிற்குப் புறப்பட்டுப் போயினுன். இடையில் வழிதப்பிப் போகவே இருண்டதொருபெருங்காட்டில் சிக்கிக்கொண்டான் அடர்ந்த அக்காட்டில் ஆனை ஒன்று அவனைத் துரத்திவந்தது. அவனே தன் உயிரை இரண்டுகையிலும் சேரப் பிடித்துக்கொண்டு ஓடோடியும் போயினுன். அச்சத்தால் தன்னைமறந்து, தரையோடு தரையாய் இருந்த பாழுங்கிணற்றில் காலிடறி விழுந்தான். பக்கத்திலிருந்த பழையதோர் ஆலமரத்தின் வேரானது அவ்வாறு விழுந்தவன் கைக்குத் தட்டுப்பட்டது. அதனைப் பிடித்து ஊசலாடிக்கொண்டிருக்கையில் ஓர் எலி அந்த வேரை யும் கல்லத் தொடங்கியது. கிணற்றுக்குள் குதிப்பது என்றுலோ கீழே ஒரு மலைப்பாம்பு வாயைத்திறந்து வைத்துக்கொண்டு அவனைப்பிடித்து விழுங்க எட்டிப்பார்த்து எக்கிஎக்கின்றது. ஊரைவிட்டான் வாயிலே விட்டான். தாயும் தந்தையும் ஓர் ஊரில் இருந்தனர்; மனைவி மக்கள் மற்றோர் ஊரில் இருந்தனர். இடையே இடர்ப்படுகின்றுன். இவர்கள் எல்லோரையும் பிரிந்து இன்னுரை நினைந்து மனம் இங்கும் அங்கும் ஊசலாடத் தனிவழியில் தன்னந்தனியே தயங்கி நின்றுன். மேலோ காட்டுயானை; கீழோ மலைப்பாம்பு. இடையே இடிசுவரில் எலி கல்லு கின்ற சிறியவேரில் இவன் உயிர் ஊசலாடுகின்றது. ஐயோ என்று அலறி அண்ணுந்து பார்த்தான். அவ்வாலமரத்தின் உச்சியிற் கட்டி யிருந்த தேன் கூட்டினின்று தேன் சொட்டிற்று. தேனீ ஒன்றும் நாக்கில் வீழ்ந்து வெடுக்கெனக் கொட்டிற்று கொட்டுவதையும் பாராது அந்தச் சிறிய தேன்துளியினைச் சுவைத்துச் சுவைத்து உண்டானும். உயிரிழக்கும் அந்நிலையிலும் ஒரு துளித் தேனில் உலகை மறப்பானுனல் இவன் உள்ளத்தில் இன்பப்பற்று எவ்வளவு உறைந்து தடிப்பேறிப்போய் இருத் தல் வேண்டும். மக்களைப் பற்றிப் பேசுவானேன்? விட்டில்களும் விலங்கு களும் மீன்களும் பேன்களும் கூடவல்லவா இன்பமே நாட்டமாய் இருக் கின்றன. விட்டில்கள் பழமென மயங்கி விளக்கில் விழுந்து பொசுங் குவதும், தீனிக்கலைந்து சிறிய புழுக்களுக்காக வாயை ஆவெனப்

பிளந்துகொண்டு, பின்னர்த் தூண்டில் முள் மாட்டிக்கொள்ள மீன்கள் தொண்டைவிக்கிச் சாவதும் சிறிதளவு இன்பத்தை நாடியல்லவா! இன்பம் துய்க்க வேண்டி அவைகள் யான் முந்தி நீ முந்தி என்று ஓடோடியும் வருகின்ற பரபரப்பு என்னே! என்னே! மயிரிழையினும் நுண்ணிதாகிய புழுக்களும் ஒன்றையொன்றுண்டு உயிர்பிழைத்து இன்பமுறுகின்றன. புல் பூண்டுகளும் மரங்கொடிகளும் நஞ்சுபாய மனம் பதை பதைத்துச் சோர்வடைந்து சுருண்டு வீழ்வதனையும் நல்லன உள்ளே ஊறியதும் உவகை பூத்து நகைப்பன போலத் தளிர்த்துத் தழைப்பதனையும் ஜகதீச சந்திரபோஸ் என்பார் எடுத்து விளக்கவில்லையா ? உயிரில்லாதனகூட வருந்தி உழைக்க ஒருப்படுவதில்லை எனலாம். நீர் பள்ளத்தில் பாய் கின்றதா? மேடேறி ஓடுகின்றதா? கல்லை எதிரே கண்டால் வருத்தமின்றி அப்புறம் ஒதுங்கிச் செல்கின்றதா? அதனை முட்டித் தாக்கி உடைத்தெறிந்து ஊடுருவிச் செல்கின்றதா? பல பல பாரிப்பானேன். துன்ப நீக்கமும் இன்ப சூக்கமுமே எல்லாப் பொருள்களும் எல்லா உயிர்களும் எல்லாக் காலத்தும், எல்லா இடத்தும் வேண்டுகின்றன.

**இன்பவழி:-** இனி, இவ்வின்பத்தை எங்ஙனம் அடைவதென்பதே எல்லா அறிஞர்களும் உலகம் தோன்றிய அந்நாள் தொடங்கி இந்நாள் வரையும் ஆராய்ந்து நிற்பது. ஆறிலும் சாவு நூறிலுஞ் சாவு. ஏன் துன்பத்தில் அழுந்திப் புழுங்கவேண்டும். பல நாள் துன்பம் ஒருநாளில் ஒழிவதனல் இன்றே பட்டினி கிடந்து இறந்துவிடுவதே இன்பவழி என்றனர் சிலர். இறந்தாலேனும் இன்பம் பெறலாம் என்பது என்ன உறுதி? துன்பம் உலக இயல்பானுல் உலகில் உள்ள துன்பம் பெருகாத படி இருப்பதற்காகப் பிறர்க்கு நம் வாயிலாக அணுவளவும் துன்பம் தோன்ருதபடிக் காத்து நம்மாலியன்ற உதவியும் செய்து நாம் இன்பத்தைப் பரப்புவோம் என்றனர் இன்னும் சிலர். நம்மாலாவதென்ன? "நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கின்றது" என்றனர் பலர். இவற்றை எல்லாம் முற்ற முடிய எழுதிப்போக இதுவல்ல இடம். பலரும் பலவற்றை இன்பவழியாகக் கூறுவதை மீனுக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் விரித்துரைத்து அவற்றின் வேருய அன்பு வழியைக் காட்டி யருளிய சேக்கிழார் பெருமானைப்புகழ்கின்ருர்,

"நீடும்இன்பு அரிவையர் புணர்ப்பு என்மரும்; ஐந்து
நிகழ்கந்தமும் கெடுதலே
நிலவும் இன்பு என்மரும்; குணம் மூன்றும் ஒழிதலே
நிரம்பலுறும் இன்பு என்மரும்;
நாடும்இன்பு இருவினைக்கேடு என்மரும்; மலம்
நசித்தலே இன்பு என்மரும் ;
நவில் விக்கிரகம் நித்தம்இன்பு என்மரும் ; தோன்றும்

ஞானமே இன்பு என்மரும்;
பாடும்இன்பு உயிர்கெடுதல் என்மரும்; பகுதிமேல்
கெடுதலே இன்பு என்மரும்;
பாடுசித்தி யின்பு என்மரும் ; பிறரும் வாதம்
படர்ந்து வருதிறன் அற,வளங்
கூடுசெந்தமிழ் அருமை அறிபெருஞ் சேவையார்
குலசிகாமணி வருகவே;
கொன்றைச் சடாடவியா மன்றைப்
பராவிஎழு குன்றைப் பிரான் வருகவே.''

**அவாவே துன்பம்:-** இவ்வாறு முரண்பட்டு முட்டிக் கொள்வோர் அனைவரும் முதல் முதலாகத் துன்பத்திற்குத் தொடக்கம் எங்கே என்றுதான் ஆராய்கின்றனர். அவா என்பதே ''தவாஅப் பிறப்பீனும் வித்து'' என்பதனையும் எல்லோரும் ஒப்புக்கொண்டனர். நம் வாழ்க்கைதான் என்ன? பல தொழில்களேயாகும். தொழிலின் தோற்றுவாய் என்ன? அறிவம்மை (ஞானசக்தி)யின் அருளால் உலகத்துப்பொருள் ஒவ்வொன்றையும் அறிந்து, விருப்பம்மை (இச்சாசக்தி) பரப்பிவைத்த வலையில் சிக்கிக்கொண்டு தொழிலம்மை (க்ரியா சக்தி)யின் அடியாய்த் தொழில் பல செய்து துன்புறுகின்றோம். இதுவே தொழிலின் வரன்முறை. இது வேண்டும் அதுவேண்டும் என்று அலைந்து திரிந்தே துன்பத்தில் ஆழ்கின்றோம்.

**விடாயும் அபாவும்.-** மக்களாய்ப் பிறந்தமையால் அறிவு வளரப் பெற்றோம். ஆனால் அதற்கேற்பத் துன்பத்திலும் ஆழப்பெற்றோம். விலங்குகளுக்குப் பசி எடுத்தால் தீனி தின்னும் வேட்கையும் நெஞ்சுலர்ந்தால் நீர் பருகும் வேட்கையும் எழுகின்றன. கண்டதை உண்டு தணித்துக் கொண்டு, அன்றைய பொழுதைக் கழிக்கின்றன. அனைத்தையும் அன்றே மறந்து விடுகின்றன. கழிந்த தன் நினைவும் வருவதன் எண்ணமும் அவற்றிற்கு அணுவளவும் இல்லை. நாளைக்கு வேண்டுமே என்று ''பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைக்கும்'' வழக்கம் அவற்றினிடத்தில் இல்லை. நேற்றுண்ட மாங்கனி இனித்து இருந்ததால் இன்றும் வேண்டுமென்று அதே ஏக்கமாய்த் திரிந்து பின், அது வேண்டி ஊக்கமாய் உழைத்தலும் அவற்றின் வாழ்க்கை யல்ல. விடாய் ஒன்றே அவற்றிற்கு உண்டு. **உணவு, நீர், காற்று** முதலிய இன்றியமையாத பொருள்களின் மேற் செல்லும் பற்றுள்ளத்தினை **விடாய்** என்று பெயரிட்டு இங்கு வழங்குவோமாக. இன்றியமையாத அப்பொருள்கள் அகப்படா விட்டால் இறந்துபட வேண்டுவதுதான். அகப்பட்டால் **ஆறுதல்** அடைகின்றன. ஆனால் மக்களுக்கோ விடாய் என்பதொன்றேயன்றிக் கண்டகண்ட பொருள்கள்மேல் எல்லாம் செல்லும் பற்றுள்ளமும் உளதாகின்றது. இன்றியமையாதன என்று எவ்வகையாலும் சொல்லத்

தகாதன எல்லாம் இன்றியமையாதனவாக இவர்கள் கண்ணிற்குப் புலனாகின்றன. அவைகளைப்பற்றிய எண்ணங்களும் விடாயாய் முடி கின்றன. விடாயாய் இவர்கள் தலையில் விடிந்தாலும் அவா என்றே அவற்றை அழைத்தல் வேண்டும். தின்றதும் கழித்துவிடும் பொருள் களைத்தான் விலங்குகள் வேண்டுகின்றன. மனைவி மக்கள் என்பன எல்லாம் பலவிலங்குகளுக்கு நிலையாக இருப்பன அல்ல. மக்களிடத்தோ ஒவ்வோர் அவாவும் பற்றுய்முற்றி அவர்கள் அப்பொருளை விட்டு வெளிப் போகாத வண்ணம் மயக்கி விடுகின்றது. மனைவி மக்களை விட்டோடுவது ஒருபுறம் இருக்கட்டும். பிறந்த ஊரைவிட்டுப் பெயர விரும்புவார் யார்? அவ்வகையால் எல்லாம் விளங்கினும் உயர்ந்த அறிவுபெற்ற மக்கள் இவ்வகையால் எல்லாம் தாம் பெற்ற அறிவிற்கு அளவிலாக் கப்பம்கட்ட வேண்டி இருக்கின்றது. அவா இல்லையாயின் தொழிலும் இல்லை; துன்பமும் இல்லை.

**துன்ப ஏணி:-** விடாய் என்பது இன்றியமையாப் பொருள்களின் மேல் செல்லும் உள்ள நிலை. நீர்விடாய்போல நீக்க அரிதாய் இருத்தலின் இவற்றிற்கெல்லாம் இப்பெயர் பொருத்த முடையதே யாகும். மக்க ளுக்கு நேற்றுண்ட பொருள்களின்மேல் எல்லாம் இன்று உள்ளம் பாய் கின்றது. முன்னுண்ட முப்பழம் இனித்தது எமது உள்ளத்தில் பதிந்து கிடக்கின்றது. பின்னர் அம்முப்பழத்தைப் பார்ப்பதனாலோ, அதன் பெயரைப் பிறர் கூறக் கேட்பதனாலோ அப்பழைய உணர்ச்சி நினைவிற்கு வருகின்றது. இதனை நினைதல் என்பர். "நினைதல் என்பது விருப்புற்று நினைத்தல்; நின்னை மிகவும் நினைத்தேன் என்பது வழக்காதலின்." இதனையே அவா என்பர் பரிமேலழகர். "புலன்கண்மேற் பழைய பயிற்சி வயத்தான் நினைவு செல்லுமன்றே?.........அதனை.........அறுத்தல்" என அவாவறுத்தல் என்ற தொடர்க்குப் பொருள் கூறுதல் காண்க. அவாவின் உருவினைக் காட்டுவார் "எனக்கிதுவேண்டும் என்னும்அவா" என்று விளக் கினார். இதனினும்ஆசைவேறெனக்கூறுவார்'அது(அவா)பற்றிஅப்பொருட் கண் செல்லுமாசை" என்பார். இவ்வவாவிற்குப் பிறரெல்லாம் வேறு பொருள் கொள்வதால் "நினைதல்" என்பதையே நாம் கைக்கொள் வோம். இது தோன்றிய உடனே அழியினும் அழியும். முற்றினும் முற்றும். அவ்வாறு விரும்பி நினைத்த பொருள்களின்மேல் செல்லும் பற்றுள்ளத்தினை ஆர்வம் என்றும் கூறுவர்; வேட்கை என்றும் கூறுவர். நச்சினார்க்கினியர் வேட்கை என்பதற்கு "செய்யுண் மருங்கின் வேட்கை" என்ற இடத் திலும் "ஒப்புமுருவும்" என்ற இடத்தும் "வேட்கையாவது பொருள்கள் மேல் தோன்றும் பற்றுள்ளம்" என்று பொருள் கொண்டார். அவரே "அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி" என்ற இடத்தில் ஆர்வம் என்பதற்குத் "தம் நெஞ்சு கருதின பொருள்கள்மேல் தோன்றின பற்றுள்ளம்" என்று பொருள் கூறுவர். அந்நிலையில் உள்ளமானது

கருதிய பொருளின்மேல் பொருந்திநின்று இடையறாது நினைப்பதால் ஆர்வம் என்றனர். அப்பொருளை இன்றியமையாது வேண்டுதலின் அந்நிலையை வேட்கை என்றனர். ஆர்வம் வேட்கை என்பவை முன்னும் பின்னுமாகிய நிலைமைகள் என்றாலும் அமையும். வேட்கையால் உண்டாகுவது அவா, என்பர் நச்சினார்க்கினியர். ''அவாவாவது அப்பொருள்களைப் பெறவேண்டும் என்று மேல்மேல் நிகழும் ஆசை'' என்று ''செய்யுண் மருங்கின்'' என்ற இடத்தில் விரித்துரைத்தார். நினைவு விருப்பாய் முற்றித் தொழிலாய்ப் பழுக்கின்ற நிலையையே இவர் அவா என்கின்றார். ஒருவன் அந்நிலையில் அவா நிலையில் இருக்கின்றான்; விரும்பிய பொருள் இன்றியமையாததாகின்றது. எவ்வாறேனும் பொருளை அடைய வேண்டுகின்றான். அஃதின்றி உயிர்வாழ முடியாதென்று ஏக்கம் கொள்கின்றான். தூக்கமும் கொள்ளான். உணவுபோல் இன்றியமையாதென அந்த அவா எனும் பேய் அவனை மருட்டிப் பிடித்து ஆட்டுகின்றது. விடாய்போல் ஆய்விடுகின்றது. பற்றாய் முற்றுகின்றது. வயாவாய்ப் பழுக்கின்றது. அதனைப் பெறவேண்டி அல்லும் பகலும் அறுபது நாழிகையும் உண்ணாதும் உறங்காதும் உழல்கின்றான். தொழில் எனும் சுழலில் அழுந்திச் சுழல்கின்றான். உழைப்பே பிழைப்பாய் உலர்ந்து எரிகின்றான். வேண்டியதுபெறின் களிப்படைகின்றான். பெறுவிடில் நெட்டுயிர்ப் பெறிந்து அவலக் கவலைக் கையாறெய்தி அழிகின்றான். உயிர்ப்பென்பது வேண்டிய பொருளைப் பெறுதவழிக் கையறவெய்திய கருத்து. அவலமாவது தம் மெண்ணம் நிறைவேறாததால் நெஞ்சிற்றோன்றும் வருத்தம். வயாவாவது அவாவே நோயாகிய நிலை. கருவுற்று இருப்போர் கண்ட பொருளைக் கருதிக் கை கால் வீங்கிப்போதல் காண்க. கையாறென்பது ''அவ்வுயிர்ப்புமின்றி வினை ஒழிந்தயர்தல்.'' பொருளின் நுகர்ச்சி-நுகர்ச்சியின் உணர்ச்சி (மனதில்) மற்றதன்பதிவு - நினைதல் - ஆர்வம் - வேட்கை - அவா - விடாய் - வயா - கவலை - அவலம் - உயிர்ப்பு - நெட்டுயிர்ப்பு - கையாறு - இதுவே துன்பத்தின் வரன்முறை. எல்லோரும் இவ்வுள்ள நிலைகளை இப்பெயர் கொண்டே வழங்குவதில்லை. பரிமேலழகியார் வேறு வகையாகப் பெயரிட்டு வழங்குவதை முன்னரே கண்டோம். சேக்கிழாரும்.

முன்பு செய்தவத்தின்ஈட்டம் முடிவிலாஇன்பமான
அன்பினை எடுத்துக்காட்ட அளவிலா ஆர்வம்பொங்கி
மன்பெருங் காதல்கூர வள்ளலார் மலையைநோக்கி
என்புநெக்குருகி யுள்ளத் தெழுபெரு வேட்கை யோடும்

என்ற இடத்து ''நினைதலை'' ஆர்வம் என்றும், ''ஆர்வத்தை''க் காதல் என்றும், ''அவாவினை''ப் பெருவேட்கை என்றும் ஆண்டிருத்தல் குறித்து வைக்கத் தக்கதாம். இதுநிற்க. எண்ணிய தெல்லாம் நிறைவேறப் பெற்றவன் இவ்வுலகில் ஒருவனும் இல்லை. அதனால் துன்ப மில்லாதவனும் ஒருவனும் இல்லை.

இன்ப வழி அன்பே ;—இனி இவ்வவா எனும் எரிவாய் நிரயத்தின் நின்றும் தப்பிப் பிழைப்பது எங்ஙனம்? அவாவினை அடியோடு விடுவது என்றால் தொழில் ஒன்றும் நடவாது. உலகம் நடைபெறாது. தமிழர் கண்ட உண்மை என்ன என்றால் அவாவினை அன்பாக மாற்றி அமைக்க வேண்டுமென்பதே. விலங்குகளுக்கு விடாய் ஒன்றே உண்டு. நேற்று நாளை என்று அறிந்த மக்களுக்கு அவ்விடாய் அவாவாக மாறி அவர்களது அறிவின் பெருமையைக் காட்டுகின்றது. கண்டதைத் தின்பவன் காட்டாளாம். வாய்க்குணவாக வயணமாக உண்பவர்கள் மக்களாம். நினைவு என்பது இல்லையாயின் முன்னர்க் கண்டு துய்த்த பொருள்களின்மேல் உள்ளம் பாய்வதில்லை; அவாவும் அரும்புவ தில்லை. விலங்குகளுக்கும் முன்னினைவு சிறிது உண்டு. தென்னாலி இராமனின் பூனை, கொதிக்கும் பாலையுண்டு நாக்கு வேவப் பெற்றுப் பின் பாலைக்கண்டதும் வெருண் டோடிய கதை இதனை வற்புறுத்தும். ஆனால் மக்களுக்கு உள்ள அளவு விலங்குகளுக்கு இல்லை என்பது எல்லோர்க்கும் ஒப்ப முடிந்ததாம். அதனால்தான் அவா என்பது மக்களது சிறப்பியல்பாக இராநின்றது. மக்களிற் சிறந்து, உலகை நீத்தபெரியோராய், உரனென்னும் தோட்டியான் ஓரைந்துங் காத்துக் குணமென்னும் குன்றேறி நின்ற நிறைமொழி மாந்தர் இவ்வவாவினை அன்பாக மாற்றி அந்தணர் எனப் பெயர் பெறுவர். பிறப்பிற் பெரியவர் எனப் பேசிக்கொள்வோர் அந்தணர் அல்லர். அன்புருவானவர்களே அந்தணர் என்றார் திருவள்ளுவனார்.

> "அந்தணர் என்பவர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டு ஒழுகலான்"

இவ்வறவோர் மக்களிலே கடவுள் தன்மை பெற்றோர் ஆவர். எனவே விலங்குகளுக்கு விடாயும், மக்களுக்கு அவாவும், அந்தணர்களுக்கு அன்பும் சிறப்பியல்புகளாம். விலங்குகள் விடாய் தணிந்தால் ஆறுதலையும், மக்களாயினர் அவா நிறைவேறினால் கள்ளுண்டாரைப்போலக் களிப்பினையும், அந்தணர் அன்பு நிரம்பினால் இன்பத்தினையும் அடைகின்றார்கள். ஆகவே அன்பு உள்ள இடத்தில்தான் இன்பந் தோற்ற இடமுண்டு.

உ

குருபாதம்

தருமபுர ஆதீனம்

# ஆவணிமூலத் திருநாள்

நினைவு மலர்

மன்மத ஆண்டு ஆவணித்திங்கள் கஉ-ம் நாள்